விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 13 வியாழக்கிழமை (27.06.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 190

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
54 ஆண்டுகள் தரத்தில் முதன்மையான சீமெந்து

# இலங்கை பௌத்த நாடு;
## பொது பல சேனா பொலிஸாக மாறும்
## ஞானசார தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

இது சிங்கள பௌத்த நாடு. இங்கு பெரும்பான்மையாக உள்ள பௌத்த மத மக்களின் உரிமைகளை சீர்குலைக்கும் வேற்று மத அமைப்புக்கள் தொடர்பில் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். எடுக்காவிடின் உத்தியோகபூர்வமற்ற பொலிஸாக பொது பல சேனா செயற்படவேண்டியேற்படும் என்று அந்த அமைப்பின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார். (20ஆம் பக்கம் பார்க்க)

## 'தமிழினி விடுதலை'



(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பின் மகளிர் அரசியல் துறை பொறுப்பாளராக இருந்த தமிழினி நேற்று காலை வவுனியா பூந்தோட்டம் புனர்வாழ்வுப் பயிற்சி மையத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் தர்சன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இறுதியுத்தத்தின் பின்னர் வன்னியில் இருந்து மனிக்பாம் இடைத் தங்கல் முகாமில் தனது குடும்பத்தினருடன் தங்கி (20ஆம் பக்கம் பார்க்க)

## 13-ல் இரண்டு ஏற்பாடுகள் இரத்து

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தின் இரண்டு ஏற்பாடுகளை இரத்து செய்ய வேண்டும் என்ற உத்தியோகபூர்வ தீர்மானத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி நேற்று புதன்கிழமை எடுத்துள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஸ்ரீலங்கா சுந்திரக்கட்சியின் அமைச்சர்கள், பிரதியமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இந்த விவகாரத்தில் ஒரு பொது நிலைப்பாட்டை எடுத்துள்ளது.

இதன்பிரகாரம் 13ஆவது திருத்தத்தில் இரண்டு ஏற்பாடுகள் (20ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தான் படைத்தளபதி இன்று கொழும்பு விஜயம்

(கொழும்பு)

பாகிஸ்தான் படைத்தளபதி ஜெனரல் அஸ்பக் பர்வேஸ் கயானி இன்று கொழும்பு விஜயம் செய்யவுள்ளார்.

இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான படைத்துறை சார்ந்த ஒத்துழைப்புகளை மேலும் விரிவுபடுத்திக் கொள்ளும் நோக்குடனேயே அவரின் இவ்விஜயம் அமைகின்றது.

கொழும்பில் மூன்று நாட்கள் தங்கியிருக்கவுள்ள ஜெனரல் அஸ்பக் பர்வேஸ் கயானி இலங்கைப் படைத் தரப்பின் மூத்த படை அதி காரி களைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார்.

குறிப்பாக பாதுகாப்புச் செயளாலர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்து இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான படைத்துறை சார்ந்த நிபுணத்துவ நலன்கள் குறித்து இவர் பேச்சுவார்த்தை நடத்திவுள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரால்

## மீன்பிடி இறங்குதுறை திறப்பு; அரச அதிகாரிகள் புறக்கணிப்பு

(யாழ்ப்பாணம்)

456 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர் செலவில் புனரமைக்கப்பட்ட பாசையூர் மீன்பிடி இறங்கு துறை நேற்றையதினம் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் திருமதி றொபின் மூடியினால் திறந்து வைக்கப்பட் டுள்ளது.

இத்திறப்பு விழா வைபவம் அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரச அதிபர் அரச திணைக்கள அதிகாரிகள் யாரும் கலந்து கொள்ளாத நிலையிலேயே நடைபெற்றுள்ளது.

பாசையூரில் ஐ.ஓ.எம். நிறுவனத்தினால் அவுஸ்திரேலிய சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் அமைப்பின் நிதியுதவியுடனும் இலங்கை (20ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தைப் பிரிக்க சந்திரிகா முயற்சி

அமைச்சர் விமல் குற்றச்சாட்டு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி சந் திரிகா பண்டாரநாயக்க ஸ்ரீலங்கா சுதந் திரக்கட்சியையும் தற்போதைய அரசையும் இரண்டாக பிரிப்பதற்கும் 13ஆவது திருத்தத்தை துரும்பாகக் கொண்டு அரசில் உள்ள சில அமைச்சர்களை தூண்டி விடுகின்றார் என அமைச்சர் விமல் வீரவன்ச குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஸ்ரீ.ல.சு.கட்சியை இரண்டாகப் பிரித்தது. பின் சந்திரிகாவின் மகன் விமுக்தியைக் கொண்டு அரசியல் நடத்துவதற்காக அவர் முயல்கின்றார் என அமைச்சர் விமல் வீரவன்ச நேற்று அவரது கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர்கூட்டத்திலேயே (20ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் போராளி சடலமாக மீட்பு

(கரவெட்டி)

முன்னாள் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவர் நேற்றையதினம் வல்வெட்டித்துறை பொலிஸாரினால் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இமையாணன் பூவாத் தோட்ட பகுதியை சேர்ந்த சித்திரம் கந்தசாமி (வயது 49) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

அதே பகுதியில் உள்ள வீட்டு வளவொன்றில் இருபது அடி உயரமான வேம்பமரத்தின் உயரத்தில் தூக்கில் (19ஆம் பக்கம் பார்க்க)

## வடமாகாண சபைத் தேர்தலுக்கு ஆசியக் கண்காணிப்பாளர்கள்

(கொழும்பு)

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலில் ஆசிய கண்காணிப்பாளர்களை தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்துவதற்கான செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக நீதியான தேர்தலுக்கான பவ்ரல் அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

10 ஆசிய கண்காணிப்பாளர்கள் உள்ளிட்ட பவ்ரல் அமைப் பின் சுமார் 1000 கண்காணிப்பாளர்கள் வட மாகாண சபைத் தேர்தலில் கண்காணிப்பு செயற்பாடுகளில் ஈடுபடுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை 2012 ஆம் ஆண்டின் வாக்காளர் இடாப்பின் பிரகாரம் வடமாகாணத்தில் ஒரு இலட்சம் வாக்காளர்களுக்கு தேசிய அடையாள அட்டை இல்லை என்பது [illegible]

### பவ்ரல் ஏற்பாடு

களுக்கு இரண்டு வாரங்களில் தேசிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொடுக்க நடமாடும் சேவைகளை நடத்திவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

வட மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் பவ்ரல் அமைப்பின் செயற்பாடு (19ஆம் பக்கம் பார்க்க)

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

குளிக்கச் சென்று மூன்று நாட்களாக காணாமல் போன முஸ்லிம் குடும்பஸ்தரொருவர் நேற்றையதினம் சடலமாக முல்லைத்தீவு பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

புத்தளத்தினைச் சொந்த இடமாகவும் முல்லைத்தீவு மீள்குடியேற்றப் பகுதியினை வசிப்பிடமாகவும் கொண்ட முகமட் அப்துல் காதர் மன்சூர் (வயது 45) என்பவரே நேற்று முல்லைத்தீவு சாலை நல்ல தண்ணி தொடுவாய் பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார். (20ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிள்ளையார் இன்

12 மணி முதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன. வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும்.

**சைவ உணவு: 150/-  அசைவ உணவு 175/-**

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

(சி-3779)


# சாட்சிகளை பாதுகாக்கும் சட்டத்தை இலங்கையில் அமுல்படுத்த வேண்டும்

## சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவிப்பு

சாட்சிகளை பாதுகாக்கும் சட்டம் இலங்கையில் அமுல்படுத்தப்பட வேண்டுமென சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

யுத்தம் நிறைவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்துள்ளதாகவும் இன்னமும் சாட்சியங்களை உரிய முறையில் பரிசீலிக்க அதிகாரிகள் தவறியுள்ளதாகவும் குற்றம் சுமத்தியுள்ளது.

உயர் அதிகாரிகள் குழுவினர் ஐக்கிய நாடுகள் அமைப்புடன் பிரஜைகள் தொடர்பு கொள்வதனை தடுத்து வருகின்றனர் என அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும் சட்டவிரோத கைதுகள் மற்றும் சித்திரவதைகள் தொடர்பில் அரசாங்கம் மெய்யான தகவல்களை வெளியிட வேண்டும்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டிற்கு முன்னதாக பயங்கரவாதத் தடைச் சட்டத்தினை ரத்து செய்ய வேண்டும்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் மற்றும் அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படாத அனைத்து சந்தேக நபர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

கைது செய்யப்படும் அனைவருக்கும் சட்டத்தரணிகளின் சேவையை பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தை அரசாங்கம் வழங்க வேண்டுமென மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது. (செ-11)


## திருமண வாழ்த்து

நிகழும் மங்கலகரமான விஜய வருட ஆனி மாதம் 13-ம் நாள் 27.06.2013 இன்று வியாழக்கிழமை சதுர்த்தி திதியும், புனர்பூச நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய மிதுன லக்கின சுபமுகூர்த்தத்தில் திருமண பந்தத்தில் இணையும்




தம்பதிகள் சகல சௌபாக்கியங்களும் பெற்று சீரும் சிறப்புடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

திரு.திருமதி கணேசலிங்கம் குடும்பம்
திரு.திருமதி அருள்ராசா குடும்பம்
திரு.திருமதி பாஸ்கரன் குடும்பம் (கனடா)

(3134)


# நாயைக் கடித்த இளைஞன் வைத்தியசாலையில் அனுமதி

யாழ்ப்பாணம் திருநகர் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் மதுபோதையில் தன்னைக் கடிக்க வந்த நாயைக் கடித்துக் குதறியதால் மயக்கமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது.

நேற்று புதன்கிழமை காலை மதுபோதையில் துவிச்சக்கர வண்டியில் யாழ்.சென்பற்றிக்ஸ் கல்லூரி வீதியூடாக சென்று கொண்டிருந்த வேளை அவரைத் துரத்திய நாயை தனது துவிச்சக்கர வண்டியை விட்டு இறங்கி கடித்துக் குதறியுள்ளார்.

இதனால் நாய்க்கு முகத்தில் காயம் ஏற்பட்டுள்ளது அத்தோடு குறித்த இளைஞருக்கும் காயங்கள் ஏற்பட்டுள்ளதுடன் இரத்தப் போக்கு காரணமாக நாயைக் கடித்த இளைஞன் மயக்கமடைந்துள்ளார்.

பின்னர் அருகிலுள்ள வீட்டுக்காரரின் உதவியுடன் பிரஸ்தாப இளைஞன் ஆட்டோ ஒன்றில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (செ-11)


## மரம்/சீற் விற்பனைக்கு

ரியூட்டறி கொட்டகைக்கு உகந்த பனைமரம், வளை, சலாகை, கப்பு, 10 அடி சீற் விற்பனைக்குண்டு.

**எக்ஸ்பிறஸ் இன்ஸ்ரிரியூட்**

இருபாலை

(சி-3771)



## செல்லா சினிமா யாழ்ப்பாணம்






## விற்பனைக்கு

பாவித்த, நல்ல நிலையில் உள்ள தொலைக்காட்சி, குளிர் சாதனப்பெட்டி, சலவை இயந்திரம் உடன் விற்பனைக்கு

தொடர்புகளுக்கு:-
**0771739273**

(சி-3781)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் – இலங்கை

### கலைப்பீடம்

முதலாம் வருட **கலைத்தேர்வு** - 2011 இரண்டாம் அரையாண்டு

முதலாம் வருட **நுண்கலைத்தேர்வு** - 2011 இரண்டாம் அரையாண்டு

**(இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்)**

**மேற்படி பரீட்சைகளின் பாடங்கள் கீழே குறிப்பிட்ட திகதியில் நடைபெறும்.**

| திகதி | நேரம் | பரீட்சை மண்டபம் | பாடம் |
|---|---|---|---|
| 06.07.2013 சனிக்கிழமை | 9.00 a.m. – 11.00 a.m. | இராமநாதன் மண்டபம், பொருளியற் துறை மண்டபம், புதிய கலைப்பீட மண்டபம் | ACLA 12010 - Computer Literacy |
| | | இரசாயனவியற் துறை விரிவுரை மண்டபம் I & II | ACLA 12010 - Computer Literacy (இசை, நடனம், சித்திரமும் வடிவமைப்பும்) |
| | 12.30 p.m. – 2.30 p.m. | இராமநாதன் மண்டபம், பொருளியற் துறை மண்டபம், புதிய கலைப்பீட மண்டபம் | AEGA 12010 - English for General Purposes |
| | | | ABFA 12010 - Reading and writing skills |

**தகுதியற்ற பரீட்சார்த்திகளின் பெயர்ப்பட்டியல் கலைப்பீடத்தில் [illegible]**

**பதிவாளர்**
**26.06.2013**

(சி-3776)

## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நினைவு தின அழைப்பும்



### அமரர்
### சூசைப்பிள்ளை திரேசம்மா

எமது பாசமிகு தாயார் சூசைப்பிள்ளை திரேசம்மா அவர்களின் இறைபதமும் அடைந்த செய்தி அறிந்து உடன் வந்து ஆறுதல் கூறி அனுதாபங்களைத் தெரிவித்ததுடன் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்ட அருட்தந்தையர்கள், கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவர்கள், நண்பர்கள், அன்பர்கள், உறவினர்களுக்கும் பத்திரிகை வாயிலாகவும் கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் ஊடாகவும், மலர் வளையங்களைச் சாற்றி அஞ்சலி செலுத்தியும் தொலைபேசி மற்றும் இணையத்தினூடாகத் தம் துயரைப் பகிர்ந்து, பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் எமது மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்து நிற்பதுடன் எம் தாயாரின் ஆத்ம சாந்திக்காக 29.06.2013 சனிக்கிழமை காலை 6 மணிக்கு இளவாலை புனித யுதாததேயு ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற்திருப்பலியிலும் 30.06.2013 ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

நன்றி

[illegible],
இளவாலை.

குடும்பத்தினர்.

(சி-3782)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

ஓம் ஸ்ரீராம் ஜெய்ராம் ஜெய் ஜெய் ராம்

# நிலா

யாழ்.நகர் மத்தியில்

உயர்தர சைவ உணவக திறப்புவிழா



# Nila

## Exclusive Vegetarian Restaurant

No.60, Stanley Road, Jaffna.

இன்று 27.06.2013 வியாழக்கிழமை மாலை 5.00 மணி
சுபவேளையில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில்
ஸ்ரீ நாக விகாரைக்கு முன்பாக அமைந்துள்ள
நிலா
உயர்தர சைவ உணவகம்
மங்களகரமாகத் திறந்து
வைக்கப்படுகின்றது.

ஆத்மீக லயத்துடன் கூடிய இனிய சூழலில் குடும்பத்தவர்,
சுற்றத்தார், நலன் விரும்பிகள் சகிதம் இங்கிதமான
உபசரிப்பில் தூய சைவ விருந்துண்டு
மகிழ்ந்திட நேயமுடன்
அழைக்கின்றோம்

Vaihasi (PVT) Ltd

Valampuri Graphics

(3129)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 விடயத்தில் இலங்கை தன்னிச்சையாக செயற்பட்டால் அது இந்தியாவுக்கு அவமானம்

## தினமணி பத்திரிகை சுட்டிக்காட்டு

(சென்னை)

**தமிழர்கள், முஸ்லிம்கள் என எந்தச் சிறுபான்மையினருக்கும் மாகாண அளவில் முழு அதிகாரங்களும் கிடைத்துவிடக்கூடாது என்பதற்கா கவே 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றத்தை ஏற்படுத்த இலங்கையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இவ்வாறு மாற்றம் ஏற்படுத்தப்படின் அது இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை மீறும் செயலாகவே அமையும் எனவும் தமிழகத்திலிருந்து வெளிவரும் தினமணி பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத் தில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

போதுமிந்த பாராமுகம் என்ற தலைப்புடன் இடம்பெற்றுள்ள இவ் ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கை அரசியல் சட்ட 13 ஆவது திருத்தத்தை சில மாற்றங்களுக்கு உட்படுத்தும் வேலைகள் இலங்கையில் மிக வேகமாக நடந்து கொண்டிருக்கின்றன.1987 இல் அன்றைய இந் தியப் பிரதமர் ராஜீவ் காந்தி யும் இலங்கைஜனாதிபதிஜே.ஆர்.ஜெயவர்த்தனவும் கையொப்பமிட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் தமி ழர்களுக்கு வடக்கு, கிழக்கில் அதிக அதிகாரம் பெறஒப்புக்கொள்ளப்பட்டது.

அதற்காக அமுல்படுத்த வேண்டிய 13 ஆவது சட்ட திருத்தத்தை கடந்த கால் நூற்றாண்டாக இலங்கை அரசு அமுல்படுத்த பின்னின்றதோடு தற்போது அதன் சரத்துகளை நீர்த்துப்போகச்செய்யும் வேலையிலும் ஈடுபட்டுள்ளது.

கடந்த 18 ஆம் திகதி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் புதுடில்லியில் பிரதமர் மன்மோகனைச் சந்தித்து 13 ஆவது சட்டதிருத்தத்தை நீர்த்துப்போகச் செய்யும் நடவடிக்கை களை தடுக்க வேண்டும் என்று கோரிய போது பிரதமர் தெரிவித்த கருத்து இலங்கைத் தமிழர்களைக் கை விட்டுவிடமாட்டோம், பாதுகாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதுதான்.

இதுதவிர இந்திய அரசு இது தொடர்பாக இலங்கை அரசுக்கு கடிதம் எழுதியிருந்தது. அந்தக் கடிதம் வழக்கமான எந்தவிதமான தாக்கத்தையும் அல்லது நிர்ப்பந்தத்தையும் இலங்கை அரசுக்கு ஏற்படுத்தப் போவதில்லை.

சில தினங்களுக்கு முன்பு 13ஆவது சட்டதிருத்தத்தில் மாற்றம் செய்வது குறித்து ஆலோசனை செய்ய நாடாளுமன்றதெரிவுக்குழு அமைத்தார்கள். இதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உட்பட பல கட்சிகள் உறுப்பினர்களாக இருக்க விரும்பவில்லை என்று தெரிவித்தன.தற்போது 13 ஆவது சட்ட திருத்தத்தில் உட்பிரிவுகள் திருத்தம் குறித்த கருத்து இலங்கை உச்சநீதிமன்றத்தின் ஆலோசனைக்கு அனுப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு வேண்டுமென்றே இவ்வாறு நீதிமன்றத்தையும் கூட்டு சேர்த்துக் கொள்கிறது என்று கருத இடமிருக்கிறது.

பொதுநலவாய மாநாட்டின்போது 13 ஆவது சட்டதிருத்தத்தில் இந்தியா வலியுறுத்தினால் அது நீதிமன்றத்தின் கருத்துக்காக அனுப்பப்பட்டுள்ளது என்று சாக்குப் போக்கு சொல்ல வசதியாக இத்தகைய நடவடிக்கையில் இலங்கை அரசு இறங்கியிருக்கக்கூடும்.

மேலும் இலங்கையில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் செயலிழக்கச் செய்யப்பட்டிருந்தாலும் சிறுபான்மை முஸ்லிம்களில் பலரும் உயர்கல்வி பெற்றவர்களாகவும் அரசியல் அறிவு கொண்டவர்களாகவும் வளர்ந்து நிற்பதை பெரும்பான்மையினத்தினர் புதிய பிரச்சினையாகக் கருதுகிறார்கள்.

இந்நிலையில்தமிழக முஸ்லிம் அமைப்புகளை இலங்கைத் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள்சந்தித்துப்பேச்சு நடத்தியிருப்பதும் நாம் தமிழர் கட்சி மாநாட்டில் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி தலைவர் யாசின் மாலிக் பங்கேற்றதும் இலங்கை அரசுக்கு அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. தமிழர்கள், முஸ்லிம்கள் என எந்தச் சிறுபான்மையினருக்கும் மாகாண அளவில் முழு அதி காரம் கிடைத்துவிடக் கூடாது என்பதற்காக 13 ஆவது சட்டதிருத்தத்தில் உட்பிரிவுகள் மாற்றப்படவுள்ளதாகத் தெரிகிறது.

இவை எதுவாக இருந்தாலும் இரு நாடுகளுக்கு இடையிலான ஒப்பந்தத்தை மீறுகின்ற செயலாகத்தான் இது இருக்கும். இந்தியாவும் இலங்கையும் இணைந்து ஏற்படுத்திய ஒப்பந்தத்தின் உட்பிரிவுகளில் மாற்றம் செய்ய வேண்டும் என்றால் இந்தியாவின் ஒப்புதல் பெறாமல் இத்தகைய திருத்தம் செய்வது எந்த விதத்திலும் நியாயமில்லை.

ஆனால், இலங்கை அரசு தன்னிச்சையாக இந்த நடவடிக்கை யில் இறங்கியுள்ளது.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை மீறி 13 ஆவது சட்டதிருத்தத்தில் இலங்கை தன்னிச்சையாக மாற்றங்கள் செய்யுமெனில் சர்வதேச அரங்கில் இந்தியாவுக்குப் பெருத்த அவமானம்தான் மிச்சமாகும். ஏனைய நாடு கள் இந்தியாவை கிள்ளுக்கீ ரையாக நினைக்க வைக்கும். ஆகவே, இந்தியா இந்த விவ காரத்தில் மிகவும் அவதான மாகச்செயற்பட்டாக வேண்டும்.

அண்டை நாட்டு விவகாரங்களில் தலையிடுவதில்லை என்று நெருப்புக் கோழி மண்ணுக்குள் தலைபுதைத்து நிற்பது போல இனியும் இந்தியா நிற்குமேயானால் சர்வதேச அரங்கில் நமக்கிருக்கும் கொஞ்சநஞ்ச மரியாதையும் போய்விடும். ஆப்கானிஸ்தான் பற்றியும் மியன்மார் பற்றியும் கவலைப்படுவதை விட்டுவிட்டு நமக்குத் தலையிட அதிகாரமுள்ள இலங்கைப் பிரச்சினையில் நாம் தலையிட்டுத் தமிழர்களுக்கும் தமிழ் முஸ்லிம்களுக்கும் நியாயம் பெற்றுத்தந்தாக வேண்டும் என அக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-5)


வாழ்த்துவதில் மனம் நிறைகின்றோம்





கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக போர் அனர்த்த காலங்களிலும்
பல்வேறு இடர்களின் மத்தியிலும் தொடர்ந்து சேவையாற்றி
எதுவித நியமனங்களோ,வேதனங்களோ இன்றி இருந்த எமக்கு
நிரந்தர நியமனத்தை பெற்றுத்தந்து
இருள் சூழ்ந்த எம் வாழ்விற்கு ஒளியேற்றிய நீங்கள்

**நீடுழி காலம் வாழ்கவென**

**மனதார வாழ்த்துவதில் பெரும் மகிழ்வடைகின்றோம்.**

உங்கள் சேவைக்கு என்றும் தோள் கொடுப்போம்.

தொண்டர் ஆசிரியர் சங்கம், கிளிநொச்சி கல்வி வலயம் (சி/3777)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## ஞானம்

ஒரு ஊரிலே ராஜா இருந்தார். அந்த ராஜாவுக்கு ராணி இருந்தார்.

ராஜாவினுடைய அரண்மனைக்கு பெரிய பெரிய ஞானிகள் வருவது வழக்கமாக இருந்தது. வருகிற ஞானிகள் கூறும் உபதேசங்களையெல்லாம் அந்த ராணி அவதானமாகத் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

அதனுடைய விளைவு, அவளும் ஒரு ஞானி ஆகிவிட்டாள். ஞானி மட்டுமல்ல... தன்னுடைய உருவத்தை மாற்றி விட்டு ஆகாயத்திலே பறக்கும் சித்தியும் அவளுக்குக் கிடைக்கப் பெற்றது. நினைத்தால் ராணி எங்கேயும் பறந்து உலா வரலாம்– அப்படிப்பட்ட சக்தி அவளிடம் வந்து விட்டது.

உடனே ராஜா– ராணியிடம் சென்று– ''இதோ பார்! நானும் உன்னை மாதிரியே ஞானி ஆக வேண்டும். எனக்கும் ஏதாவது உபதேசம் செய்'' என்று கேட்டுக் கொண்டார்.

அதற்கு ராணி, ''நீங்கள் ஞானி ஆக வேண்டுமென்றால் அனைத்தையும் துறந்து, தயாராக ஒரு நிலைப்பட வேண்டும். உங்களை விட்டு வைராக்கியம் இன்றும் போகவில்லை'' என்று கூறினாள்.

"சரி" என்று அமைதியாக ராஜா இருந்து விட்டார்.

நாட்கள் நகர்ந்தன; ராஜா காட்டுக்குப் போய் தவம் செய்ய வேண்டுமென ஆசைப்பட்டார். ஆனால், ராணிக்கு விருப்பமில்லை. அதனால் அவர் சம்மதப்படவில்லை.

ராஜாவுக்கா வழி தெரியாது? அவர் சொல்லாமல் ஒரு நாள் இரவு காட்டுக்குப் புறப்பட்டுப் போனார்.

ஆகாயத்திலே பறக்கிற சக்தி அவளுக்கு ஏற்கனவே கிடைத்தபடியால் இளம் முனிவர் மாதிரி தன்னுடைய உருவத்தை மாற்றிக் கொண்டார்.

புறப்பட்டுப் பறந்து போனாள் காட்டுக்கு... ராஜா இருக்கும் இடத்தைத் தெரிந்து கொண்டாள்.

நேராக ராஜாவுக்கு முன்னால் போய் இறங்கினாள். இந்த இளம் முனிவர் அதுதான் அந்த ராணி.

ராஜா இந்த இளம் முனிவரைப் பார்த்ததும் தலை வணங்கினார்.

"நான் நீண்ட காலமாக தவம் செய்கிறேன். மன நிம்மதி எனக்கு இன்னும் கிட்டவில்லை. தாங்கள்தான் அருள் புரிய வேண்டும்" என்றார்.

அதற்கு அந்த இளம் முனிவர்; ''அனைத்தையும் துறக்க வேண்டும்மென்று உங்கள் மனைவி ஒரு சமயம் உபதேசம் செய்தாளே! அதன் பின்னர் அனைத்தையும் விட்டு விட்டீர்களா?'' என்று கேட்டார்.

"அனைத்தையும் விட்டு விட்டேன். இன்னும் இந்த ஆசிரமத்தைத்தான் விடவில்லை" என்று சொல்லிவிட்டு நெருப்பிலே குதிக்கப் போனார்.

இளம் முனிவர் ராஜாவை உடனே தடுத்து நிறுத்தினார்.

"உடம்பு உங்களுக்குச் சொந்தம் இல்லை... அதெல்லாம் பஞ்ச பூதங்களுக்கு சொந்தம்" என்றார்.

ராஜா சிறிது நேரம் யோசித்தார். "அப்படியென்றால், எனக்கு என்னதான் சொந்தம்?" என்று கேட்டார்.

"உங்கள் அகங்காரம்தான் உங்களுக்குச் சொந்தம். நீங்கள் உங்களிடம் இருந்து துறக்க வேண்டியது அதைத்தான். அதை விட்டு விடுங்கள் முதலிலே. அது உங்களிடம் இருப்பதால்தான் இந்த உலகமே உங்களிடம் இருக்கிறதாக நினைக்கிறீர்கள். அகங்காரம் இருக்கிறதால்தான் இந்த உலகப் பொருட்கள் உங்க ளுக்குச் சொந்தமென்று தோன்றுகிறது" என்று இளம் முனிவர் உருவத்திலே இருந்த ராணி கூறினார்.

உடனே ராஜா "இதோ என்னிடம் இருக்கிற அகங்காரத்தை விட்டு விடுகிறேன்" என்றார்.

அதன்பின்தான் அந்த ராஜாவும் ஞானியானார். ராணிக்கு கிடைத்த மாதிரியான சித்தி அவருக்கும் கிடைக்கப்பெற்றது.

இந்தக் கதையை ஒருவருக்கு மிகவும் உணர்வு பூர்வமாகச் சொல்லிக் கொண்டிருந்தேன். அவர் உடனே சொன்னார்;

சித்தியடைவதற்கு அந்த ராஜா எவ்வளவு தூரம் கஷ்டப்பட்டிருக்கிறார்.

நான்கூட சித்தி அடைந்திருக்கிறேன். ஆனால், அவ்வளவு கஷ்டப்படவில்லை. உங்களுக்கு சுலபமாக "சித்தி" கிடைக்கப் பெற யார் காரணம்? என்று கேட்டேன்.

"எங்கள் அப்பாதான் காரணம் அவர் இரண்டாவதாக ஒரு கல்யாணம் செய்தார். உடனே "சித்தி" வீட்டுக்கு வந்து விட்டார்.

"எனக்கு சித்தி கிடைத்த கதை" இது தான் என்றார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையை மீளச் செயற்படுத்த கலந்துரையாடல்

அச்சுவேலிக்கைத்தொழிற்பேட்டையில் வடமாகாண கைத்தொழில் முயற்சியாளர்களின் முதலீடுகளை அதிகரிப்பதற்காக முதலீடுகளை மேற்கொள்ள உள்ளவர்களையும் வங்கித் துறையினரையும் இணைத்து அதனூடாக முதலீட்டாளர்களுக்கான நிதியிடல் வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் கலந்துரையாடல் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

இதில் மத்திய வங்கி பிரதிநிதிகளும் UNOPS நிறுவனப்பிரதிநிதிகளும் பலதரப்பட்ட வங்கிசார் நிறுவனங்களும் மற்றும் வங்கிசாரா நிதி நிறுவனங்களும் முதலீட்டாளர்களும் கலந்து கொள்வதுடன் இக்கலந்துரையாடல்மூலம் முதலீட்டாளர்கள் தமக்கு தேவையான நிதி வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

அரசாங்கத்தின் நிதியுதவியுடனும் இந்திய அரசின் சிறிய அபிவிருத்தி நன்கொடை உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் நிதியுதவியுடனும் அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையை மீளச் செயற்படுத்தல் வேலைத்திட்டங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளன.

இவ்வேலைத்திட்டங்களில்காணித் துண்டுகளை விருத்தி செய்தல் உள்ளக பாதைகள் உட்கட்டமைப்பு, நீர் வழங்கல், நீர் வடிகாலமைப்பு, மின்சார வசதி, உள்ளக பாதுகாப்புச் சேவைகள் மற்றும் ஏனைய சேவைகள் என்பன உள்ளடங்குகின்றன. இதற்கான வேலைகள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருப்ப துடன் இவ் வேலைத் திட்டங்கள் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இறுதிக் காலப்பகுதிக்குள் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

அதனைத் தொடர்ந்து முதலீட்டாளர்கள் தமது கட்டுமான வேலைகளை மிக விரைவில் ஆரம்பிக்க முடியும். மேலும் இக்கைத் தொழிற்பேட்டையின் வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்காக முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் ஒன்றும் சம்பந்தப்பட்ட நிறுவன அலுவலர்களுடன் நடத்தப்படும். பிரதானகுறைகளாக சீமெந்து மற்றும் கட்டடம் சார்ந்த உற்பத்திகள், மரம் சார்ந்த உற்பத்திகள், எண்ணெய் உற்பத்தி, இறப்பர், பிளாஸ்டிக் மற்றும் பைபர் கிளாஸ் சார்ந்த உற்பத்திகள், இலகு பொறியியல் உற்பத்திகள், ஆடை உற்பத்திகள், சிற்ப வேலை, ஒட்சிசன் வாயு கொள்கலன் உற்பத்தி, கர்ப்பூரம் மற்றும் ஊதுவர்த்தி உற்பத்திகள், வார்ப்பு உற்பத்திகள், கைத்தறி சார்ந்த உற்பத்திகள் என்பன உள்ளடங்குகின்றன.

கைத்தொழிற்பேட்டை ஊடாக வடமாகாணத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் சுமார் 4 ஆயிரம் முதல் 5 ஆயிரம் வரையானோர் நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்வார்கள் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)

# ஆன்மீக சொற்பொழிவு

ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான அலங்கார உற்சவம் கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி எதிர்வரும் ஜூலை மாதம் 7 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இதன் போது யாழ் நகர் மேற்கு சமுர்த்தி வங்கி உதவி முகாமையாளர் சொல்லருவி த.கருணாகரன் பெரியபுரணம் எனும் தலைப்பில் மாலை 6 மணி முதல் 7 மணி வரை சிறப்பு சொற்பொழிவு ஆற்றவுள்ளார் என ஆலய நிர்வாகத்ினர் அறிவித்துள்ளனர். (அ)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 20 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100-140 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 100 | 140 |
| தக்காளி | 110 | 140 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 50 | 40 |
| கோவா | 140 | 100 | 140 |
| கரட் | 120 | 100 | 160 |
| பூசணி | 40 | 40 | 50 |
| புடோல் | 40 | 40 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 200 | 130-140 | 140-180 |
| பெரிய வெங்காயம் | 100 | 70 | 80 |
| பாகற்காய் | 100 | 120 | 80 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 60 |
| பயற்றங்காய் | 60 | 60 | 160 |
| லீக்ஸ் | 100 | 160 | 120 |
| பீற்றூட் | 100 | 50 | 160 |
| கறிமிளகாய் | 120 | 120 | 240 |
| முருங்கைக்காய் | 150 | 250 | 160 |
| போஞ்சி | 140 | 140 | 20 |
| கத்தரிதம்புள்ள | 20 | 10-20 | -- |
| கீரை - 1 பிடி | 20 | 10 | 20 |
| தேசிக்காய் | 100 | 60 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 90 | 120 |

# இராசி பலன்

*27.06.2013*
*(ஆனி 13, வியாழக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.58 மணிக்கு*
*சதுர்த்தி முற்பகல் 8.37 மணிவரை*
*அவிட்டம் முன்னிரவு 9.09 மணிவரை*
*இராகுகாலம் 1.25-2.25 மணிவரை*
*சுபநேரம் 7.25-8.55 மணிவரை*

**மேடம்** ஆனந்தமான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், குடும்பத் தேவைகளைப்பூர்த்தி செய்து கொள்வீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும், வருமானம் திருப்தி தரும்.

**இடபம்** சொல்லைச் செயலாக்கிக் காட்டுவீர்கள், சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரத்தோன்றும், செல்வாக்கு மேலோங்கும் நாள், பிறர் உதவியுண்டு, ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் செய்து முடிப்பீர்கள், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும், பகைவிலகி பாசம் கூடும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** கவலைகள்தீர இஷ்ட தெய்வத்தை வழிபடவேண்டிய நாள், மருத்துவச் செலவுகள் ஏற்படலாம், பிறருக்காக பொறுப்புச் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது, முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம்

**சிங்கம்** மனதிற்கினிய சம்பவம் ஒன்று நடைபெறும் நாள், நண்பர்கள் சந்திப்புண்டு, தொலைபேசி வழித்தகவல்கள் மகிழ்ச்சி தரும், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

**கன்னி** தொழில் வளர்ச்சிக்கு புதிய முடிவுகள் எடுப்பீர்கள், மறைமுகப் போட்டிகள் மாறும், உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும், நோய்கள் குணமடையும்.

**துலாம்** வளர்ச்சி கூடும்நாள், கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, பிள்ளைகளால் பெருமை வந்து சேரலாம், எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கப்பெறுவீர்கள்.

**விருச்சிகம்** நண்பர்கள்மூலம் சில உதவிகள் கிடைக்கலாம், பயந்த சுபாவமுண்டு, சுபகாரியப்பேச்சுக்கள் முடிவாகும், கட்டடப் பணிகள் தொடரும் வாய்ப்பு ண்டு, குடும்பத்தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு** உடன் பிறப்புக்களின் ஒத்துழைப்பால் உற்சாகம் அடையும் நாள், முக்கிய பிரச்சினை இன்று நல்ல முடிவுக்கு வரும், காரிய அனுகூலமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், தொலை பேசி வழித்தகவல் தொழில்வளர்ச்சிக்கு உறுதுணைபுரியும், பணவரவு திருப்தி தரும், பொதுவாழ்வில் புகழ்கூடும்.

**கும்பம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபடவேண்டிய நாள், சான்றோர்களின் சந்திப்பால் சந்தோசமடைவீர்கள், ஒரு சில வேலைகளை முடிக்க பல மணிநேரம் காத்திருக்க நேரிடலாம்.

**மீனம்** தொழிலில் உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், சயன சுகக் குறைவான நாள், பயணங்கள் மகிழ்ச்சி தரும், பிதா சிந்தையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 8 ஆயிரம் வீடுகளை செஞ்சிலுவை அமைக்கும்

(யாழ்ப்பாணம்)

இந்திய வீட்டுத் திட்டத்தில் அமைக்கப்படவுள்ள வீடுகளில் யாழ்.மாவட்டத்தில் மட்டும் 8 ஆயிரம் வீடுகளை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் அமைத்துக் கொடுக்கவுள்ளதாக யாழ்.கிளையின் தலைவர் கே. பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

இது தொடர்பில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்.கிளையின் தலைவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் வடமாகா ணத்தில் அமைத்துக் கொடுக்கப்படவுள்ள வீடுகளில் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத் திற்கும் ஒதுக்கீடுள்ளது.

குறிப்பாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வடமாகாணத்தில் 16 ஆயிரத்து 800 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதில் யாழ்.மாவட்டத்தில் 8 ஆயிரம் வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இதற்கான பயனாளிகள் தெரிவு அரச அதிபரினாலும் பிரதேச செயலரினாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. பயனாளிகள் தெரிவுக்கு இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் அறிவுறுத்தலின் படி புள்ளி வழங்கும் செயற்றிட்டம் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் எனவும் பயனாளிகளுக்கு அவரவர் தொழில் தகைமைகளுக்கு ஏற்ற வகையில் வாழ்வாதாரத் திட்டம் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்படும் எனவும் கட்டட வேலைகள் அனைத்தும் பயனாளிகளால் செய்யப்படும் எனவும் தேவையான தொழில்நுட்ப உதவிகள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தால் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)




நன்றி:- மிரர்

# இலங்கையில் அபி. திட்டங்களை தொடர்ந்து முன்னெடுப்போம்

## ஆஸி. தூதுவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**இலங்கை அரசாங்கத்திற்கும் அவுஸ்திரேலிய அரசுக்குமிடையில் நல்லெண்ணத்தை ஏற்படுத்தக்கூடிய அபிவிருத்தி திட்டங்களை நாம் தொடர்ந்தும் முன்னெடுப்பபோம் என இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் றொபின்மூடி தெரிவித்தார். புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்தினால் (IOM) அவுஸ்திரேலிய சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் அமைப்பின் (AusAID) நிதியுதவியுடனும், இலங்கை அரசின் ஒத்துழைப்புடனும் புனரமைக்கப்பட்ட பாஷையூர் மீன்பிடி இறங்குதுறையைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

கடந்த 30 ஆண்டு காலமாக நிலவிய யுத்தம் காரணமாக இங்குள்ள மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் அனைத்தும் சேதமடைந்திருந்தமையால் இந்த மக்கள் தொழில் செய்வதில் துன்பப்பட்டுவருகின்றனர்.

வடக்கு மாகாணத்தில் 32 ஆயிரம் குடும்பங்கள் மீன்பிடி தொழிலிலேயே தங்கி வாழ்கின்றனர்.

இதில் 62 வீதமானவர்கள் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களாவர். இந்நிலையில் யாழ். மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலின் முக்கியத்துவம் புலனாகின்றது.

இதன் காரணத்தினால் தான் ஐ.ஓ.எம். நிறுவனத்துடன் இணைந்து அவுஸ்திரேலிய அரசாங்கம் யாழில் மீன்பிடித் தொழிலுக்கான அபிவிருத்தியை மேற்கொண்டு வருகின்றது.

இலங்கை அரசாங்கத்திற்கும் அவுஸ்திரேலிய அரசிற்கும் இடையிலான ஒத்துழைப்பை இத்திட்டம் வெளிப்படுத்துகிறது.

இத்திட்டத்திற்கு அரச அதிகாரிகள் பெருமளவில் உதவி மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளனர்.

2006 ஆம் ஆண்டிலிருந்து ஐ.ஓ.எம். நிறுவனத்துடன் இணைந்து அவுஸ்திரேலிய அரசாங்கம் பல திட்டங்களை உருவாக்கியுள்ளது.

பிரதேச செயலர், உள்ளூராட்சி திணைக்களம், மீன்பிடி கூட்டுறவுச் சங்கம், சமூகமட்ட அமைப்பு, கடற்படை, மீன்பிடி திணைக்களம், மாநகர சபை ஆகியவற்றிற்கிடையிலான ஒருங்கிணைப்பைக் கண்டு நாம் மகிழ்ச்சியடைந்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)




# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள கைத்தொழில் உற்பத்தி கிராமத் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடல் காலை 8.30 மணி தொடக்கம் 9.30 மணிவரை அல்லாரை தும்புத் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திலும் காலை 10மணி தொடக்கம் 10.40 மணிவரை வதிரி தோற்பொருள் அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திலும் காலை 11 மணி தொடக்கம் 11.30 மணிவரை நீர்வேலி காமாட்சி அம்பாள் கூட்டுறவுச் சங்கத்திலும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என். டக்ளஸ்தேவானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது என கைத் தொழில் அபிவிருத்திசபை பணிப்பாளர் சிவகெங்காதரன் தெரிவித்துள்ளார். (அ)

# பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் இன்று வியழாக்கிழமை பி.ப.5 மணிக்கு வவுனியா நகர சபை கலாசார மண்டபத்தில் நடைபெறவிருந்த கீழத்தேய ஆடற்கதை கலைநிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. இந்நிகழ்வு நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் என்.ஸ்ரீதேவி அறிவித்துள்ளார். (அ)








புலம்பெயர்தலுக்கான சர்வதேச நிறுவனத்தினால் (IOM) அவுஸ்திரேலிய சர்வதேச அபிவிருத்திக்கான முகவர் அமைப்பின் (AusAID) நிதியுதவியுடனும் இலங்கை அரசாங்கத்தின் ஒத்துழைப்புடனும் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட பாஷையூர் மீன்பிடி இறங்குதுறை நேற்றைய தினம் இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் றொபின்மூடியினால் திறந்து வைக்கப்பட்ட போது..... [படங்கள்:- [illegible]]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஆவது திருத்தச்சட்டம் ஈழத்திற்கான வழியெனின் பிரபாகரன் அதை எதிர்த்தது ஏன்?-தயான் ஜயதிலக்க

**(கொழும்பு)**

***13 ஆம் திருத்தச்சட்டத்தை அமுல்படுத்துவதை விடவும் அமுல்படுத்தாது இருப்பதனால் ஏற்படக்கூடிய பாதிப்புகளே அதிகம் என குறிப்பிட்டுள்ள முன்னாள் இராஜதந்திரி கலாநிதி தயான் ஜயதிலக்க 13 ஆவது திருத்தச்சட்டம் ஈழத்திற்கான வழியென்றால் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஏன் 13 ஆம் திருத்தச்சட்டத்தை எதிர்க்க வேண்டும் எனவும் கேள்வியெழுப்பியுள்ளார். சிங்கள ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.***

இச்சந்திப்பின்போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப்புலிகள் முதல் இடதுசாரி தமிழ் கோட்பாடுகளை பின்பற்றி வரும் சகல தரப்பினரும் 13 ஆவது திருத்தச் சட்டம் போதுமானதல்ல என்ற நிலைப்பாட்டிலேயே இருந்தனர்.

எனினும் 13 ஆம் திருத்தச்சட்டத்தை சிலர் ஈழத்திற்கான வழியாகவும் நாட்டை பிளவுபடுத்தக்கூடிய ஒன்றாகவும் பிரசாரம் செய்கின்றனர். அவ்வாறு என்றால் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஏன் 13 ஆம் திருத்தச் சட்டத்திற்கு எதிராக போர் செய்தார்?

தமிழீழத்தை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பதைப்பற்றி இறந்த பிரபாகரனுக்கு பாடம் புகட்ட சில தற்போதைய அரசியல் வாதிகள் முயற்சிக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சகல தரப்பின்ரும் 13ஆம் திருத்தச்சட்டம் போதாது என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கின்றனர்.



எனவே, இதனை அமுல்படுத்துவதை விடவும் அமுல்படுத்தாமல் இருப்பதனால் ஏற்படக்கூடிய ஆபத்துக்களே அதிகமாகும் என சுட்டிக்காட்டியுள்ளார். (அ-5)

# நவநீதம்பிள்ளையை சிறைக்கு அழைக்க கைதிகள் முயற்சியாம்

## சிங்கள ஊடகம் தகவல்

கொழும்பு மகசின் சிறைச்சாலை யில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதலில் பலகையடக்க தொலைபேசிகள், சிம் அட்டைகள் என்பன கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை மகசீன் சிறைக்கு அழைத்துச் செல்ல அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் முயற்சித்துள்ளதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த தினங்களில் சிறைச்சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு தேடுதல்களின் போது கண்டுபிடிக்கப்பட்ட 40 சிம் அட்டைகள் பயங்கரவாத விசாரணை பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை பேச்சாளரும் சிறைச்சாலை ஆணையாளருமான காமினி குலதுங்க தெரிவித்திருந்தார்.

இதையடுத்து கொழும்பு மகசீன் மற்றும் நீர்கொழும்பு சிறைகளில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல்களின் போதும் பல கையடக்கத் தொலைபேசிகளும் சிம் அட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டன. இதன்போது மகசீன் சிறையில் இருந்து 13 சிம் அட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டதோடு நீர்கொழும்பு சிறைச்சாலையில் நடத்திய தேடுதலில் 23 கையடக்கத் தொலைபேசிகளும் 27 சிம் அட்டைகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையை மகசீன் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்ல திட்டமிடப்பட்டுள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களே இவ்வாறு திட்டமிட்டுள்ளதாகவும் தங்களது பிரச்சினைகள்ள சர்வதேசத்திற்கு சொல்லும் நோக்கில் இவ்வாறு நவநீதம்பிள்ளையை சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்ல முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும் செய்தி வெளியிட்டுள்ளது.

செய்மதித் தொலைபேசிகளின் ஊடாக புலிச் சந்தேக நபர்கள் புலம்பெயர் தமிழர்களுடன் தொடர்புகளைப் பேணி வருவதாகவும் அவ்வூடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில் சிறைச்சாலைகளில் மீட்கப்பட்ட குறித்த சிம் அட்டைகள் பயங்கரவாத விசாரணைப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்

☛ கடிதங்கள் ☛ அன்பளிப்பு பொருட்கள் ☛ உடுபுடவைகள்

☛ CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No :-021 222 5392

WESTERN UNION MONEY TRANSFER

(தி/3633)

# 69 ஆவது ஆண்டு நிறைவும் விளையாட்டு விழாவும்

(கோண்டாவில்)

கோண்டாவில் ஞான வீர சனசமூக நிலையத்தின் 69 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 2.30 மணிக்கு விளையாட்டு விழா நடைபெறவுள்ளது.

மேலும் இந் நிலையத்தின் கீழ் இயங்கும் ஞானவீர முன்பள்ளியின் விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை முன்பள்ளி மைதானத்திலும் நடைபெறும் என நிலையத்தின் செயலாளர் செ.தனுஜன் அறிவித்துள்ளார். (அ)

# பஹ்ரைன் தூதரகத்தில் இரத்ததான முகாம்

(கொழும்பு)

புதிதாக திறக்கப்பட்ட பஹ்ரைனிலுள்ள இலங்கைத் தூதரகம் ஏற்பாடு செய்த இரத்ததான நிகழ்வில், பஹ்ரைன் மக்களும் பஹ்ரைனில் தொழில் புரியும் இலங்கையரும் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

பஹ்ரைனிலுள்ள இலங்கைத் தூதுவர் ஆர்.கே.எம்.ஏ. ராஜக ருணா தலைமையில் நடைபெ ற்ற இந்த இரத்ததான நிகழ்வில், 100 இற்கும் அதிகமானோர் இரத்த தானம் செய்ததாகவும் தெரியவரு கிறது.

இத்தகைய நிகழ்வுகள் இரு நாடுகளுக்கிடையே நட்புறவை வளர்க்கும் என பஹ்ரைனிலுள்ள இலங்கைத் தூதுவர் நம்பிக்கை தெரிவித்தார். (அ)

அனுமதி இலவசம்

விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம்
இனத்துவக் கற்கைக்கான சர்வதேச நிலையம்
இணைந்து நடாத்தும்

**‘அவளின் கதைகள்’**

வடக்கிலும் தெற்கிலும் வாழ்ந்துவரும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்களத் தாய்மார்களின் வாய்மூலக் கதையாடல்களின் கண்காட்சி

**கண்காட்சி**

**இடம்: யாழ்.பொது நூலக கூடம்**

**காலம்: 2013. ஜூன் மாதம் 28, மற்றும் 29 ஆம் திகதிகளில்**

**காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1983 இந்து(V)<br>நட்சத்திரம: உத்தராடம் 3ம்<br>கி.பா: 35.50<br>உயரம்: 5'8" 7 இல் செவ்<br>தகைமை/தொழில்: A/L பட்டதாரி M.L.T<br>தொ.இ:B584 | பிறப்பு: 1970 இந்து(V)<br>நட்சத்திரம்: சித்திரை 3<br>கி.பா:20.25 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: BCom ஆசிரியை<br>தொ.இ:G819 |
| பிறப்பு: 1978 இந்து(விஸவகுலம்)<br>நட்சத்திரம: பூசம் 4 கி.பா:14<br>உயரம்: 5'3" 12 இல் செவ்<br>தகைமை/தொழில்: MBBS வைத்தியர்<br>தொ.இ:B594 | பிறப்பு: 1981 இந்து (V)<br>நட்சத்திரம்: மூலம் 3<br>கி.பா: 36,12சூ,செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:A/L ஆசிரியர் சைவபோசனம்<br>தொ.இ:G820 |
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: சுவாதி 3<br>கி.பா:12.50 உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: O/L சுவீஸ் PR<br>தொ.இ:B595 | பிறப்பு: 1969 இந்து(Sa)<br>நட்சத்திரம்: ஆயிலியம் 4<br>கி.பா: 42.25 4 இல் செவ்<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: பட்டதாரி ஆசிரியை<br>தொ.இ:G824 |
| பிறப்பு: 1980 இந்து(V)<br>நட்சத்திரம்: சதயம் 1<br>கி.பா:17.50,12 இல் செவ்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L , M.L.TFever surveillance Assistant<br>தொ.இ:B597 | பிறப்பு: 1981 இந்து(V)<br>நட்சத்திரம்:பூராடம் 1<br>கி.பா:16.75<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: சித்த மருத்துவம், மருந்தாளர் சித்த வைத்தியர் சைவபோசனம்<br>தொ.இ:G826 |

சகல தொடர்புகளுக்கும்:-

**கல்யாண மாலை**

(சர்வதேச இலவச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி,

யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

ஊடக அனுசரணை வலம்புரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு மரணத்தை ஆயிரத்தில் ஒன்றாக குறைக்க விசேட திட்டம்

(கொழும்பு)

**டெங்கு ஒழிப்பில் மேலும் பல திட்டங்களை சுகாதார அமைச்சு நடைமுறைப்படுத்தவுள்ளதுடன், டெங்கு மரணத்தை ஆயிரத்தில் ஒன்று என்ற வீதத்திற்கு கொண்டுவருவதே இந்த திட்டத்தின் இலக்காகும் என சுகாதார அமைச்சின் செயலாளர் கலாநிதி நிஹால் ஜயதிலக்க தெரிவித்துள்ளார்.**

டெங்கு நோய்த்தடுப்பு மற்றும் அதற்கென சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுவரும் நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

நாடளாவிய ரீதியிலுள்ள 4 மில்லியன் மாணவர்களுக்கு டெங்கு நோயின் பாதிப்பு தொடர்பில் அறிவூட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், அதற்கு முன்னோடியாக மாகாண, மாவட்ட, வலய மட்டத்திலான கல்விப் பணிப்பாளர்களைக் கொழும்புக்கு அழைத்து விசேட செயலமர்வொன்றை நடத்தவும் தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டு மரணமடைந்தவர்கள் தொடர்பில் அதற்கான காரணங்களைக் கண்டறியவும் சிகிச்சைக்கான குறைநிறைகளை கண்டறிந்து அதனை நிவர்த்தி செய்யவும் துறைசார் அனுபவம் கொண்ட இரு இளைப்பாறிய அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்ட அவர், கூரைகளிலுள்ள பீலிகளை அகற்றுவது தொடர்பான முடிவு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்த பின்னரே எட்டப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கையைப் பொறுத்தவரை 1996 ஆம் ஆண்டில் டெங்கு மரணம் ஆயிரத்துக்கு 45 என்ற வீதத்தில் இருந்து சுகாதார அமைச்சின் நடவடிக்கையினால் 2009 இல் இது வெகுவாக குறைவடைந்து ஆயிரத்துக்கு 7 ஆக இருந்தது. இவ் எண்ணிக்கையை ஆயிரத்துக்கு ஒன்று என குறைப்பதே இவ் வருடத்தின் இலக்காகும்.

இக்காலகட்டங்களில் பாடசாலைகளில் டெங்கு பாதிப்பு அதிகரித்து வருவதை அறியமுடிகின்றது. பாடசாலை சுற்றாடல் மற்றும் வீட்டு சுற்றாடல் தொடர்பில் ஒவ்வொரு மாணவருக்கும் தெளிவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும் தற்போது கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய கல்வியமைச்சுடன் இணைந்ததாக பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொள்ளவும் ஆசிரியர்களுக்கு விசேட அறிவூட்டலை இது தொடர்பில் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, தாய்லாந்தில் டெங்கு நோய் தடுப்பு மத்திய நிலையத்தில் பயிற்சிகளை பெறுவதற்காக 15 வைத்தியர்கள் தாய்லாந்துக்கு அனுப்பப்பட்டு அவர்கள் பயிற்சி முடித்து நாடு திரும்பியுள்ள னர்.

அவர்கள் இங்கு மேலும் பெருமளவு வைத்தியர்களுக்கு டெங்கு ஒழிப்பு தொடர்பிலும் சிகிச்சை முறைகள் தொடர்பிலும் பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

இவ்வாறு பயிற்சி பெறுவோரை டெங்கு நோயாளர்கள் அதிகமாக சிகிச்சை பெற்றுவரும் வைத்தியசாலைக்கு நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் டெங்கு மரணங்கள் தொடர்பில் ஆராய்ந்து எதிர்காலத்தில் அதனை மேலும் கட்டுப்படுத்தவும் விசேட நிபுணர்கள் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-5)

## 3பேருந்துகள் மோதின; 16 பேர் காயமடைந்தனர்

(கொழும்பு)

ஹபராதுவ பொலிஸ் பிரிவின் ஹெடிவத்தை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 16 பேர் காயமடைந்துள்ளனர்.

மூன்று பேருந்துகள் ஒன்றன் பின் ஒன்றாக மோதியதிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

ஊழியர்களை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்து ஒன்றுடன், பின்னால் வந்த பயணிகள் பேருந்து ஒன்று மோதியுள்ளது. இதனால் ஊழியர்களை ஏற்றிச் சென்ற பேருந்து முன்னால் சென்ற மற்றுமொரு பயணிகள் பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் காயமடைந்தவர்கள் கராப்பிட்டிய மற்றும் ஹபராதுவ கலுகல கிராமிய வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய பயணிகள் பேருந்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதோடு, ஹபராதுவ பொலிஸார் மேலதிக விசாரணை களை மேற்கொண்டுவருகின்றனர். (அ-5)



யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் சதுரங்கச் சுற்றுப் போட்டிகள் அண்மையில் நடைபெற்றன. இப்போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி சார்பாக 15,19 வயதுப் பிரிவு அணிகள் பங்கு பற்றியிருந்தன. இதில் யாழ்.இந்து 15 வயதுப் பிரிவு சதுரங்க அணி மாகாண ரீதியில் முதலாம் இடத்தையும் 19 வயதுப் பிரிவு சதுரங்க அணி இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட 15 வயதுப் பிவு அணியினரைப் படத்தில் காணலாம். (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)

## 13ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்யமுடியாது; ஆனால் முடியும்

### அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரமுடியாது என எவருக்கும் ஆணித்தரமாக தெரிவிக்கமுடியாது எனவும் மக்களின் விருப்பு வெறுப்புகளை உள்வாங்கி 13 ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றம் கொண்டுவருவதில் தவறில்லை எனவும் தகவல் ஊடகத் துறை அமைச்சர் கெஹலிய ரம்புவெல தெரிவித்தார்.

குண்டசாலை பிரதேசத்தில் 278 இலட்சம் ரூபா நிதியில் நிர்மாணிக்கப்பட்ட காப்பெற் வீதியை மக்களின் பாவனைக்கு திறந்து வைக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு பேசும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

13 ஆவது திருத்தம் ஏற்படுத்தப்பட்டு தற்போது 25 வருடங்களின் பின் நாட்டின் சனத்தொகை 22 மில்லியனாக உள்ளது. இந்த நிலையில் அன்று மக்களின் அபிலாசைகளுக்கு அப்பால் நின்று வெறுமனே இருவரினது விருப்பத்துக்கு ஏற்பவே இது ஏற்படுத்தப்பட்டது.

13 ஆவது திருத்தத்தில் மீண்டும் அவ்வாறான நிலையை நாம் கொண்டுவர தயாரில்லை. ஆனால், தற்போது மக்களின் விருப்புவெறுப்புகள் உள்வாங்கப்பட்டு மக்களுக்கு அதனால் பயனிருக்கும் பட்சத்தில் திருத்தத்தில் மாற்றம் கொண்டு வருவதில் தவறில்லை என தெரிவித்துள்ளார். (அ-5)

## நாட்டின் வங்கி முறைமைகள் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளன

### மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை இணையத்தளங்கள் தற்போது எதிர்நோக்கியுள்ள சைபர் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும் வகையில் இலங்கையின் வங்கி முறைமை நவீனமயப்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார். இலங்கையின் வங்கி முறைமை நவீன தொழில்நுட்பத்துறைக்கமைய விஸ்தரிக்கப்பட்டுள்ள போதிலும் இணையம் மூலம் மேற்கொள்ளப்படும் தாக்குதல் மற்றும் குற்றச் செயல்களைத் தவிர்க்கும் வகையில் பொறுப்புடன் செயற்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். இணைய பாதுகாப்பு தொடர்பான ஒருநாள் மாநாடு ஒன்று நேற்று கொழும்பில் இடம்பெற்றது. இதில் கௌரவ அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

இணையத் தாக்குதல் மற்றும் குற்றச் செயல்கள் நவீன உலகில் மிகவும் பாரதூரமானவையாக காணப்படுகிறது. எனினும் சகல சவால்களுக்கும் முகம்கொடுத்த நிலையில் தகவல் தொழில்நுட்பப் பாவனையை இலங்கையில் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு 35 வீதமாக காணப்படுகிறது. இந்நிலையில் அடுத்த ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் அவற்றை 65 தொடக்கம் 70 வீதமாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த பத்தாண்டு காலப்பகுதிக்குள் இலங்கையின் அரசதுறையில் தகவல் தொழில்நுட்பத்துறையின் பாவனை அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், நாளுக்கு நாள் அரசதுறையில் பாரிய வளர்ச்சி காணப்பட்டு வருகிறது. இதன்மூலம் மக்களுக்கான சேவைகள் இலகுபடுத்தப்பட்டு வருகின்றன என குறிப்பிட்டார்.

மேலும் வரி, தண்ணீர், மின்சாரம், தொலைபேசி போன்ற மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் சேவைகளுக்கான கட்டணங்களை இணையத்தைப் பயன்படுத்திச் செலுத்தும் வகையில் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளதாகவும் இணையத்தை பயன்படுத்தி குற்றச்செயல்களை மேற்கொண்டு வருபவர்கள் தொடர்பில் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (அ-5)

## போலி விசாக்களை தயாரித்த இருவர் பொலிஸாரால் கைது

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்புகளுக்காக அனுப்புவதாக கூறி போலி விசாக்கள் தயாரித்த இருவரை புத்தளப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

போலி விசா தயாரிப்பதற்காக பயன்படுத்திய கணனியொன்றையும் ஏனைய ஆவணங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். போலி விசா தயாரிக்கும் அலுவலகமொன்று புத்தளத்தில் இயங்குவதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் புத்தளம் புலனாய்வுப் பிரிவினர் கடந்த 24 ஆம் திகதி இந்த சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது புத்தளம் நகரைச் சேர்ந்த ஒருவரும், புத்தளம் கொட்டுகச்சி பகுதியைச் சேர்ந்த ஒரு நபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய கிழக்கு நாடொன்றுக்கு செல்வதற்காக ஒரு விசாவை பெற்றுக் கொடுக்க 2 இலட்சம் ரூபா வரையில் அறிவிட்டுள்ளார். இவ்வாறு பலரிடம் பல இலட்சம் ரூபாவை மோசடி செய்துவந்துள்ளமையும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

போலி விசா தயாரித்தல், பண மோசடிகள் செய்தல் தொடர்பில் பாரிய வலையமைப்போன்று இயங்குவதாகவும் தெரிவித்த பொலிஸார் கைது செய்யப்பட்டவர்கள் மீது விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தரிடம் எனது ஆன்மீகப் பயணம்



## ஆன்மீகம் 44

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

...மதிய உணவு அருந்தி பின் ஓய்வெடுக்கும்போது திரு.நிவாஸ் அவர்கள் என்னை சித்தரிடம் அடுத்த பிரதமர் யார் எனக் கேளுங்கள் என்றார். அப்போது டில்லி அரசியல் சூழ்நிலை மிகவும் பரபரப்பாக இருந்தது. நானும் தயங்கியவாறு சித்தர்பெருமானிடம் இதைக்கேட்டேன். அவர் சற்றும் தயங்காமல் இந்திரன் பேரன் ராஜீவ் காந்தி என்றார்.

இதைக்கேட்டதும் திரு.நிவாஸ் அவர்கள் எரிச்சலுடன் என்னய்யா இது? ஒரு விமான பைலட் போய் இந்த நாட்டில் வருங்கால பிரதமர் என்கிறாரே! ஏன் இவர் சம்பந்தா, சம்பந்தமில்லாமல் பேசுகிறார். சரி சரி மருந்தை வாங்கிக் கொடுங்கள் புறப்படலாம் என்றார்.

நானும் அவர் இஷ்டப்படி செயற்பட்டேன். அவர் சென்னைக்கு புறப்பட்டுச் சென்றார். நான் ஆச்சிரமத்தில் தங்கிவிட்டேன். சாமி ஏன் அப்படிக் கூறினார். அவரை உளறுகிறார் என்று சொல்லி சென்று விட்டாரே நிவாஸ் என்று மனம் வேதனைப்பட்டது.

மறுநாள் என் மனத்தவிப்பு தாளமல் சித்தரை அணுகினேன். என்ன சாமி ஒரு பைலட்டைப்போய் பிரதமர் என்கிறீர்கள். அவருக்கு அரசியலே பிடிக்காது. அதோடு அவர் மணந்திருப்பது ஒரு இத்தாலிய நாட்டுப்பெண் சஞ்சய் காந்தியாவது அரசியலில் தீவிரமாக இருந்தவர். இவரைப் போய் சொல்லுகிறீர்களே! இது எப்படிசாத்தியமாகும்? என்றேன்.

ராஜா! பொறுத்திருந்துபார்! டெல்லி நாற்காலியில் நேரு குடும்பத்தைத் தவிர யார் உட்கார்ந்தாலும் அந்த நாற்காலி ஆடும். சமயத்தில் கவிழ்ந்து விடும். எல்லா நாட்டு தலைவர்களுமே சித்தர்கள் வழி வந்தவர்கள்தான். இங்கிலாந்து அர்ச்சுனன் நாடு பாம் பாட்டிச் சித்தரின் அவதாரம் தான் ஐந் தாம் ஜார்ஜ் மன்னன். ராஜீவ் பைல ட்டாக இருந்தால் என்ன?

சித்தர் ஆச்சிரமத்தில் அன்னை சித்தர் தியாகிகளுடன் அன்னக்கொடி ஏற்றுதல்



ஆகாயத்தில் பிளேன் ஓட்டுபவரு க்கு நாடாள முடியாதா? பொறுத் திருந்து பார்! அவரை பிரதமர் ஆக்கிக் காட்டுகிறேன். என்றவர் ஏதோ நினைவுக்கு வந்தவர்போல் என்ன சொன்னீர்கள் சோனியா இத்தாலியப் பெண்ணா? அவர் சாதாரண பெண் ணல்ல. இந்த நாட்டின் வருங்கால அரசியலில் இவர் பதவிக்கு வரலாம். அவர் மகள் பிரியங்காவும் இந்நா ட்டை ஆளலாம்.

அந்த குடும்பமே எனக்கு கடமைப் பட்டவர்கள். 2000க்கு மேல் அவர்களுக்கு வேண் டிய தெய்வீகமான உதவி கள் கிடைக்கும். அது கூட என் மூலமாகக் கிடைக்கும்.

இது காலத்தின் கட் டாயம்! என்றவர் மௌ னமானார்.

அந்த மௌனத்திற் குப் பொருள் பத்து நாட்களில் எனக்குப புரிந்தது. அந்த மகான் சொன்ன வேதவாக்கு நிகழ்ந்தது. இந்திரா காந்தியை மதவெறியர்கள் சுட்டுக் கொன்றார்கள். ராஜீவ் காந்தி பாரதப் பிரதமரானார்!

என்ன சாமி! அன்று மகாத்மா காந்தி இன்று இந்திராகாந்தி என் றேன். பதபதப்போடு ஆமாம்! இது இரண்டாவது காந்தி என்று கூறினார்.

முன்பு ஒருமுறை தினத்தந்தி பத்திரிகையில் திரு. எம்.ஜி.ஆர் அவர் கள் செல்வி ஜெயலலிதாவிடம் ஒரு திருசூலத்தை பரிசளிக்கும் காட்சி புகைப்படமாக வெளியிடப்பட்டு இருந்தது. இதைக் கண்ட சித்தர் பெருமான் ராஜா! இதைப் பார்த் தியா? இந்த அம்மாவிடம் சக்தியை கொடுத்துவிட்டார் எம்.ஜி.ஆர். நான் புரியாமல் நோக்க, சக்தின்னா ஆங் கிலத்திலே பவர்ன்னு தானே சொல் லுவாங்க. அதைத் தான் சொன்னேன் என்று சிரித்தார்.

தொடரும்

# இலங்கையின் ஆதிக்குடிகள் நாகர், இயக்கர், வேடர்!

05

மகாவம்சம் கூறுவது:-

சிங்களம் மட்டுமே இலங்கின் ஒரே பூர்வீக இனமாகும். ஏனைய சமூகங்கள் இந்த நாட்டுக்கு வந் துள்ள வருகையாளர்கள் ஆவர். அவர்களது வருகையை நாம் பௌத்தர்களுக்குரிய இரக்க குணம் காரணமாக எதிர்ப்புக் காட்டாது விட்டு விட்டோம். ஆனால், இந்தக் கருணையை அவர்கள் வெறுமனே எடுத்துக்கொள்ளக் கூடாது. இங்கே முஸ்லிம்கள் இருக்கிறார்கள் என் றால் எமது அரசர்கள் அவர்களை வாணிகம் செய்ய அனுமதித்தார்கள். தமிழர்களைப்பொறுத்தளவில் அவர் கள் இந்தியாமீது மொகலாயர்கள் படையெடுத்தபோது அடைக்கலம் கேட்க அனுமதிக்கப்பட்டவர்கள். இப்போது நடப்பது என்னவென்றால் அந்த வருகையாளர்கள் முற்றிலும் செய்நன்றி இல்லாது நடந்துகொள் கிறார்கள். சிங்கள- பௌத்த பேரினவாதிகள் இலங்கை முழுவதும் தங்களுக்கே உரியதென்றும் இல ங்கை சிங்கள- பௌத்தர்களுக்கு உரிய நாடென்றும் தமிழர்கள் படையெடுத்து வந்தவர்கள், காலி கள், கொள்ளைக்காரர்கள், புற சமயத்தவர் என்றும் மகாவம்சம் சித்தரிக்கிறது. இன்றைய சிங்கள- பௌத்த இனவாதிகள் மலைநாட்டத் தமிழர்கள் கூலிவேலை செய் வதற்காகத் தென்னிந்தியாவில் இருந்து இங்கு கொண்டு வரப் பட்டவர்கள என்கிறார்கள். அந்த மக்கள் இந்த நாட்டில் குடியேறி 200 ஆண்டுகளாகிவிட்டன. மாடாக உழைத்து காடுகளை பசுந்தோட் டங்களை உருவாக்கி ஓடாகப் போனவர்கள். அப்படியிருந்தும் அந்த மக்களைக் கேவலமாகப் பார்க்கும் போக்கே காணப்படுகிறது. ஒட்டு மொத்தத்தில் தமிழர்களுக்கு எதிரான இனவாதத்தை இந்த சிங்கள- பௌத்த இனவாதிகள் தென் னிலங்கையில் விதைத்து வருகிறார் கள். இலங்கில் உள்ள தமிழர்களை அடக்கி ஒடுக்கி அவர்களது நிலத்தை அபகரித்து அவர்களது அடை யாளத்தை அழித்துவிடத் திட்ட மிடச்செய்யப்படும் எத்தனம் இது வாகும்.

மறுபுறம் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் தங்குதடையின்றி நடந்த கொண்டிருக்கிறது. பாவற்குளத்தில் ஆசியாவில் மிக உயரமான புத்தர் சிலை கட்டுவதற்கான ஆயத்தங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. பாவற் குளம் நூறு விழுக்காடு தமிழ்க் கிராமமாகும். இதே வேகத்தில் சிங்களக் குடியேற்றம் தொடரு மானால் கிழக்கு மாகாணம் போல வடக்கிலும் தமிழர்கள் சிறுபான்மை ஆக்கப்பட்டுவிடுவர் என்பது நிச்சயம்.

### பாவற்குளம்

உண்மையில் இலங்கையின் பூர்வீக குடிமக்கள் யார்? இந்தநாடு சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் உரியது என்பதை எல்லோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அதை ஏற்றுக்கொள் ளாதவர்கள் நாட்டைவிட்டு வெளி யேற வேண்டும் என்று பொதுபல சேனாவின்தலைவர் ஞானசார கல பொட தேரர் கூறியிருக்கிறார். இதற்கு மறுப்புத் தெரிவித்த ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோக ணேசன் இந்த நாட்டின் ஆதிக் குடிகள் வேடர்கள், நாகர்கள் என்பதை கலபொடதேரர் ஏற்றுக்கொள்ளாத வர்கள் நாட்டைவிட்டுவெளியேறத் தத்தம் மூதாதையர்கள் வந்த நாடு களுக்குத் திரும்ப வேண்டும். ஏன் பௌத்த மதம கூட இந்தியாவில் இருந்து வந்ததுதான். அதையும் பாரத நாட்டுக்குஅனுப்பி வைக்க வேண்டும். எனவே, இத்தகைய நடைமுறைச் சாத்தியமில்லாத கூற்றுக்கள் கூறுவதை நிறுத்த வேண்டும் என கொழும்பில் மே 22 2013 அன்று இடம்பெற்ற அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கத்தின் ஊடக மாநாட்டில் உரை யாற்றும் போது தெரிவித்தார்.



தொடர்ந்து பேசு கையில், தமிழர் களின் நிலம், கடல் பறிபோகின்றது. தமிழர்களின் மொழி, கலாசாரம் மதம் அழித்தொழி க்கப்படுகிறது. அர சியல் அமைப்பில் 13- வது திருத்தம் என்ற உரிமையைக் கூட வழங்க மறு த்துவிட்டு இந்த நாட்டை, சிங்கள, பௌத்த நாடு என்று அறிவிக்கின்றீர்கள். விமல்வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க, குணராச அமரசேகர, ஞானசார கால பொட தேரர் ஆகியோர உசுப்பி விடப்பட்டுள்ளனர். இதற்குப் பின் னால் இந்த அரசு இருக்கின்றது எனக் குற்றம் சாட்டினார்.

சிங்கள- பௌத்த பேரினவாதகள விஜயனது வருகையோடுதான் இலங் கைத் தீவின் வரலாறு தொடங்குகிறது எனப்பேசியும் எழுதியும் வருகி றார்கள். ஆனால், இந்தக் கதையைக் கூறும் மகாவம்சமே விஜயனது வருகைக்கு முன்னர் இலங்கைத் தீவில் நாகர், இயக்கர், அரக்கர், புலிந்தர் இருந்தனர் என்றும் அவர்கள் கொற்றமும் கொடியோடும் அரசாட்சி செய்தார்கள் என்றும் கூறுகிறது.

விஜயனது வருகைக்கு முன்னர் நாகர், இயக்கர் வம்சத்தைச் சேர்ந்த மன்னர்களே இலங்கையை ஆண்டு வந்தார்கள். அந்த அரசர்களுள் மணியக்கிகா,மகோதரன், குலோதரன் ஆகிய நாகவம்ச மன்னர்களும் குவேனி, மஹாகல சேனன் ஆகிய இயக்க வம்ச மன்னர்களும் குறிப் பிடத் தகுந்தவர்கள்.

### இலங்கையில் உள்ள நாகர் புத்தர்சிலை

மகாவம்சம் மற்றும் ஜாதக கதைகள் இலங்கையை தம்பபாணி எனக் குறிப்பிடுகிறது. இலங்கையில் உள்ள நாகதீபம், கல்யாணி என்ற இடங் களையும் அங்கே இயக்கர்களும் இயக் கிகளும் வாழ்ந்தார்கள் எனக் குறிப் பிடுகின்றன. மகாவம்சம் இயக்கர்கள் தெற்கிலும் நாகர்கள் வடக்கிலும் வட மேற்கிலும் வாழ்ந்ததாகக் குறிப் பிடுகிறது. இவர்கள் திராவிட இன மக்களாவர்.

நக்கீரன்

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## குருவை மதிக்காத சிஷ்யன்!



பிரம்மதத்தன் காசியை ஆண்ட காலத்தில் போதிசத்வர் குத்திலன் என்ற வீணை வித்வானாக இருந்தார். அவர் தம் பதினாறாவது வயதிலேயே தமக்கு இணையாக யாராலும் வீணை வாசிக்கமுடியாது என்பதைக் காட்டிவிட்டார். அவரது புகழ் எங்கும் பரவி இருந்தது. இதைக் கண்ட காசி மன்னனும் அவரைத் தன் ஆஸ்தான வித்வானாக நியமித்துக் கொண்டான்.

இது நடந்து சில ஆண்டுகளுக்குப் பின் காசியிலிருந்து சில வியாபாரிகள் உஜ்ஜயினி நகருக்குத் தம் தொழில் சம்பந்தமாகச் சென்றனர். அவர்கள் குத்திலானது வீணைவாசிப்பைப் பல முறை கேட்டு ரசித்து மகிழ்ந்தவர்கள். உஜ்ஜயினியில் தம் வேலை சற்றுத் தாமதமாகும் என்பதால் சில நாட்கள் தங்கினர். அப்போது ஒரு நாள் இரவு யாரையாவது வீணை வாசிக்கச் சொல்லி கேட்கலாம் என அவர்கள் நினைத்தனர்.

**அம்புலிமாமா கதைகள்**

யாராவது நல்ல வீணை வித்வான் இருக்கிறாரா என அவர்கள் விசாரித்த போது, பலர் மாசிலன் என்ற பெயரைக் கூறினார்கள்.

காசி வியாபாரிகள் தம் பொழுது போக்கிற்காக மாசிலனை வீணைக் கச்சேரி செய்ய அழைத்து வந்தார்கள். ஆனால், மாசிலனது வீணை வாசிப்பு அவர்களில் ஒருவரைக் கூட கவரவில்லை. அவர்கள் ரசிக்கவும் இல்லை. இதைக் கண்ட மாசிலன் "நான் இவ்வளவு நேரமாக வீணை வாசித்தது எப்படி இருந்தது?" என்று கேட்டான். அப்போது காசி வியாபாரிகளில் ஒருவன் நீங்கள் வீணை வாசித்தீர்களா? "நீங்கள் சுருதி கூட்டினீர்கள் என்றல்லவா நினைத்தேன்" என்றான்.

அதைக்கேட்ட மாசிலனின் முகம் அவமானத்தால் சுண்டியது. அவன் அவர்களிடம் "அப்படியானல் என்னை விட நன்கு வாசிக்கக்கூடிய வீணை வித்வான் இருக்கிறார் என்று தானே பொருள்" என்று கேட்டான்.

"அப்போது இன்னொருவன் அப்படியானால் நீங்கள் எங்கள் காசி வீணை வித்வானை பற்றிக் கேள்வி பெரிய வித்வானா?" என்று மாசிலன் கேட்டான். வேறொருவனோ "அவரது வீணை வாசிப்பை கேட்ட பின், நீங்கள் வீணையை வாசிப்பதைக் கேட்டுச் சகித்துக் கொண்டிருக்க முடியுமா?" என்றான். அப்போது மாசிலன் நான் அவருக்குச் சமமாக வீணை வாசித்துக் காட்டி உங்களிடமிருந்த பணம் வாங்கிக் கொள்கிறேன். இப்போது நீங்கள் எனக்கு பணம் கொடுக்க வேண்டாம். எனக் கூறி அங்கிருந்து



கிளம்பிச் சென்றான்.

மாசிலன் அன்றே உஜ்ஜினியை விட்டுக் கிளம்பி காசி நகரை அடைந்தான். அங்கு குத்திலனான போதிசத்வரைக் கண்டு ஜயா! நான் உஜ்ஜினியை சார்ந்தவன். தங்களிடம் வீணைப்பயிற்சி பெற வந்திருக்கிறேன். தங்கள் தயவு இருந்தால் தங்களைப் போல வீணை வாசிக்கும் பேறு பேறுவேன் என்றான். போதிசத்வரும் அவனைத் தம் சீடனாக ஏற்று தினமும் வீணையில் அவனுக்குப் பயிற்சி அளிக்கலானார். மாசிலனும் குததிலனான போதிசத்வரிடம் நன்கு வீணை கற்றலானான்.

இப்படியாக சில ஆண்டுகள் கழிந்தன. ஒரு நாள் போதிசத்வர் தம் சீடனிடம் "நீ என்னிடம் கற்க வேண்டியதெல்லாம் கற்றாகி விட்டது. இனி நீ உன் நாட்டிற்குத் திரும்பிச் செல்லலாம்" என்றார். மாசிலனுக்கோ உஜ்ஜயினிக்குத் திரும்பிப்போக இஷ்டமே இல்லை. காசியிலேயே அரச சபையில் உத்தியோகத்தில் அமர்வது என அவன் தீர்மானித்துக் கொண்டான். அவன் போதிசத்வரிடம் "குருவே! நான் உஜ்ஜயினிக்குப் போக விரும்பவில்லை. உங்களுக்குத் தெரிந்ததெல்லாம் நானும் கற்றுக் கொண்டு விட்டதால் உங்களோடு எனக்கும் சமஸ்தானத்தில் வித்வானாக இருக்கும் வேலையை வாங்கிக் கொடுங்கள். நான் உங்களுக்கு மிகவும் கடமைப்பட்டவனாக இருப்பேன்" என்றான்.

போதிசத்வரும் மறுநாள் காசி மன்னனிடம் மாசிலனுக்கு வேலை போட்டுக் கொடுக்கும்படி கேட்டார். மன்னனும் "மாசிலன் உங்கள் சீடன் என்பதற்காகத்தான் நான் அவனை வேலையில் வைத்துக்கொள்ள வேண்டும். இதற்கு அவனுக்கு உங்களுக்குக் கிடைக்கும் சம்பளம் அளவிற்குக் கொடுக்க முடியாது. உங்களுக்கு கொடுப்பதில் பாதிதான் கொடுப்பேன். இதற்கு சம்மதமானால் அவன் இந்த வேலையை ஏற்கட்டும்" என்றான்.

போதிசத்வரும் வீடு திரும்பி மாசிலனிடம் மன்னன் கூறியதைச் சொன்னார். மாசிலன் அது கேட்டு மனம் வருந்தினான். இது என்ன நியாயம்! ஒரே மாதிரியாக உள்ள இருவரில் ஒருவருக்கு நிறையச் சம்பளம்? மற்றவனுக்கு அதில் பாதியா? மன்னனிடமே இதற்கு விளக்கம் கேட்கஎண்ணி அவன் மன்னனைச் சந்தித்தான்.

அப்போது, "அரசே, இப்போது ஆஸ்தான வித்வானாக உள்ளவரின் சம்பளத்தில் பாதி கொடுத்து என்னை வேலைக்கு வைத்துக் கொள்வதாகக் கூறினீர்களாமே. நான் எந்த விதத்தில் அவரைவிடக் குறைந்து போனேன்? அவர் எப்படியெல்லாம் வீணை வாசிக்கிறாரோ அதுபோல என்னாலும் வாசிக்கமுடியும். இது பற்றி என் குருவிடமே நீங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். எனவே நீங்கள்



எனக்கும் அவருக்குக் கொடுக்கும் அளவிற்கு சம்பளம் கொடுங்கள்" என்றான்.

மன்னனுக்கு எரிச்சலாக இருந்தது. அவன் "நீ குத்திலரின் சீடன் என்ற ஒரே காரணத்திற்காகத் தான் உனக்கு உத்தியோகம் அளிக்கச் சம்மதித்தேன். நீ அவருக்குச் சமமான வீணை வித்வான் என நான் எப்படி நம்ப முடியும்?" என்று கேட்டான். மாசிலனும் "நீங்கள் எனக்கும் அவருக்கும் போட்டி வைத்துப் பாருங்கள். அப்போதுதெரியும்" என்றான். காசி மன்னனும் அதற்கு இணங்கி ஒரு போட்டியை வைத்தான். "நீ இந்தப் போட்டியில் வென்றால் உனக்கு இங்கே உத்தியோகம் கிடைக்கும். தோற்றால் நீ இந்த நாட்டை விட்டே ஓடி விடவேண்டும்" என்றான். மாசிலனும் அதற்கு இணங்கினான்.

மறுநாளே குருவிற்கும் சீடனுக்கும் இடையே போட்டி நடந்தது. அந்த போட்டியைக் காண்பதற்காகவும், கேட்பதற்காகவும் ஏராளமானோர் கூடி விட்டார்கள். இருவரும் ஒருவரை மற்றவர் வெல்வதற்காக வீணையை வாசிக்கலானார். அவர் ஏதோ புதிதாய் செய்கிறார் என்றெண்ணிய மாசிலன் தன் வீணையின் ஒரு கம்பியை அறுத்துவிட்டு அவரைப்போல வாசித்தான்.

போதி சத்வரின் வீணையில் மேலும் இரு கம்பிகள் அறுத்து போகவே, ஒரே கம்பியில் வாசித்தார். மாசிலனும் அவரைப் பார்த்து தன் வீணைக் கம்பிகளில் இரண்டை அறுந்து விட்டு ஒரே கம்பியில் வாசித்தான். போதிசத்வரின் வீணையின் கடைசி கம்பியும் அறுந்தது. கம்பி இல்லாமலேயே வீணையிலிருந்து அவர் இனிய நாதம் கிளம்பி வரச் செய்தார்.

மாசிலனும் தன் வீணையின் கடைசிக் கம்பியை அறுத்துவிட்டு வாசிக்க முயன்றான். ஆனால் அவனது வீணையிலிருந்து எவ்வித நாதமும் வரவில்லை. சபையோர் போதிசத்வரைப் பாராட்டினார்கள். மாசிலனை கேலி செய்தார்கள்.

குருவின் திறமை தெரியாமல் அவரை போட்டிக்கு இழுத்த



மாசிலனுக்கு பெருத்த அவமானம் ஏற்பட்டது. அன்றே தன் ஊரான உஜ்ஜயினிக்குக் கிளம்பி விட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்வாய்ப்பு பெற உதவி செய்யாத பட்டப்படிப்புகளிலிருந்து விலகி விட முடியுமா?



பேராசிரியர் மா.சின்னத்தம்பி

அறிமுகம்

பரீட்சையிற் சித்தி பெற்றார்களோ, பெறவில்லையோ என்பதனுடன் தொடர்பற்ற வகையில் பரீட்சைக்கு முன்னரோ, பின்னரோ பாடசாலைகளிலிருந்து விலகியவர்களிற் பெரும்தொகையானோர் வேலையற்றவர்களாக விரக்தியுடன் உள்ளனர்.

இளைஞர்களின் மன அமைதியின்மைக்கு ஏனைய பிரதான காரணங்கள் இருந்திருப்பினும் மூன்றாம் நிலைக்கல்வி உட்பட கல்விமுறையின் குறைபாடுகள் பிரச்சினையின் மூலாதாரங்களில் ஒன்றாக இருப்பதனை தேசியக் கல்வி ஆணைக் குழு உணர்ந்தது.

தேசிய கல்வி ஆணைக்குழு 1992:01 இருபது வருடங்களுக்கு முன்பு தேசிய கல்வி ஆணைக்குழு தன் முதலாவது அறிக்கையில் குறிப்பிட்டவாசகங்கள் தற்போதைய நிலைமைக்கும் அப்படியே பொருந்துகின்றன.

இதை உணர்ந்த பாராளுமன்ற ஆலோசனைக்குழு கல்வித்துறையின் குறைபாடுகளை தற்போது ஆராய்ந்துள்ளது.புதிய மாறுதல்களை முன்மொழிகின்றது.புதிய சட்டம் கொண்டு வருவதில் அக்கறை கொண்டுள்ளது. கலைத்துறையிலான விரயம் குறைக்க வழி கண்டுள்ளது. இலங்கையில் க.பொ.த. உயர் தரத்தில் விஞ்ஞானத்துறையில் 21 சதவீதத்தினரே கற்கின்றனர். 27 சதவீதத்தினர் வணிகத் துறையில் உள்ளனர். வருடாந்தம் 52 சதவீதத்தினர் (2 இலட்சம் பேர்) கலைத்துறையில் நுழைந்து பெரிதும் விரயமாகின்றனர்.

இதனைக் குறைக்க புதிய மாறுதல்கள் அறிமுகமாகின்றன. அவை பற்றி இன்று கலந் துரையாடப்படுகின்றது.

### பட்டம் வழங்க விரும்பாத தொழில் நுட்பக்கல்வி

இலங்கையில் முறைசார் கல்வி ஏற்பாட்டில் நீண்ட காலமாக திறன்களின் விருத்தியும் அதனுடன் இணைந்த தொழில் நுட்ப பாடங்களுக்கான முன்னுரிமையும் கவனிக்கப்படவில்லை.

தொழில்சார் கல்வி என்பது தொடர்பாக இலங்கையில் பல்வேறு அமைச்சுக்கள் கவனம் செலுத்தி வந்துள்ளன. தொழிற் பயிற்சி நிறுவனங்களின் பரம்பல் மற்றும் வலையமைப்பு இதற்கு மிகவும் சிறந்த உதாரணமாகும். தற்போது ஏறக்குறைய 235 இத்தகைய பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன.

பின்வரும் அரச துறை சார்ந்த நிறுவனங்கள் இத்தகைய தொழில்சார் பயிற்சியை வழங்கி வருகின்றன.

1. தொழிற்கல்வித் திணைக்களம்
2.தொழிற் பயிற்சி அதிகார சபை
3. தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
5. தேசிய தொழில் பயிலுநர் மற்றும் பயிற்சி அதிகார சபை

இவற்றுக்கு மேலதிகமாக குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான தனியார்துறை நிறுவனங்கள் பெரிதும் நகரங்களை அண்டி செயற்பட்டு வருகின்றன.

தற்போது இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்துடன் இணைந்து வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களம் மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவுடனான நான்கு மாத தொழிற்பயிற்சி பற்றி விளம்பரப்படுத்தியுள்ளது.

பயிற்சியின் முடிவில் தேசிய தொழிற் தகைமை மூன்றுக்கான (NVQ-3) சான்றிதழும் வழங்கப்படுமெனவும் அறிவித்துள்ளது.

இதன்படி அரச சார்பற்ற நிறுவனங்களும் இத்தகைய தொழில்சார் பயிற்சி மற்றும் கல்வி வழங்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

கல்வியமைச்சின் முறைசாரா கல்விப்பிரிவும் 1970 களின் நடுப்பகுதியிலிருந்து பாடசாலைகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப அலகுகளின் மூலமாக பாடசாலை விட்டு விலகியவர்களுக்குரிய தொழிற்பயிற்சி வாய்ப்புக்களை வழங்கி வருகின்றன.

1998 இலிருந்து 10 வயதுக்கு மேற்பட்ட மாணவர்களுக்கான எழுத்தறிவு மற்றும் தொழிற் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்கக் கூடிய 55 சமுதாய கற்றல் நிலையங்களை ஸ்தாபித்திருந்தது. அத்துடன் வருமானம் உழைப்பதற்கு உதவக் கூடிய திறன்களை பாடசாலைகளிலிருந்து இடைவிலகியவர்களுக்கு இலவசமாக வழங்கும் நோக்கத்துடன் நான்கு மாகாணங்களில் எட்டு செயற்பாட்டு பாடசாலைகளையும் ஏற்படுத்தியிருந்தது.

இவற்றை விட உயர் தர மட்டத்திலும் முறைசார் தொழில் நுட்பக் கல்வி பொறியியல் துறையில் மொரட்டுவ பல்கலைக்கழகத்துடன் இணைந்து தொழில் நுட்பவியல் நிறுவகத்தில் டிப்ளோமாத் தகுதி தொழில் நுட்பவியலில் வழங்கப்படுகின்றது. உயர்தர தொழில் நுட்பவியல் கல்விக்கான இலங்கை நிறுவனம் பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமாத் தகுதியை வழங்கியது. தேசிய பயிற்சி மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை பொறியியல் விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமாகத் தகுதியை வழங்குகின்றது.

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகமும் தொழில்நுட்பவியலில் டிப்ளோமாவை வழங்கி வருகின்றது.

மேற்கூறிய பல உயர் கல்வி நிறுவனங்களும் தொழில், தொழில்நுட்பம், தொழில் நுட்பவியல் தொடர்பான டிப்ளோமா தகுதிகளை வழங்கி வருகின்றது. இங்கு பட்டம்


கல்வித் தரிசனம்

வழங்கப்படுவதில்லை என்பது கவனிக்கத்தக்கது. வழமையான பாடங்களை கருத்தூன்றி படிப்பதற்கான மதிநுட்பம் அல்லது உளச் சார்பு இல்லாத பிள்ளைகளுக்கு அவர்களது நாட்டத்துக்கும் திறன்களுக்குமேற்ற கற்கை வசதி கள் பல திறந்து விடப்பட்டிருக்க வேண்டும்.

மரபு வழியான பதின்மூன்று வருட பாடசாலைப் படிப்பை தொடர்வதற்கான நிதிப்பலம், பெற்றோர் ஆதரவு, குடும்ப சூழல் மதிநுட்பத்திறன், உளச் சார்பு என்பன இல்லாத பிள்ளைகளுக்கு புதிய பாதைகள் நீண்ட காலமாக உரிய அங்கீகாரத்துடன் திறக்கப்படவில்லை. தமது இயல்பான ஆற்றல்களினடிப்படையில் சிறப்பான திறன்களை வளர்த்துக் கொண்டு பட்டம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் இதுவரை அகலப்படுத்தப்படவில்லை என்பது எமது தேசிய கல்வி முறையின் மிகப் பெரிய குறைபாடாக இருந்தது.

பல்கலைக்கழகத்தைப் போன்று உயர்தர மதிப்புமிக்க வேறு பல பட்டம் வழங்கும் தொழில் நுட்ப உயர்கல்வி நிறுவனங்களை உருவாக்குவது பற்றிய சிந்தனையும் முயற்சிகளும் நீண்ட காலமாக மேற்கொள்ளப்படவேயில்லை.

✦ சிங்கப்பூரில் பல்தொழில்நுட்பவியல் கல்லூரிகள்

✦ அமெரிக்காவில் சமுதாயக் கல்லூரிகள்

✦ அவுஸ்திரேலியாவில் (TAFE) தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்கள்

போன்ற பலவும் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்யும் வசதியான குடும்பத்து பிள்ளைகள் படித்து தொழில்நுட்ப பட்டம் பெற வகை செய்து வருகின்றன.

இத்தகைய சமாந்தரமான தொழில் நுட்பவியல் பட்டங்கள் வழங்குவது பற்றிய சர்வதேச உயர் கல்விப் போக்கிலிருந்து இலங்கை ஏன் விலகியிருந்தது? ஏன் விலகியிருக்க வேண்டும்? கலைத்துறையில் தொடர்ந்து இளைஞர்கள் குவிந்து வேலையற்ற பட்டதாரிகளாகி சமுதாய அமைதியின்மையை உருவாக்கி வரும் போக்கு பற்றி குறை சொல்லிக் கொண்டே அதனை நாம் ஏன் தொடர்ந்து பேணி வருகிறோம்?

இதற்கான பதில்கள் இப்போதுதான் எமது கல்வி முறைமையிலிருந்து பிரசவிக்கத் தொடங்கியுள்ளன. திறன் சார்ந்த ஆற்றல்களுக்கும் பட்டம் வழங்குவதும் பற்றியும் அத்தகைய சமாந்தரமான பட்டம் வழங்கும் தொழில் நுட்ப உயர் கல்வி நிறுவனங்கள் பற்றியும் பகிரங்கமாக கருத்தாடல் செய்யத் தொடங்கியுள்ளோம். இது மகிழ்ச்சி தரும் முற்போக்கு முயற்சியாகும்.

### புதிய தொழில்நுட்பபட்டங்கள்

எமது நாட்டின் பல்கலைக்கழகங்களில் தொழில்நுட்ப பட்டங்களை வழங்கப் போகிறோம். தொழில்நுட்பவியல்மாணி (B.Tech) என்ற புதிய பட்டம் வழங்க திட்டமிட்டுள்ளோம். 2016 ஆம் ஆண்டில் எமது மரபுவழிப்

## புதிதாக சிந்திப்போம்: சமூகத்திற்கான கல்வி

பல்கலைக்கழக முறையில் இத்தகைய புதிய பட்டம் வழங்கும் நடைமுறை ஆரம்பமாகும்.

இதற்கு வகை செய்யத்தக்கதாக எமது பாடசாலை முறைமையிலும் புதிய இடைச் செருகல் அறிமுகமாகவிருக்கின்றது. எமது பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர மட்டத்தில் (தரம் 12 மற்றும் 13) தற்போது மூன்று வகையான கற்கை நெறிகளே உள்ளன.

I கலைத்துறை
II வணிகத்துறை
III விஞ்ஞானத்துறை

எமது பல்கலைக்கழகங்களினால் வழங்கப்படும் தொண்ணூறுக்கு மேற்பட்ட கற்கைநெறிகளுக்கும் மேற்படி மூன்று நெறிகளிலிருந்தே மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

ஜூலை 2013 இலிருந்து எமது பாடசாலைகளில் 250 பாடசாலைகளைத் தெரிந்தெடுத்து அங்கு தொழில்நுட்பவியல் கற்கைநெறி (Technology Stream) அறிமுகப்படுத்தப்படும். பின் படிப்படியாக அதிகரிக்கப்படும். 2016 இல் 1000 பாடசாலைகளுக்கு இவை விரிவுபடுத்தப்படும்.

பிரதேச செயலர் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் குறைந்தது மூன்று பாடசாலைகள் என்ற அடிப்படையில் நாடு முழுவதிலுமிருந்தும் 1000 பாடசாலைகளை கல்வி அமைச்சு இனங்கண்டு தெரிவு செய்யும். இவை தர முயர்த்தப்படும்.

### இவை தொடர்பான முக்கியமான அம்சங்கள் பின்வருவன:

இத் தொழில் நுட்பவியல் கற்கை நெறி மூன்று பாடங்கள் காணப்படும்: அவை

✦ பொறியியல் தொழில்நுட்பவியல்/உயிரியல் தொழில்நுட்பவியல்.

✦ தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்

✦ கலை மற்றும் வணிக கற்கை நெறியில் உள்ள பத்து பாடங்களில் இருந்து யாதாயினும் ஒரு பாடம் தெரிவு செய்யப்படுதல்

இறுதி பரீட்சையின் போது எழுத்துப் பரீட்சையில் இருந்து 75% புள்ளிகளை பெற வேண்டும்.இது இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தினால் நடத்தப்படும்.

மிகுதி 25%புள்ளிகள் செய்முறை சார்ந்த அலகுகளிலிருந்து மதிப்பிடப்பட்டு வழங்கப்படும். இதனை இளைஞர் விவகாரங்கள் மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு (மதிப்பீட்டை) மேற்கொள்ளும்.

இசற்(Z) புள்ளிகள் இரண்டையும் (75+25) இணைத்து கணிக்கப்படும்.

இங்கு மரபு வழி அறிவு மற்றும் மரபு வழி பரீட்சைகளுக்கு 75% மும் புதிய திறன் சார் ஆற்றல் மற்றும் செய்முறைசார் மதிப்பீடுகளுக்கு 25% மும் வழங்கப்படுவது புதிய முன்னேற்றம் ஆகும்.

இதேபோல் மதிப்பீட்டிலும் பரீட்சைகள் திணைக்களமும் இளைஞர் விவகார மற்றும் திறன்கள் விருத்தி அமைச்சும் இணைந்து செயற்பட இருப்பதும் குறிப்பிடத்தக்க மாற்றமாகும்.

2016 ஆம் ஆண்டில் அரச பல்கலைக் கழகங்களில் உள்ள விஞ்ஞான பீடங்கள் புதிய தொழில்நுட்பவியல் புதிய அணி மாணவர்களை உள்வாங்குவதற்கு வசதியாக எதிர் காலத்தில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பவியல் பீடங்களாக மாற்றிய மைக்கப்படும்.

2016 இல் தொழில் நுட்பவியல்மாணி பட்டத்திற்கென 1500 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இதற்கு மேலதிகமாக தொழில்நுட்பவியல் கற்கை நெறியில் பாடசாலைகளில் கற்றவர்கள் பல்கலைக்கழகங்களில் உள்ள ஏனைய 40 பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களிலும் இணைந்து கொள்ள முடியும்.

2016 இல் இளைஞர் விவகார , திறன்கள் விருத்தி அமைச்சு நாடு முழுவதிலும் 25 பல்கலைக்கழக கல்லூரிகளையும் (University Colleges) ஸ்தாபிக்கவுள்ளது.

தொழில்நுட்பவியல் உயர்தர டிப்ளோமா (இரண்டு வருட) நிகழ்ச்சித்திட்டத்தில் 300 மாணவர்களை இந்த 25 பல்கலைக்கழக கல்லூரிகளும் சேர்த்துக் கொள்ளும்.

தொழில் நுட்பக்கல்லூரிகளுக்கும் இந்ததொழில்நுட்பவியல் கற்கை நெறி மாணவர்கள் முன்னுரிமை அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

கல்வியமைச்சு, இளைஞர் விவகார மற்றும் திறன்கள் விருத்தியமைச்சு, உயர் கல்வி அமைச்சு என்பன இணைந்து இதில் ஈடுபடுகின்றன. தேசிய கல்வி ஆணைக் குழு, தேசிய கல்வி நிறுவகம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்பன இணைந்து தொழில்நுட்பவியல் கற்கைக்கான பாடத்திட்டத்தை தயாரிக்கின்றன.

இதற்குத் தேவையான 250 தொழில் நுட்ப ஆய்வுகூடங்களுக்குரியவற்றை பெறுவதற்கு என 200 மில்லியன் டொலர்களை ஆசிய அபிவிருத்தி வங்கி வழங்குவதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

பழையவற்றில் இருந்து விலகி புதிய கற்கைகளில் இணைவோமா? தோல்விகளைத் தவிர்ப்போமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய ராஜ்ய சபை தேர்தல் களம்





தமிழக ராஜ்யசபை தேர்தல் ஆரவாரங்கள் அனல் பறக்கிறது. வெற்றிக் கோப்பையைப் பெறப்போவது யார் என்பதில் கடும் போட்டி நிலவுகிறது. மொத்த 234 சட்டமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து ஆறு ராஜ்யசபை உறுப்பினர்களைத் தேர்வு செய்யமுடியும். அதாவது, இந்திய நாடாளுமன்றத்தின் மேலவையைத் தான் ராஜ்ய சபை என்று கூறுகின்றோம். அப்படி தேர்வு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு ஆறு வருட காலம் பதவிக்காலமாகும். லோக்சபா டிஸ்மிஸ் செய்யப்பட்டாலும் ராஜ்ய சபைக்கு தேர்வு செய்யப்படுவோருக்கு பதவி பறிபோகாது. இப்படி சலுகைகள், விசேஷ உரிமைகள் அடங்கிய ராஜ்சபை தேர்தலில் அ.தி.மு.க. நான்கு வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. இவர்கள் வெற்றி பெறுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஐந்தாவது, ராஜ்யசபை பதவிக்கு இந்திய கம்யூனிஸ் கட்சியின் சார்பில் டி.ராஜா நிற்கிறார். இவர், போராடிப் பெற்ற பதவி இது. வேட்பாளராக நிற்பதற்குத் தன் கட்சிக்குள் பெரும் போராட்டத்தைச் சந்தித்தார். பிறகு அவர் வெற்றி பெறவதற்கு- அ.தி:மு.க.வின் ஆதரைவைப் பெறுவதற்கு இன்னொரு போராட்டம் நடத்தினார். கடைசி நிமிடத்தில் அ.தி.மு.க தனது ஐந்தாவது வேட்பாளரை வாபஸ் பெற்று இவரை ஆதரித்து விட்டதால், ராஜாவின் வெற்றியும் இராசியாகவே அமைந்துவிட்டது.

**திக்கு முக்காடும் தி.மு.க.**

தி.மு.க. கட்சியின் சார்பில் 23 சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமே இருக்கின்ற சூழ்நிலையில் தி.மு.க. தலைவர் கருணாநிதி தனது மகள் கனிமொழியை களமிறக்கினார். வெற்றி பெறுவதற்கு 34 ராஜ்ய சபை உறுப்பினர்கள் தேவை என்ற நிலையில், மற்றக் கட்சிகள் எல்லாம் கைவிட்டுவிட இப்போது மூன்று கட்சிகளை நம்பி நிற்கிறார். முதல் கட்சி, ஜவஹிருல்லா தலைமையில் உள்ள மனித நேய மக்கள்கட்சி. இரண்டாவது கட்சி, டாக்டர் கிருஷ்ணசாமி தலைமையில் உள்ள பூதிய தமிழகம் கட்சி. மூன்றாவதாக சமீபத்தில் கூட்டணியை விட்டு வெளியேற்றப்பட்ட காங்கிரஸ் கட்சி, இம்மூன்று கட்சிகளில் முதல் இரு கட்சிகளிடமும் தலா இரு எம்.எல்.ஏ.க்கள். இந்த நான்கு எம்.எல்.ஏ.க்களும் தி.மு.க. வேட்பாளர் கனிமொழியை ஆதரித்து விட்டார்கள். மூன்றாவது கட்சியான காங்கிரஸிடம் ஐந்து எம்.எல்.ஏ.க்கள். தி.மு.க.வை எதிர்த்துப் போட்டியிடும் தே.தி.மு.க. வேட்பாளருக்கு 22 வாக்குகள் உள்ளன. இந்நிலையில் காங்கிரஸ் கட்சியின் கையில் வெற்றி லகான் இருக்கிறது. அக்கட்சி தே.மு.தி.க.வை ஆதரித்தால், தி.மு.க. விற்கும், சரிசம வாக்குகள் வந்துவிடும். அ.தி.மு.க. கூட்டணியைச் சேர்ந்த ஐந்து வேட்பாளர்களுக்கும் வாக்களிப்பவர்கள், தங்கள் இரண்டாவது விருப்புரிமை வாக்கை தே.மு.தி.க. வேட்பாளருக்கோ, தி.மு.க. வேட்பாளருக்கோ போடமாட்டார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில், போட்டியிடும் இரு வேட்பாளர்களின் (தி.மு.க.மற்றும் தே.மு.தி.க.) பெயரையும் எழுதிப் போட்டு குலுக்கல் முறையில் தேர்வு செய்ய வேண்டும் என்று, இந்திய ராஜ்ய சபை தேர்தல் விதிகள் கூறுகின்றன.

**காங்கிரஸுக்கு அடித்த யோகம்**

இங்குதான் காங்கிரஸ் கட்சியின் முக்கியத்துவம் முகட்டின் உச்சியின் மேல் நிற்கிறது. அக்கட்சிய சில மாதங்களுக்கு முன்புதான் இலங்கைத் தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக வந்த ஜெனிவா தீர்மானத்தில் இந்தியா தக்க திருத்தங்களை கொண்டுவந்து, சர்வதேச விசாரணைக்குக் கோரவில்லை என்ற காரணத்தைச் சொல்லி, மத்திய அரசுக்கு அளித்து வரும் ஆதரவை தி.மு.க. விலக்கிக் கொண்டது. தன் மத்திய அமைச்சர்களையும் வாபஸ் பெற்றுக் கொண்டது. இவ்வளவு குறிகிய காத்தில் மீண்டும் காங்கரஸ் ஆதரவைக் கோரும் நிலை தங்களுக்கு வரும் என்று தி.மு.க. தலைமைகள் கனவில் கூட நினைத்திருக்க மாட்டார்கள். அதே நேரத்தில் விலகிச் சென்ற தி.மு.க.வை அப்படியே விட்டுவிட காங்கிரஸ் கட்சி தயாராக இல்லை. ஜூன் மூன்றாம் திகதி தி.மு.க. தலைவர் கருணாநிதியின் 90 -வது பிறந்த நாளுக்கு பிரதமர் மன்மோகன் சிங் வாழ்த்துச் சொன்னர். காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி வாழ்த்துச் செய்தி சொன்னார். மத்திய அமைச்சர்கள் வாழ்த்துச் சொன்னார்கள். ஆனால், தமிழகத்திலிருந்து நிதியமைச்சராகியுள்ள ப.சிதம்பரம் வாழ்த்துச் சொல்லவில்லை. அதற்குப் பதிலடியாக அடுத்த சில நாட்களில் நிதியமைச்சரின் தாயார் லட்சுமி அம்மாள் இயற்கை எய்திய பொழுது- அவருக்கு தி.மு.க தலைவர் குடும்பத்தினர் சார்பில் யாரும் இரங்கல் சொல்லவில்லை. ஏன் அவர் மறைவிற்கு தி.மு.க. தலைவர் கருணாநிதி இரங்கல் செய்திகூட தெரிவிக்வில்லை. காங்கிரஸிற்குள் உள்ள மற்ற தலைவர்களுக்கும், தி.மு.க. தலைவருக்கும் இராசியுண்டு. ஆனால், ப.சிதம்பரத்துடன் எதிர்ப்பு என்ற நிலையே மேலோங்கி நின்றது.

**ப.சிதம்பரம்-டி.ஆர்.பாலு போராட்டம்**

இதுபோன்ற காலகட்டத்தில் தான், காங்கிரஸின் ஆதரவை தி.மு.க. பெறுவதற்கு முயற்சிக்க-நிதியமைச்சர் ப.சிதம்பரம், இன்னொரு மத்திய அமைச்சர் ஜி.கே. வாசன் உள்ளிட்டோர், விஜயகாந்த் தலைமையிலான தே.மு.தி.க விற்கு ஆதரவு கொடுக்க வேண்டும் என்று படையெடுத்தனர். அதேவேளையில் தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு சோனியா காந்தியை சந்தித்தார்; பாதுகாப்புத்துறை அமைச்சர் அந்தோனியை சந்தித்தார். தங்கள் கட்சி வேட்பாளர் கனிமொழிக்கு காங்கிரஸ் ஆதரவு தேவை என்று அவர்களிடம் வாதிட்டவர், எங்களை உங்கள் அமைச்சர்கள் எல்லாம் 2-ஜி ஊழல் என்றார்கள். ஆனால், காங்கிரஸ் அமைச்சர்கள் பன்சால், பிரதமர் மன்மோகன் சிங் போன்றவர்கள் மீது எல்லாம் குற்றம் சாட்டப்பட்டபோது தி.மு.க. ஏதாவது வாய் திறந்து பேசியதா? காங்கிரஸை ஊழல் கட்சி என்று கூறினோமா? இல்லை, நாடாளுமன்றத்தில் எங்கள் கட்சி எம்பிக்கள் யாரும் காங்கிரஸை உழல் கட்சி என்று கூறினோமா? இல்லை, நாடாளுமன்றத்தில் எங்கள் கட்சி எம்.பிக்கள் யாரும் காங்கிரஸை ஊழல் தொடர்பாக விமர்சித்தார்களா? என்று கூறிய டி.ஆர்.பாலு, இப்போது உங்களிடம் உள்ள ஐந்து எம்.எல்.ஏ.க்களும் தி.மு.க. வாக்கு வாங்கி ஜெயித்தவர்கள். ஆகவே, உங்கள் மனச்சாட்சிக்கே விட்டுவிடுகிறோம். என்று சென்டிமென்டாக சோனியா காந்தியிடம் பேசியதாக தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தி.மு.க.விற்கு கைகொடுக்கும் நரேந்திரமோடி சந்திப்பிற்குப் பிறகு காங்கிரஸ் மேலிடத்திடம் மனமாற்றம் தெரிகிறது. வருகின்ற 27ஆம் திகதி நடக்கவிருக்கும் ராஜ்ய சபை தேர்தலில் தி.மு.க. விற்கு வாக்களிக்கும் மனநிலைக்கு இன்னும் காங்கிரஸ் வரவில்லையென்றாலும், அதற்கான சாதகமான அம்சங்கள் தெரிவதாக தி.மு.க. வட்டாரங்களில் செய்தி அடிபடுகிறது. அதற்கு கை கொடுத்திருப்பவர் பா.ஜ.க. சார்பில் -பிரதமர் வேட்பாளராக நிறுத்தப்படுவார்- என்று கருதப்படும் நரேந்திர மோடி. ஏற்கனவே காங்கிரஸ் கட்சியின் கு புகழ் ரொம்பவும் பாதிக்கப்பட்டுள்ளது. அடுத்தடுத்த ஊழல்கள், மம்தா பானர்ஜி, கருணாநிதி போன்ற கூட்டணிக் கட்சி தலைவர்கள் வெளியேறியது எல்லாமே அக்கட்சியின் அடுத்த கட்ட வெற்றி வாய்ப்பை கேள்விக்குறியாக்கியுள்ளது. குறிப்பாக, 2014 நாடாளுமன்றத் தேர்தலின் போது, காங்கிரஸ் கட்சி தனிமைப்படுத்தப்பட்டுவிடுமோ என்ற அச்ச உணர்வு காங்கிரஸ் தலைவர்களிடமே இருக்கிறது.

**மதசார்பற்ற அணியா,**
**இந்துத்துவ அணியா?**

தமிழகத்தில் இந்த ராஜ்ய சபைத் தேர்தலில் தி.மு.க.வை காங்கிரஸ் ஆதரித்தால், தமிழகத்திலும் காங்கிரஸை விட்டு விலகிச் சென்ற தி.மு.க.வை மீண்டும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் கொண்டு வந்த இலாபம் கிடைக்கும் என்று காங்கிரஸின் முன்னணி டெல்லி தலைவர்கள் கருதுவதாகத் தெரிகிறது. இது தவிர, விஜயகாந்த் தலைமையிலான தே.மு.தி.க. மற்றும் இரு முக்கிய கட்சிகளான தி.மு.க.விற்கும், அ.தி.மு.க. விற்கும் மாற்று என்று புறப்பட்டாலும், உண்மையில் அந்தக் கட்சி காங்கிரஸ் கட்சியின் ஸ்தானத்தைத் தான் நீக்கியிருக்கிறது.அதாவது, இதுவரை தமிழகத்தில் மூன்றாவது பெரிய கட்சியாக இருந்த காங்கிரஸை நான்காவது இடத்திற்கு தள்ளிவிட்டு, அந்த இடத்தைப் பிடித்திருக்கிறது தே.மு.தி.க.

இந்த நிலையில் தே.மு.தி.க. வேட்பாளரை ஆதரிப்பது காங்கிரஸை தமிழகத்தில் நான்காவது இடத்திற்கு நிரந்தரமாகத் தள்ளிவைக்கும். ஆகவே, நாம் இந்தமுறை தி.மு.க.வை ஆதரித்தால், நமக்கு அகில இந்திய அளவில் புதிய புகழ் கிடைக்கும். பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி கலைந்து கொண்டிருக்கிறது. ஆனால், காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியில் புதிய கட்சிகள் சேருவது மட்டுமன்றி, போன கட்சிகளும் மீண்டும் வருகிறது என்ற புகழ் கிடைக்கும். அகில இந்திய அளவில் வெற்றி பெறும் கூட்டணியை அமைக்கும் கட்சி காங்கிரஸ் என்ற புகழ் 2014 நாடாளுமன்றத் தேர்தலில் பெரும் உதவியை கொடுக்கும். அதுமட்டுமன்றி பா.ஜ.க. சர்பில் நரேந்திரமோடி முன்னிறுத்தப்படும் பட்சத்தில் மதசார்பற்ற அணிக்கும் இந்துத்துவ அணிக்கும் போட்டியென்று வரும்பொழுது தி.மு.க., ஐ.ஜ.தளம் போன்ற கட்சிகள் காங்கிரஸுடனேயே நிற்கும் என்கிறார், தமிழகக் காங்கிரஸின் முன்னாள் தலைவர் ஒருவர்.

**காங்கிரஸுக்கு புகழ் கொடுப்பது**
**தி.மு.க.வா, தே.மு.தி.க.வா?**

காங்கிரஸ் கட்சியின் ஆதரவை பெறுவதில் பொதுவாக அ.தி.மு.க.வுக்கும், தி.மு.க.வுக்கும்தான் போட்டியிருக்கும். அவர்களில் ஒருவரை காங்கிரஸ் தலைமையும் தேர்வு செய்யும். ஏனென்றால் இந்த இரு கட்சிகளில் ஒன்றுதான் ஒவ்வொரு தேர்தலிலும் வெற்றிக் கூட்டணி அமைக்கும் சக்தி மிகுந்தவைகளாக இருக்கும். அது மட்டுமன்றி, அகில இந்திய கட்சிகளான பா.ஜ.க. வும் காங்கிரஸும் தமிழகத்தல் உள்ள தி.மு.க.வுடனோ, அ.தி.மு.க வுடனோ கூட்டணி வைத்தால், வெற்றிபெறும் கூட்டணி என்ற புகழ் அந்த கட்சிகளுக்கு கிடைக்கும்.

ஏனென்றால், 1989 இலிருந்து மத்தியில் அமையும் ஒவ்வொரு ஆட்சிக்கும் 40 எம்பிக்கள் உள்ள தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியிலிருந்து கிடைக்கும் வெற்றிதான் முக்கிய காரணமாக அமைந்திருக்கிறது.குறைந்த பட்சம் நான்கு முனைப்போட்டியை வருகின்ற நாடாளுமன்ற தேர்தல் சந்திக்கும் சூழ்நிலை எழும். ஆறு ராஜ்ய சபை பதவிகளில் ஒரு பதவிக்கு அமையப் போகும் கூட்டணி, தமிழகம் மற்றும் பாண்டிச்சேரியில் உள்ள 40 எம்.பி. தேர்தலின் கூட்டணியை நிர்மாணிக்கும் சக்தி மிகுந்ததாக மாறியிருப்பது தான் இப்போதைக்கு பரபரப்பான செய்தி.

**போனில் பேசுவாரா தி.மு.க.**
**தலைவர் கருணாநிதி?**

தி.மு.க. தலைவர் கருணாநிதி காங்கிரஸின் ஆதரவு கேட்டு சோனியா காந்தியுடன் பேச வேண்டும் என்று காங்கிரஸ் மேலிடம் எதிர்பார்க்கிறது. அப்போதுதான் எதிர்கால நாடாளுமன்றக் கூட்டணிக்கு அச்சாரம் போட முடியும் என்றும் அக்கட்சி மூத்த தலைவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், தி.மு.க. தரப்பிலோ காங்கிரஸின் ஆதரவை எதிர்பார்க்கும் அதேநேரத்தில் ஏதாவதொரு வகையில் தே.மு.தி.க. எம்.எல்.ஏ.க் களையே வளைத்துப்போட்டு கனிமொழியை ஜெயிக்க வைக்க வேண்டும் என்ற நோக்கத்திலும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எது எப்படியோ தமிழகத்தில் எங்கே இருக்கிறது காங்கிரஸ் என்று கேள்வி எழுப்பியவர்கள் மத்தியில் இப்போது காங்கிரஸ் என்ன முடிவு எடுக்கப்போகிறது என்ற எதிர்பார்ப்பு கிளம்பியுள்ளது. சிறியதோ, பெரியதோ ஜனநாயகத்தை எண்ணிக்கைகளே முடிவு செய்யும் என்பதை, மீண்டும் எடுத்துரைப்பதாக அமைந்திருக்கிறது நிலைமை.

-காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரம்




(யாழ்ப்பாணம்)

**மத்திய சுகாதார அமைச்சினால் தேசிய நுளம்புக் கட்டுப்பாட்டு வாரமாக எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் 7 ஆம் திகதி வரையான ஒருவாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார். குறித்த நாளில் குறித்த வலயத்திற்குட்பட்ட சகல நிறுவனங்களும் வைத்திய சாலைகளும் பொது இடங்களும் வணக்கத் தலங்களும் வர்த்தக நிலையங்களும் வீடுகளும் பராமரிப்பற்ற காணிகளும் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகட்கு உட்படுத்தப்பட வேண்டும்.**

குறித்த நாளில் குறித்த வலயத்தில் இடம்பெறும் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து ஆலோசனைகளை வழங்குவதற்குபல குழுக்கள் வீடுகளையும் நிறுவனங்களையும் பொது இடங்களையும் சென்று பார்வையிடுவர்.

இக்குழுக்களில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், மலேரியா தடுப்பு வெளிக்கள உத்தியோகத்தர்கள், சுகாதார தொண்டர்கள், கிராம சேவகர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பட்டதாரி பயிலுநர்கள், உள்ளூராட்சி மன்ற உத்தியோகத்தர்கள், கிராமமட்ட சமூக அமைப்புக்களின் தொண்டர்கள் , சுற்றாடல் பாதுகாப்பு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் ஈடுபட வேண்டும். இவ்வாரத்தில் ஒவ்வொரு நாளும் மேற்கொள்ளப்பட்ட நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பற்றிய விபரங்களையும் அதில் பங்கு பற்றிய உத்தியோகத்தர்களின் விபரங்களையும் சுகாதார வைத்திய அதிகாரி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக அரசாங்கம் அதிபருக்கும் மத்திய, மாகாண சுகாதார அமைச்சுகளுக்கும் தினமும் அனுப்பி வைக்க வேண்டும்.

எனவே, யாழ். மாவட்டத்தில் அனைவரும் நுளம்பு கட்டுப்பாட்டு வாரத்தில் ஒன்றிணைந்து செயற்பட்டு எமது மக்களை ஆட்கொல்லி டெங்கு நோயிலிருந்து பாதுகாப்போம் என அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு அரசாங்க அதிபரின் மேற்படி அறிவித்தல் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர்கள், உள்ளூராட்சி மன்ற செயலர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள், வைத்தியசாலை பொறுப்பதிகாரிகள், நிறுவனத்தலைவர்கள், பாடசாலை அதிபர்கள், வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,

இலங்கையின் பல பகுதிகளிலும் பருவகாலமழைக்குப் பின்னர் டெங்கு நோயின் பரவல் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகிறது.

இந்நிலை காரணமாக மேற்படி வாரத்தில் நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் பின்வருமாறு திட்டமிடப்பட்டு முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதில் பிரதேச செயலர் பிர தேச மட்ட டெங்கு தடுப்பு செயல ணிக் கூட்டத்தை ஒழுங்கு செய்து பிரதேசத்திலுள்ள நிறுவனங்களையும் கிராம மட்ட அமைப்புக்களையும் இணைத்து நுளம்பு கட்டுப்பாட்டு வார நடவடிக்கைகளை திட்டமிட வேண்டும். சுகாதார வைத்திய அதிகாரி இதற்கு ஒருங்கிணைப்பாளராக செயற்பட வேண்டும்.

கிராம மட்ட டெங்கு தடுப்பு செயலணிக் குழுக் கூட்டத்தை கிராம சேவகர் தலைமையில் ஏற்பாடு செய்து கிராம மட்ட அமைப்புக்களை நுளம்பு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுத்த வேண்டும். பொதுச் சுகாதார பரிசோதகர் இதற்கு ஒருங்கிணைப்பாளராக செயற்பட வேண்டும். ஒவ்வொரு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவும் ஏழு வலயங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு வலயத்திற்கும் ஒவ்வொரு நாள் ஒதுக்கப்படும். (அ-6)



**சுன்னாகம் லயன்ஸ் கழக புதிய நிர்வாக பதவியேற்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. புதிய தலைவர் சி.ஹரிகரன் வரவேற்கப்படுவதையும் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவியை மாவட்ட ஆளுநர் ரஞ்சித் பெர்னாண்டோ பரிசு வழங்கி கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.**

## ரணில் எழுதிய நூல் குறித்து புலனாய்வு பிரிவினர் விசாரணை

### ஐ.தே.க. எதிர்ப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க எழுதிய நூலொன்று தொடர்பில்புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை ஆரம்பித்துள்மைக்கு ஐக்கிய தேசியக்கட்சி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

குறித்த நூல் கடந்த 2005 ஆம் ஆண்டில் ரணில் விக்ரமசிங்கவினால் எழுதப்பட்டது.

முக்கியமான விடயங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ளாது புலனாய்வுப் பிரிவினர் இந்த நூல் தொடர்பில் விசாரணை நடத்தி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டை ஆட்சி செய்வதற்கு எவ்வாறு பௌத்த மதத்தை பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பது பற்றியே இந்த நூலில் கூறப்பட்டுள்ளது. எதற்காக புலனாய்வுப் பிரிவினர் இந் நூல் குறித்து விசாரணை நடத்துகின்றார்கள் என்பது புரியவில்லை.

இவ் விசாரணை அரசியல் அமைப்பிற்கு முரணானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-5)

## ம.உ.சட்டத்தில் திருத்தங்கள்

மனித உரிமைகள் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மனித உரிமைகள் தொடர்பான சிவில் அமைப்புக்களிடம் யோசனை மற்றும் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளதாக ஆணைக்குழுவின் ஆணையாளர் கலாநிதி பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.

அண்மையில் சிவில் அமைப்புக்கள் சிலவற்றுடன் கலந்துரையாடியதாக அவர் கூறினார். அத்துடன் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை செயற்படுவதற்கு எதிர்காலத்தில் விதிமுறைக்ளை தயாரிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)




- ❖ 1358 - துப்ரோவ்னிக் குடியரசு அமைக்கப்பட்டது.
- ❖ 1709 - ரஷ்யாவின் முதலாம் பியோத்தர் பொல்டாவா என்ற இடத்தில் சுவீடனின் பன்னிரண்டாம் சார்ல்சின் படைகளை வென்றான்.
- ❖ 1801 - கெய்ரோ நகரம் பிரித்தானியப் படையினரிடம் வீழ்ந்தது.
- ❖ 1806 -புவனஸ் அரசை பிரித்தானியர் கைப்பற்றினர்.
- ❖ 1950 - கொரியப் போரில் பங்கு பற்றவென ஐக்கிய அமெரிக்கா தனது படைகளை அனுப்ப முடிவு செய்தது.
- ❖ 1954 - இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் உருவாக்கப்பட்டது.
- ❖ 1954 - உலகின் முதலாவது அணுக்கரு ஆற்றல் உற்பத்தி மையம் மொஸ்கோவுக்கு அருகில் ஒப்னின்ஸ்க் என்னும் இடத்தில் அமைக்கப்பட்டது.
- ❖ 1967 - உலகின் முதலாவது ஏ.ரி.எம். கடனட்டை லண்டன் என்ஃபீல்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.
- ❖ 1974 - அமெரிக்க ஜனாதிபதி ரிச்சார்ட் நிக்சன் சோவியத் ஒன்றியத்துக்கு பயணம் மேற்கொண்டார்.
- ❖ 1977 - சிபூட்டி பிரான்சிடம் இருந்து விடுதலை பெற்றது.
- ❖ 1979 - முகமது அலி குத்துச்சண்டையில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.
- ❖ 1991 - சுலோவீனியா தனது விடுதலையை அறிவித்த இரண்டாம் நாளில் யுகோஸ்லாவியா அதன் மீது படையெடுத்தது.
- ❖ 1998 - கோலாலம்பூர் சர்வதேச விமான நிலையம் திறக்கப்பட்டது.
- ❖ 2007 - டோனி பிளேயர் பிரதமர் பதவியைத் துறந்ததைத் தொடர்ந்து கோர்டன் பிறௌன் ஐக்கிய இராச்சியத்தின் பிரதமரானார்.

**பிறப்புகள்**

- ❖ 1880-ஹெலன் கெல்லர், அமெரிக்கப் பெண் எழுத்தாளர் (இ. 1968)
- ❖ 1922 - அகிலன், தமிழில் ஞானபீட விருது பெற்ற முதல் எழுத்தாளர்
- ❖ 1927 - டொமினிக் ஜீவா, ஈழத்தின் எழுத்தாளர், மல்லிகை இதழாசிரியர்

**இறப்புகள்**

- ❖ 1999 - ஜோர்ஜ் பப்படபவுலஸ், முன்னாள் கிரேக்க அரசுத் தலைவர் (பி. 1919)
- ❖ 2009 - இ. முருகையன், ஈழத்துக் கவிஞர் (பி. 1935)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் மொழித் தினவிழா

(பூந்தோட்டம்)

வடமாகாண தமிழ்மொழித் தின விழா நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டு துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந்நிகழ்வில் நடைபெற்று முடிந்த மாகாண நிலை தமிழ் மொழித் தினப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-15-266)




# அடிப்படை வசதிகள் எதுவுமின்றி அல்லலுறும் சிலாவத்தை மக்கள்

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிலாவத்தை கிராமம் மீள்குடியேற்றப்பட்டு மூன்று வருடங்கள் கடந்துள்ளபோதும் இக்கிராமத்தின் தேவைகள் முழுமையாகப் பூர்த்தியடையவில்லை என அப்பகுதி மக்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.**

மேற்படி கிராம மக்கள் யுத்தத்தினால் இடம்பெயர்ந்து கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டு தற்போது 456 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இங்கு பல குறைபாடுகள் காணப்படுவதாக மக்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் குறைபாடுகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இந்நிலையில் கிராமத்தின் 28 உள்வீதிகளும் 4 சைவ ஆலயங்களும் கிறிஸ்தவ ஆலயமொன்றும் புனரமைப்புச் செய்யப்பட வேண்டும்.

அத்துடன் மக்களின் பாவனைக்காக 5 பொதுக்கிணறுகளும் மாதர் சங்கத்தினர் தமது செயற்பாடுகளை முன்னெடுக்க கட்டடமொன்றும், தீர்த்தக்கரை கிராமத்தில் 40இற்கும் மேற்பட்ட சிறார்கள் பயிலுகின்ற முன்பள்ளிக்கு கற்றல் வசதிகளையும் தளபாடங்களையும் உள்ளடக்கிய கட்டடமொன்றும் அமைத்துத் தரவேண்டும்.

மேலும் சிலாவத்தை கிராம அபிவிருத்திச் சங்க கட்டடம், இராணுவத்தினரின் பாவனையில் உள்ளதால் அதனை மக்களின் பாவனைக்கு பெற்றுத்தர வேண்டும். இப்பகுதியிலுள்ள 15 இற்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகளுக்கும் வேலைவாய்ப்பு பெற்றுக் கொடுக்கப்படுவதுடன் ஐந்து அங்கத்தவர்களுக்குட்பட்ட 150 குடும்பங்களுக்கும் சமுர்த்தி நிவாரணம் வழங்குதல் அவசியம் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.



அத்தோடு 50 குடும்பத்தினருக்கு தற்காலிக வீடுகளும் 100 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளும் பகுதிச் சேதம் முழுமையாக கொடுக்கப்படாதவர்களுக்கான தொகைகளையும் இங்குள்ள 25 மாற்றுத் திறனாளிகளின் வாழ்வாதார உதவிகளையும் பெற்றுத் தருமாறு கரைதுறைப்பற்று பிரதேச செயலரையும் கிராம சேவகரையும் கிராம மக்கள் கேட்டுள்ளனர். (ம-267)

# சிவன்சோலை கிராமத்தில் பல அபிவிருத்தி திட்டங்கள்

## முன்னெடுக்கப்படவுள்ளதாக சந்திரகுமார் எம்.பி. உறுதி

(சிவநகர்)

கிளிநொச்சி மாவட்ட சிவநகர் கிராம அலுவலர் பிரிவிலுள்ள சிவன்சோலை கிராமத்திற்கு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வருகைதந்த பாராளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான மு.சந்திரகுமார் அக்கிராம மக்களுடன் சந்திப்பொன்றை மேற்கொண்டு குறைகளை கேட்டறிந்ததுடன் அவற்றை நிவர்த்தி செய்து தருவதாகவும் உறுதியளித்துள்ளார்.

மக்களின் குறைகளைக் கேட்டறிந்த பாராளுமன்ற உறுப்பினர் கருத்து தெரிவிக்கையில்,

இக்கிராமத்தை மட்டுமல்லாது இதனோடு இணைந்துள்ள பல கிராமங்களிலுமுள்ள பிரதான கழிவு வாய்க்காலை திருத்தம் செய்வதற்கு மூன்று கட்டங்களாக திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இப்பாரிய வேலைத்திட்டம் இரண்டாயிரம் மில்லியன் ரூபா ஜப்பானிய உதவித் தொகையினூடாக செயற்படுத்தப்படவுள்ளது.

அத்துடன் ஆசிய அபிவிருத்தி திட்டமூலம் சிவன் சோலைக்கிராமத்தின் 3 கிலோமீற்றர் உள் வீதிகளும் சிவநகர் கிராமத்தின் 4 கிலோமீற்றர் வீதிகளும் செப்பனிடப்படவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இந்த வருட இறுதிக்குள் சிவன் சோலைக் கிராமத்திற்கான மின்சார வசதி செய்து கொடுக்கப்படும் எனவும் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தம்முடன் வடக்கின் வசந்த திட்டப் பொறியியலாளரும் வருகை தந்துள்ளார் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்திய வீட்டுத் திட்டம் அமைப்பதற்கான முதல் கட்ட படிவம் வழங்கும் திட்டங்கள் எதிர்வரும் ஆவணி மாதம் ஆரம்பிக்கப்படும் என்றும் கூறினார்.

எல்லாவற்றிற்கும் மேலதிகமாக இதுவரை காணிகளுக்குரிய அனுமதிப் பத்திரம் இல்லாதோரில் 99 பேருக்கு எதிர்வரும் ஜூலை மாதம் 9 ஆம் திகதி காணி கச்சேரி நடத்தி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டது.

சிவன்சோலைக் கிராமத்தின் முன்பள்ளித் திருத்தம் மற்றும் தபால்சேவை இல்லாத குறைபாடு ஆகியவற்றுக்கும் தீர்வு காணப்படும் எனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் வடக்கின் வசந்தம் திட்டப் பொறியியலாளர், கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கிளிநொச்சி மாவட்ட ஈ.பி.டி.பி கட்சியின் அமைப்பாளர் வை.தவநாதன், கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் வி.இராமச்சந்திரன் மற்றும் பல திணைக்கள அலுவலர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ம-254)



வெலிஓயா கோட்டக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட பாடசாலைகளில் காணப்படும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடைபெற்ற நேர்முகப் பரீட்சையின் அடிப்படையில் 37 பேருக்கு ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இவ் ஆசிரிய நியமனம் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றபோது வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆசிரியர் ஒருவருக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.
(படம்:- என்.குமார்)

## சட்டவிரோதமாக ஆமை பிடித்தவர்கள் பிணையில் செல்ல அனுமதி

(பூநகரி)

பூநகரி பள்ளிக்குடாக்கடலில் சட்டவிரோதமாக ஆமை பிடித்த மூன்று நபர்களை பிணையில் செல்ல கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்குறித்த கடலில் சட்டவிரோதமாக ஆமை பிடித்த மூன்று நபர்களை ஆமையுடன் கைது செய்த பூநகரி பொலிஸார் கடந்த 20 ஆம் திகதி கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் குறித்த நபர்களை எச்சரித்து பிணையில் செல்ல அனுமதித்ததுடன் எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி விசாரணைக்காக மன்றிற்கு வருமாறு உத்தரவிட்டார்.



ஆமை உயிர் வாழுமா என பரிசோதிக்கப்பட்டு மீண்டும் கடலில் விடப்பட்டுள்ளது. (ம-84)

## கேப்பாப்பிலவு மாதிரி கிராமத்திற்கு பேருந்து சேவையை ஏற்படுத்தி தாருங்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கேப்பாப்பிலவு மாதிரிக் கிராமத்தில் பேருந்து சேவையை ஏற்படுத்தித் தருமாறு அப்பகுதி மக்கள் முல்லை.மாவட்ட அரசாங்க அதிபருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேற்படிக் கிராமத்தில் கடந்த 2012 ஆம் ஆண்டு மக்கள் மீள் குடியேற்றப்பட்டு சுமார் 300 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில் இப்பகுதிக்கென தனியார் பேருந்துகளோ அரச பேருந்துகளோ இதுவரை பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

இதனால் முல்லைத்தீவிலிருந்து வவுனியா செல்கின்ற பேருந்துகளில் இப்பகுதி மக்கள் பிரயாணத்தை மேற்கொள்கின்றனர்.

இப்பேருந்துகள் வற்றாப்பளை சந்தி வரையுமே வருவதால் இப்பகுதியில் இறங்கும் மக்கள் 3 கிலோமீற்றர் தூரத்திலுள்ள கேப்பாப்பிலவு கிராமத்திற்கு நடந்து செல்லும் துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதுமட்டுமன்றி கேப்பாப்பிலவு மக்கள் தமது தேவைகளை நிறைவேற்றுவதற்கு சந்தை மற்றும் மாவட்ட செயலகம், பிரதேச செயலகம், வைத்தியசாலைக்குச் செல்வதற்கும், மாணவர்கள் பாடசாலை செல்வதற்கும், உத்தியோகத்தர்கள் தொழிலுக்குச் செல்வதற்கும் மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ள வற்றாப்பளைச் சந்திக்கு நடந்து சென்றே முல்லைத்தீவு வவுனியா வழி பேருந்துகளில் பயணிக்கின்றனர்.

யுத்தத்தின் இடம்பெயர்வுக்கு முன்னர் இக்கிராமத்திற்கு பேருந்து சேவை இருந்துள்ளது. எனவே, இக்கிராமத்திற்கு மீண்டும் அரச மற்றும் தனியார் பேருந்து சேவைகளை ஏற்படுத்தித் தருமாறு கேப்பாப்பிலவு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ம-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாங்குளம் நகரின் அடிப்படை தேவைகள் விரைவில் பூர்த்தியாக்கப்படுமா?

(மல்லாவி)

**மாங்குளம் நகரப் பகுதியினுள் பொது மலசலகூடம், பேருந்து தரிப்பு நிலையம் மற்றும் மீன் சந்தை உட்பட நூல் நிலைய வசதிகளையும் ஏற்படுத்தி தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

வடமாகாணத்தின் மத்திய பகுதியாக மாங்குளம் நகரப் பகுதி காணப்படுகின்றது. இது ஏ-9 வீதியில் அமைந்துள்ளதுடன் வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, துணுக்காய் என பல்வேறு இடங்களுக்குச் செல்லும் மையப் பகுதிகளையும் கொண்டுள்ளது.

இதனால் மாங்குளம் நகரப் பகுதிக்கு தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் வருகை தருகின்றனர். இவர்களில் அநேகமானவர்கள் வங்கி மற்றும் வைத்திய தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந் நகரப்பகுதிக்கு வருகின்றனர்.

அத்தோடு துணுக்காய் கல்வி வலயமும் மாங்குளத்தில் அமைந்துள்ளதால் இதன் கீழுள்ள 61 பாடசாலைகளில் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பல்வேறு தரப்பினரும் இங்கு வருகை தருகின்றனர்.



இவ்வாறு வருபவர்கள் துணுக்காய், முல்லைத்தீவு, வவுனியா செல்லும் வீதிகளில் பேருந்துத் தரிப்பிடம் இன்மையால் கால் வலிக்க மணிக்கணக்கில் நின்று பேருந்து சேவையைப் பெற வேண்டியுள்ளது.

அத்துடன் பொது மலசலகூடங்கள் எவையும் மேற்படி இடங்களில் தற்போது இல்லை. ஆனால், யுத்தம் நடைபெற்ற காலங்களில் பொதுமக்களுக்காக அமைக்கப்பட்டிருந்த பொது மலசலகூடம் ஒன்று பற்றைகளால் மூடப்பட்டு காணப்படுகின்றது.

மாங்குளம் மகாவித்தியாலயத்திற்கு முன்பாக இருக்கின்ற கிராம முன்னேற்றச் சங்கக் கட்டடத்தில் இராணுவத்தினர் தங்கியிருப்பதோடு அக்கட்டடத்தின் ஒரு பகுதியில் கணனிப் பயிற்சி நிலையமொன்றும் இயங்குவதால் நூலக வசதிகள் எதுவும் ஏற்படுத்தப்படாதுள்ளன.

அத்தோடு பொதுமக்கள் மீள் குடியேறி நான்கு வருடங்களைத் தாண்டியுள்ளபோதும் இதுவரை மரக்கறி மற்றும் மீன் சந்தைகள் அமைக்கப்படவில்லை. இதனால் மீன் விற்பனை செய்பவர்கள் நகரத்தின் மையப் பகுதியில் வைத்து அவற்றை விற்பனை செய்வதால் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய சுகாதார சீர்கேடுகளும் ஏற்படுகின்றன.

நகரத்தில் தேங்கும் கழிவுப் பொருட்களை அகற்றுவதில் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை மந்தகதியில் செயற்படுவதால் டெங்கு நுளம்பு பெருகக் கூடியவாறு சுற்றுச் சூழல் காணப்படுகின்றது.

இவற்றுக்கு மேலாக இந்த நகரத்தினூடாக பல்வேறு இடங்களுக்கு மின்சாரம் விநியோகிக்கப்படுகின்ற போதும் இங்குள்ள குடியிருப்பாளர்களுக்கான மின்சாரம் வழங்கப்படவில்லை.

எனவே, மீள்குடியேற்றம் செய்யப்பட்டும் இன்னும் பல்வேறு பிரச்சினைகளிலிருந்து விடுபடாமல் இருக்கின்ற மாங்குள மக்களுக்கு விடிவு காலம் கிடைக்குமா என மக்கள் எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றார்கள். (ம-15)

## வவுனியா விபத்தில் மூவர் காயம்

(குருமன்காடு)

வவுனியா ஹொரவபொத்தான வீதியில் இடம் பெற்ற வீதி விபத்தில் மூவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை மாலை ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேர் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது வேகமாக வந்த மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதியதில் மூவர் காயம் அடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் இரு சிறுவர்கள் உள்ளடங்குகின்றனர்.

மோதியவர் மதுபோதையில் மோட்டார் சைக்கிளில் வந்துள்ளார் இவரை பொலிஸார் கைது செய்ததோடு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-250)




## சடலம் கரையொதுங்கியது

ஆனையிறவு கடல் நீர் ஏரியின் கிழக்குப் பகுதியிலுள்ள நல்லதண்ணி தொடுவாய் எனும் இடத்தில் சடலம் ஒன்று கரையொதுங்கியுள்ளது. மேற்படி சடலம் நேற்று புதன்கிழமை கரை ஒதுங்கியுள்ளதாக மீன் பிடிக்க சென்ற மீனவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பாதுகாப்புப் படையினருக்கும் பொலிஸாருக்கும் தகவல் கொடுக்கப்பட்டு அவர்கள் பார்வையிட்டுள்ளனர்.சடலம் சிதைவடைந்த நிலையில் காணப்படுவதால் இனங்காண முடியாமல் உள்ளது என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (ம-264)

## மரையை இறைச்சிக்காக வெட்டியவர்களை பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி

(பூநகரி)

முக்கொம்பன் பகுதியில் உள்ள அரச காட்டுப் பகுதியில் வைத்து மரை ஒன்றை இறைச்சிக்காக வெட்டிய மூன்று நபர்களை இரண்டு நாட்கள் விளக்கமறியலில் வைத்ததுடன் பிணையில் செல்ல கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்குறித்த காட்டுப் பகுதியில் வைத்து மரை ஒன்றை இறைச்சிக்காக வெட்டி இறைச்சியைப் பங்கிட்டு கொண்டிருந்தவேளை பூநகரி பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து அவ்விடத்திற்கு விரைந்த உதவிப் பொலிஸ் பரிசோதகர் ஆனந்த சுமணசிறி தலைமையிலான குழுவினர் 66 கிலோ மரை இறைச்சியை கைப்பற்றியதுடன் இதனுடன் தொடர்புடைய மூன்று நபர்களையும் கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட மூன்று நபர்களையும் கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் கடந்த 22 ஆம் திகதி ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதவான் நீதிமன்ற நீதவான் குறித்த நபர்களை இரண்டு நாட்கள் விளக்கமறியலில் வைத்தபின் பிணையில் செல்ல உத்தரவிட்டதுடன் எதிர்வரும் ஜூலை மாதம் 4 ஆம் திகதி விசாரணைக்கு வருமாறும் உத்தரவிட்டார். (ம-84)

## தொண்டர் ஆசிரியர் நியமனத்தில் எம்மை ஏன் கைவிட்டீர்?

### வவு.தெற்கு வலய தொண்டர் ஆசிரியர்கள் குமுறல்

(குருமன்காடு)

வன்னியில் பணியாற்றிய தொண்டர் ஆசிரியர்களுக்கான நியமனங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. இதன்போது வவுனியா தெற்கு வலயத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

வன்னியில் தொண்டர் ஆசிரியர்களாக கடந்த பல வருடங்களாக பணியாற்றிய 514 பேருக்கு கடந்த 23ஆம் திகதி ஆசிரிய உதவியாளருக்கான நியமனங்கள் வழங்கப்பட்டன.

இந் நியமனத்தில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், மடு, வவுனியா வடக்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய வலயங்களைச் சேர்ந்தவர்களே உள்வாங்கப்பட்டிருந்தனர்.

ஆனால், கடந்த பல வருடங்களாக வவுனியா தெற்கு வலயத்தில் தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்றியவர்கள் உள்வாங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2008 ஆம் ஆண்டு வவுனியா தெற்கு வலய தொண்டர் ஆசிரியர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டபோது மூன்று வருடங்களை பூர்த்தி செய்யவில்லை என அப்போது பலருக்கு நியமனம் வழங்கப்படவில்லை.

இதேவேளை, கடந்த 2011ஆம் ஆண்டு ஆளுநரின் பணிப்பின் அடிப்படையில் நேர்முகத்தேர்வுகள் இடம்பெற்று தாம் தெரிவு செய்யப்பட்டபோதும் இன்று வரை தமக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்படவில்லை எனவும் தற்போது வழங்கப்பட்டுள்ள நியமனத்திலும் தாம் புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, கடந்த பல வருடங்களாக தாம் தொண்டர் ஆசிரியராக பணிபுரிந்தும் தொடர்ச்சியாக ஏமாற்றப்படுவதாகவும் தெரிவித்துள்ள அவர்கள், தமக்கான நியமனத்தைப் பெற்றுத் தருவதற்கு உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-250)

## வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளன

(முல்லைத்தீவு)

USAID அமெரிக்க நிறுவனத்தின் நிதியுதவியுடன் சோஆ நிறுவனத்தின் அனுசரணையுடன் முல்லைத்தீவு மாவட்ட கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவு முள்ளிவாய்க்கால் மேற்கு கிராமத்தில் உள்ள 100 பயனாளிகளுக்கு இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2 ணிக்கு முள்ளிவாய்க்கால் மேற்கு கனிஷ்ட உயர்தர வித்தியாலய மைதானத்தில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முல்லை.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதில் 31 குடும்பங்களுக்கு கடற்றொழில் உபகரணங்களும் 23 குடும்பங்களுக்கு நீர்ப்பம்பிகளும் 18 குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்களும் 11 குடும்பங்களுக்கு சிறுவியாபாரத்திற்கான உதவிகளும் 2 குடும்பங்களுக்கு துவிச்சக்கரவண்டி திருத்த தொழிலுக்கான உதவிகளும் 13 குடும்பங்களுக்கு ஆடு, மாடு, கோழி என்பன வளர்ப்பதற்கான உதவிகளும் வழங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு பயனாளிகளுக்கும் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப் படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-267)

## மாற்றுவலுவுள்ளோர்களுக்கான தொழிற்சந்தை

சமூக சேவைகள் அமைச்சினால் மாற்றுவலுவுள்ளோர்களுக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை நடத்தப்படவுள்ள தொழில் சந்தையில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாற்றுவலுவுள்ளோர் நேரடியாகக் கலந்து கொள்ள முடியும்.

பிரதேச செயலகங்களில் இத் தொழிற்சந்தைக்கென பதிவுகளை மேற்கொண்டோர்களும் பதிவுகளை மேற்கொள்ளாதவர்களும் நேடியாகச் சென்று கலந்து கொள்ள முடியும்.

இவர்களுக்குரிய பதிவுகளை மேற்கொள்வதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தொழிற் சந்தையில் தனியார்துறை நிறுவனங்கள் பல தகுதியும் திறமையுள்ள மாற்றுவலுவுள்ளோர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்க முன்வந்துள்ளதால் இந்த வாய்ப்பை தவற விடவேண்டாமென அறிவிக்கப்பட்டுள்ளது.(ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அனர்த்த முகாமைத்துவ பயிற்சிப் பட்டறை ஒன்று நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ். மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ அதிகாரி சங்கரப்பிள்ளை ரவி தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சிப் பட்டறையில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் உட்பட பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டவர்களை படங்களில் காணலாம்.

(படங்கள்:- எஸ்.ஆர்.கரன்)

# ராஜீவ் காந்தி படுகொலை இந்தியா- ரஷ்யா கூட்டுச் சதி

## ரஷ்ய பத்திரிகை பரபரப்பு தகவல்

(சென்னை)

**இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவம் இந்திய- ரஷ்ய கூட்டுச் சதியின் பிரகாரம் நடைபெற்றதாக ரஷ்யப் பத்திரிகையொன்று தகவல் வெளியிட்டுள்ளமையால் பரபரப்பு தோன்றியுள்ளது. ரஷ்யாவில் வெளிவரும் முன்னணி செய்திப் பத்திரிகைகளில் ஒன்றான மொஸ்கோவ்ஸ் கீ கோம்சோ மொலெற்ஸ் என்ற பத்திரிகை கடந்த ஞாயிற்றுக்கிழமை இது தொடர்பாக கட்டுரையொன்றை வெளியிட்டுள்ளது.**

அக் கட்டுரையில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலைச் சம்பவம் தொடர்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு எதுவித தொடர்புகளும் கிடையாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ராஜீவ் காந்தி கொலையின் பின்னணியில் சில உத்தரவுகளை ரஷ்யா நாட்டு உளவுத்துறை எஸ்.வி. ஆர். பிறப்பித்தது எனவும் இந்தியாவில் உள்ள அரசியல்.செல்வாக்கு மிக்க நபர் ஒருவர் ராஜீவ் காந்தி கொலை யின்பின்னணியில் செயற்பட்டதாகவும் அவருக்கான உத்தரவுகள் சில ரஷ்ய உளவுத்துறையிடம் இருந்து அனுப் பப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இவ்வாறான பின்புலத்தில் இந்தியாவுக்கு கிடைத்த வேற்று நாடுகள் சிலவற்றின் தொடர்புகள் மூலம் ராஜீவ் படுகொலைச் சம்பவம் நடைபெற்றதாகவும் அந்தப் பத்திரிகையில் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (அ-5)

# வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலையின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழா நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை முதல் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை வரை தொடர்ந்து மூன்று நாட்கள் பாடசாலைவளாகத்தில்நடைபெறவுள்ளன.

முதல் நாள் விளையாட்டுவிழா நிகழ்வுகள் பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன் பாடசாலை அதிபர் திருமதி வேணுகா சண்முகரட்ணம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண விளையாட்டுப் பிரிவின் உதவி கல்விப்பணிப்பாளர் சார்பில் கே.டபிள்யூ.விமல்ராஜன், கௌரவ விருந்தினராக வடமாகாண கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா, சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் வடமாகாண பிராந்திய முகாமையாளர் கே.சுசீந்திரன், தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இரண்டாம் நாள் பண்பாட்டு நிகழ்வுகள் பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெறவுள்ளதோடு பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி சாதினி சிவநேசன், கௌரவ விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், சிறப்பு விருந்தினராக வடமாகாண வளவாளர் திருமதி மதிவாணி விக்னராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து நிறுவுநர் தினமாக அனுசரிக்கப்படவுள்ள 3 ஆம் நாள் நிகழ்வுகள் முற்பகல் 8 மணிக்கு நடைபெறவுள்ளன. பாடசாலையின் 175 ஆவது ஆண்டு விழா குழுவின் ஒருங்கிணைப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சிவமதி சிவச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வு பெற்ற தொலைத் தொடர்பு அத்தியட்சகர் திருமதி ராணிமலர் ஜெகசோதி, கௌரவ விருந்தினராக வடமா காண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ். சத்தியசீலன், சிறப்பு விருந்தினராக மெதடிஸ்த திருச்சபையின் வணபிதா சி.என்.ரவிசங்கர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(அ-5)

# சந்திரிகா- சரத் பொன்சேகா கூட்டு அரசியல் நடத்த முடிவு

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுடன் இணைந்து அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தீர்மானித்துள் ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன் ஒரு கட்டமாக எதிர்வரும் வடமேல் மாகாண சபைத் தேர்தலில் சரத் பொன்சேகாவின் தலைமையிலான கட்சியின் சார்பில் சந்திரிகாவுக்கு நெருக்கமான சுதந்திரக் கட்சி முக்கியஸ்தர்களும் போட்டி யிடவுள்ளனர் எனவும் தெரிவிக்கப் படுகின்றது.

இலங்கையில் ஆகக் கூடுதலான இராணுவத்தினர் வசிக்கும் பிரதேசம் குருநாகல் என்பதால் இம் மாவட்டத்தில் தமது கூட்டணி இலகுவாக வெற்றிபெறும் என இவர்கள் நம் பிக்கை கொண்டுள்ளதாகவும் இது தொடர்பான பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் சந்திரிகாவின் ஹொர கொல்லை இல்லத்தில் நடைபெற்ற தாகவும் அரசியல் வட்டாரங்களிலி ருந்து தகவல்கள் கசிந்துள்ளன.

இந்நிலையில் குருநாகல் அத்துகல விகாரையில் இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றிய முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க ஆளும் கட்சியைச் சேர்ந்த சிலர் கோடிக்கணக்கில் சம்பாதிப்பதாக குற்றம் சுமத்தியுள்ளார்.

நாட்டுக்கு தேவையான மின்சாரத்தை வழங்க முடியவில்லை. நாட்டை அபிவிருத்தி செய்ய அதிகளவு மின் உற்பத்தி நிலையங்களை உருவாக்க வேண்டும். எனினும் மின் உற்பத்திநிலையங்களை அமைக்க தேவையானளவு பணமில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் தம்முடைய ஆட்சிக்காலத்தில் சிறந்த பொருளாதாரத் திட்டமொன்றை உருவாக்கியிருந்ததாகவும் இலஞ்ச ஊழல் மோசடிகளை இல்லாதொழிக்க திட்டம் வகுத்திருந்ததாகவும் இன்று முன்னெடுக்கப் பட்டு வரும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை தாமே திட்டமிட்டதாகவும் சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். (அ-5)

# தெல்லிப்பழை பிரதேசத்தில் நடமாடும் சேவை ஜூலையில்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் oferr மற்றும் Paffrel நிறுவனத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் மற்றும் 2 ஆம் திகதிகளில் காலை 8.30 மணியளவில் தேசிய அடையாள அட்டையை பெற்றுக் கொள்வதற்கான இலவச நடமாடும் சேவை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத் தில் நடைபெறவுள்ளது.

எனவே வலிகாமம் வடக்கு பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்தவர்களில் இதுவரை காலமும் தமது தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளத் தவறியவர்கள் அல்லது தொலைத்தவர்கள் பிரதி அடையாள அட்டையை பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் புதுப்பிக்க வேண்டியவர்கள் இச் சேவையினூடாக அதனை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

மேலும் இப் பிரதேச செயலகப் பிரிவிலிருந்து இடம்பெயர்ந்து வேறிடங்களில் வசித்து வரும் பொது மக்களும் இதில் கலந்து கொண்டு பயன் பெறலாம் என தெல்லிப்பளை பிரதேச செயலர் கே.ஸ்ரீமோகனன் கேட்டுள்ளார். (அ-2)

# இலங்கையில் அரசியல் கைதிகள் எவரும் கிடையாது கஜதீர

(கொழும்பு)

இலங்கையில் அரசியல் கைதிகள் எவரும் தடுத்து வைக்கப்படவில்லை என சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் சந்திர சிறி கஜதீர தெரிவித்துள்ளார். தமிழீழ விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட உறுப்பினர்களே தடுத்து வைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய முக்கிய தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்கள் 810 பேர் இவ்வாறு தடுத்து வைக்கப் பட்டுள்ளனர். இவர்கள் அரசியல் கைதிகள் கிடையாது எனவும் கொலை உள்ளிட்ட பாரிய குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரும் எண்ணிக்கையிலான தமிழீழ விடுதலைப்புலி உறுப்பினர்களுக்கு புனர்வாழ்வு அளித்து சமூகத்துடன் அவர்கள் இணைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளர். குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்கள் உடைய புலி உறுப்பினர்களே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை விதிப்பதனை மனித உரிமை மீறலாக கருத முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்
1ஆம், 2 ஆம், 3ஆம், 4ஆம் வருடம்
வணிகமாணி / தொழில் நிர்வாகமாணி
இரண்டாம் அரையாண்டு மீள்பரீட்சைகள் 2011
மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பித்த மீள் பரீட்சார்த்திகள் தங்களது அனுமதி அட்டையின் முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். இப்பரீட்சைகள் 01.07.2013 இல் இருந்து ஆரம்பிக்கப்படும் பரீட்சை நேர அட்டவணையினை முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி அலுவலகத்தில் பார்வையிடலாம்.
பதிவாளர்
(சி-3775)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டி சுட்டதடா! கைவிட்டதடா!
புத்தி கெட்டதடா

-கண்ணதாசன்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சீனாவுடன் உறவைத் தொடுத்ததும் அ(வன்) செயலன்றோ!

விடுதலைப் புலிகளைத் தோற்கடிக்க வேண்டும் என்ற நிறுதிட்டமான முடிவில் வன்னிப் போரின் போது இந்திய அரசு இலங்கை அரசுக்கு வேண்டிய உதவிகளை வழங்கியது.

புலிகள் முற்றாக அழிக்கப்பட்டு விட்டனர் என்ற செய்தி கிடைக்கும்வரை யுத்த நிறுத்தம் செய்யப் படுவதை இந்தியா விரும்பியிருக்க இல்லை.

இதன் காரணமாக தனது தூதுவர்களை இலங்கைக்கு அனுப்பி தமிழர்களின் நலன்களை பேணுவதுபோல ஒரு காட்டாப்பை இந்திய மத்திய அரசு செய்து கொண்டிருந்தது.

தமிழகத்து மக்களை சமாளிப்பதற்கும் தங்களை மலையாக நம்பியிருக்கும் ஈழத்தமிழர்களுக்கு தாங்கள் அபயம் அளிப்பது போலக் காட்டிக் கொள்ளவும் இத்தகையதொரு முயற்சி.

இதற்கு அப்பால் விடுதலைப் புலிகளை தோற்கடிக்கும் வரை, இந்தியாவுடனான நட்பை உறுதி செய்வது என்பதும் போர் வெற்றி முடிந்த கையோடு இந்தியாவின் தலையீட்டை தவிர்க்கும் வகையில் சீனாவுடன் உறவைப் பலப்படுத்துவது என்ற நினைப்பும் இலங்கை அரசிடம் இருந்தது.

ஆக, விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பது, ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை மழுங்கடிப்பது என்பதைத் தவிர, வேறு எந்த விடயத்திலும், இலங்கை-இந்திய உறவு ஒருமைத்தன்மை கொண்டதாக இருக்க இல்லை என்பது மறுதலிக்க முடியாத உண்மை.

இதற்கு பல ஆதாரங்களைச் சுட்டிக் காட்ட முடியும்.

வன்னிப் போர் நடைபெற்ற கையோடு இந்தியத் தூதுவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்தனராயினும் அவ் விஜயத்தால் எந்தப் பயனும் தமிழ் மக்களுக்குக் கிடைக்கவில்லை.

அதிலும் ஆகக் கூடிய வேதனை, முட்கம்பி வேலிக்குள் சுமார் மூன்று இலட்சம் தமிழ் மக்களை அடைத்து வைத்து அதிகூடிய மனித உரிமை மீறல் சம்பவம் நிகழ்ந்த போதிலும் அதனைக் கூட இந்தியா கண்டு கொள்ளாமல் இருந்தமையாகும்.

அப்படியானால் போருக்குப் பின்பாக தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கு இந்தியா தீர்வு காண்பதற்கு அழுத்தம் கொடுக்குமா என்றால் அதுவும் இல்லை.

தமிழ் மக்களுக்கு உரிமையை வெற்றுக் கொடுத்தால், அது எந்த வகையிலும் தமிழகம் தனிநாடு அமைப்பதற்குக் காலாகி விடும் என்ற நினைப்பு இந்திய மத்திய அரசிடம் இருக்கவே செய்தது.

இதன் காரணமாக இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது பற்றி எதுவும் அலட்டிக் கொள்ளாமல், தமிழ் மக்களின் அடிப்படை வசதி, வீட்டுவசதி என்று பேசிக் கொண்டது. தானும் சில வீடுகளை கட்டித் தருவதாகவும் கூறிக் கொண்டது.

எனினும் இது பற்றி தெரிந்து கொள்ளாத இலங்கை அரசு எப்பேற்பட்டும் இந்தியா இனப் பிரச்சினைக்கு தீர்வு காணவேண்டும் என வலிறுத்தும் என நினைத்து சீனாவுடன் உறவை பலப்படுத்தியது.

சீனாவுடனான உறவின் காரணமாக ஆத்திரம் உற்ற இந்தியா 13-வது திருத்தச் சட்டமூலத்தை கையில் எடுத்துக் கொண்டு செய் என்று நிர்ப்பந்தம் கொடுக்க முடிவு கட்டி விட்டது.

ஆக எல்லாம் அ(வன்) செயல் என்று கூறுவதை விட வேறு எதுவும் இல்லை.

## யுவதி மீது பாலியல் தொந்தரவு; இளைஞனுக்கு அபராதம் விதிப்பு

யுவதி ஒருவருக்கு பாலியல் தொந்தரவு கொடுத்து வந்த இளைஞர் ஒருவருக்கு கடும் எச்சரிக்கை விடுத்ததோடு 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவு விடுத்துள்ளது.

வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் இளம் யுவதி ஒருவர் மேல் காதல் கொண்டு அவருக்கு பாலியல் தொந்தரவு கொடுத்ததாக வல்வெட்டித்துறைப் பொலிஸாரிடம் யுவதியினால் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதனையடுத்து குறித்த இளைஞனைக் கைது செய்த பொலிஸார் நேற்று புதன்கிழமை பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த இளைஞரைக் கடுமையாக எச்சரித்ததுடன் 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆட்பிணையில் செல்லவும் அனுமதித்தார்.

அத்துடன் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒவ்வொரு நாளும் காலை 6 மணி முதல் மாலை 6 மணிக்குள் குறித்த நபர் கையொப்பம் இடவேண்டும் எனவும் குறித்த யுவதிக்கும் குடும்பத்தாருக்கும் எந்தவிதமான தொந்தரவுகளையோ அச்சுறுத்தல்களையோ விடுக்கக் கூடாதெனவும் நீதவான் உத்தரவிட்டார். (அ-24)

## பொதுப்பரீட்சைக்கு முன் கருத்தரங்குக்குத் தடை

(கொழும்பு)

பொதுப்பரீட்சைகள் நடைபெறுவதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னரும் அந்த பரீட்சைகள் நிறைவடையும் வரையிலும் கருத்தரங்குகள் மற்றும் மேலதிக வகுப்புக்கள் நடத்துவதற்கு கல்வி அமைச்சு தடை விதித்துள்ளது.

இவ்விடயம் குறித்த புதிய கட்டளைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளதோடு இந்த சட்டம் கடந்த 21-ம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படுவதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கல்விப்பொது தராதர சாதாரணதரம், உயர்தரம் மற்றும் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைகளுக்கு இந்த புதிய சட்டம் அமுல்படுத்தப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த சட்டத்தை மீறுகின்ற நிறுவனங்கள் அல்லது நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (அ-5)

## உபகரணங்கள் கையளிப்பு

அந்திரான் ஜனசக்தி தோற்பொருள் உற்பத்தியாளர் விற்பனைக் கூட்டுறவுச் சங்கத்திற்கான இயந்திர உபகரணங்கள் கையளிப்பு நிகழ்வு சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கைத்தொழில் கிராமம் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சங்கானை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள அந்திரான் கிராமம், தோற்பொருள் உற்பத்திக் கிராமமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இக்கிராமத்திற்கு முதற்கட்டமாக, இயந்திர உபகரணங்கள், மூலப் பொருட்கள் கையளிப்பும், மேலதிக தொழில்நுட்ப மாற்றுப் பயிற்சியின் ஆரம்ப நிகழ்வும் இன்று வியாழக்கிழமை நண்பகல் 12.30மணியளவில் கே.என். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மேற்படி சங்கத்தில் நடைபெறவுள்ளது. (அ)

## கொலைச் சந்தேக நபருக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்

(கரவெட்டி)

வல்வெட்டித்துறை ஊறணிப் பகுதியில் குடும்பப் பெண் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய முக்கிய சந்தேக நபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

ஊறணிப் பகுதியில் கடந்த 10-ம் திகதி காலை 10மணியளவில் கொலை செய்யப்பட்டு சடலமாக காணப்பட்ட சோதிலிங்கம் தெய்வமலர் (வயது 64) என்ற ஏழு பிள்ளைகளின் தாயின் கொலைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட அவரது மருகனான நாகராசா சிங்கராசா என்ற சந்தேக நபரை நேற்று புதன்கிழமை பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மன்றில் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த சந்தேக நபரைத் தொடர்ந்தும் எதிர் வரும் யூலை 10-ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார் (செ-24)

## சத்திய தரிசனம்



பக்தி என்பது வழிபாட்டிற்கான ஒரு படத்தை வைத்து ஆரத்தி எடுத்து தினசரி பாபா பாபா எனக்கூறுவது எனப் பொருளாகாது. உண்மையான பக்தியில், உங்களுடைய நடத்தையில் மாற்றம் இருக்கவேண்டும். இறைவன் உங்களுடன் இருக்கிறார். அவர் எங்கும் வியாபித்திருக்கிறார். இந்த உண்மையை உணர்ந்துகொண்டு நீங்களும் இறைவனும் ஒன்றே எனும் தீர்மானத்திற்கு நீங்கள் வந்திட வேண்டும். இந்த உண்மையைத்தான் நீங்கள் உணர்ந்திட வேண்டும்.செல்வம்மீது கொண்ட பேராசையே பலவீனம் ஆனவர்களைப் பிடித்துள்ள அரக்கனாகும்.

புலன்களின் ஜூரத்தால் மனிதன் தாக்கப்பட்டுள்ளான். அதன்காரணமாக பொழுதுபோக்கு அம்சங்கள், இன்பங்கள், உல்லாசப் பயணம், நடனம் போன்றவைகளைத் தீர்வாகக் கொள்ள முயல்கிறான். ஒளிந்திருக்கும் அந்த வைரஸ் கிருமி சக்தி குன்றிப்போனால் மட்டுமே அந்த ஜூரம் குறையும். ஞானம் (உயர் அறிவு) எனும் கதிர்கள் அவன்மீது விழுகிற பொழுது மட்டுமே அந்த வைரஸ் கிருமி அழியும்.

நீங்கள் வெறுமனே புத்தகங்கள் படிப்பதோடு நிறுத்திக்கொள்ளாமல் உங்கள் உள்ளத்தில் உறையும் அன்பினை விரிவடையச் செய்து பிறருக்குச் சேவை செய்யவேண்டும். மக்களுக்குச் சேவை செய்வதே இறைவனுக்கு நீங்கள் சமர்ப்பிக்கின்ற வழிபாடு ஆகும்.

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்



## கோயிலில் நேர்ச்சைச்சோறு உண்ணத் தவறவேண்டாம் என்பது ஏன்?

கோயிலில் சமைக்கும் சோறு கண்டிப்பாக உண்ணவேண்டும் என்று கூறினால் இக்காலத்து இளைஞர்கள் கோயிலில் ஏன் சாப்பிடவேண்டும்? உணவு விடுதியிலோ வீட்டிலோ சாப்பிடலாமே என்பார்கள். அவர்கள் கூறுவதில் நியாயமிருக்கின்றது. பசியாறுவதற்கு கோயிலில் சாப்பிடவேண்டுமென்பதில்லையே. வீட்டிலோ விடுதியிலோ பசியாற்றிக் கொள்ளலாமே.

கோயில் சோறு பசிக்காக உண்ணுவதல்ல. இறைவனுக்குப் படைத்த அன்னம் உண்ணவேண்டும் என்பதற்காகவே. அதனால் இறைவன் அருள் கிடைக்கும் என்ற நம்பிக்கைக்காகவே உண்கின்றோம்.

கோயிலில் இறைவனுக்குப் படைத்த உணவில் பல சிறப்புக்கள் உள்ளன. இந்த சோறுக்காகப் பயன்படுத்தும் அரிசியின் சிறப்பென்னவென்றால் தவிடு நீக்காமல் குத்திய அரிசியையே பொதுவாக உபயோகிப்பது. அதன் குணங்கள் எதுவும் நட்டப்படாமல் சத்துள்ளதாகயிருக்கும்.

மேலும் கோயிலில் சமையல் செய்யும் பாத்திரமும் சிறப்பானது. ஓட்டினாலான் உருளியில் அது தயாராக்கப்படும். அலுமினியம் போல் தீங்குகள் எதுவும் ஓட்டில் இல்லை. அதனால் உடல் நிலைக்கு எந்தப் பாதிப்பும் வரவாய்ப்பில்லை.

இதைக்கிளறுவதற்கான பரந்த அகப்பைகள் இரும்பு அல்லது ஓட்டினால் செய்யப்பட்டவையாயிருக்கும். எதுவானாலும் தீங்கில்லை நன்மையே.

இரும்பினாலான அகப்பை மிக நன்று. இரும்பின் அம்சங்கள் உணவில் கலந்து சோறை மென்மைப்படுத்தும். இரும்புச் சத்தின் நன்மைகளை நவீன மருத்துவம் தெளிவாக விளக்கியுள்ளது. இதில் பக்தருக்குள்ள திருப்தி இறைவன் அருகாமை கிடைக்கப்பெறுவதே. இந்த நேர்ச்சைச் சோற்றில் சேர்க்கும் துளசி இலையும் மருத்துவ குணங்கள் கொண்டவைதான் என நாம் நன்கு அறிந்துள்ளோம் அல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.சி.சி. நடுவர் குழுவிலிருந்து இருவர் நீக்கம்

ஐசிசி நடுவர் குழுவில் இருந்து பாகிஸ்தான் நடுவர் ஆசாத் ரெஃப், நியூஸிலாந்து நடுவர் பில்லி பௌடன் ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குப் பதிலாக முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களான ரிச்சர்ட் இல்லிங்வொர்த், பால் ரீஃபெல் ஆகியோர் நடுவர் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக ஐசிசி நடுவர்கள் தேர்வுக் குழு தலைவர் ஜெஃப் அலார்டைஸ் கூறுகையில்,

ஐசிசி நடுவர்கள் குழுவில் இடம்பெற்றிருந்த நடுவர்களின் செயற்பாடுகள் கடந்த ஓர் ஆண்டில் எப்படியிருந்தது என்பதை அடிப்படையாகக் கொண்டு 2013-14 ஆண்டுக்கான நடுவர்கள் குழு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி இப்போது ஆசாத் ரெஃபும், பில்லி பௌடனும் நீக்கப்பட்டுள்ளனர். ஐபிஎல் சூதாட்ட விவகாரத்தில் ஆசாத் ரெஃபின் பெயர் அடிபட்டதைத் தொடர்ந்தே, அவருடைய பெயரைப் பரிசீலிக்கவில்லை என்றார்.

அண்மையில் இடம்பெற்ற சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் நடுவராக அறிவிக்கப்பட்ட ஆசாத் ரெஃப், அதன் பின்னர் ஐ.பி.எல் இல் சூதாட்ட குற்றச்சாட்டுக்கள் அவர் மீது எழுப்பப்பட்டதையடுத்து அத்தொடரிலிருந்து நீக்கப்பட்டிருந்தார்.

ஆனால், அந்தக் குற்றச்சாட்டுகளுக்கும், அசாத ரெஃப் இந்தக் குழுவிலிருந்து நீக்கப்பட்டதற்குமிடையில் சம்பந்தங்கள் கிடையாது எனத் தெரிவித்துள்ள சர்வதேச கிரிக்கெட் சபை, கடந்த வருடத்தின் பெறுபேறுகளின் அடிப்படையிலேயே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

நடுவர்கள் கடந்த 12 மாதங்களில் வெளிப்படுத்திய திறமை வெளிப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த சர்வதேச கிரிக்கெட் சபை, புதிய நடுவர்களை வரவேற்பதாகவும் தெரிவித்துள்ளது.

**புதிய நடுவர்கள்:**

அலீம் தார், குமார் தர்மசேன, ஸ்டீவ் டேவிஸ், மராயஸ் எரஸ்மஸ், இயன் கூல்ட், ரொனி ஹில், றிச்சர்ட் கெற்றல்புரோ, நைஜல் லோங், புரூஸ் ஒக்ஸென்போர்ட், றொட் ரக்கர், றிச்சர்ட் இலிங்வேர்த், போல் றெய்ஃபெல்


ஆசாத் ரெஃப்


பில்லி பௌடன்

## இலங்கை வருகிறது தென்னாபிரிக்க அணி

தென்னாபிரிக்க அணி இலங்கைக்கு மேற்கொள்ளவுள்ள கிரிக்கெட் தொடருக்கான போட்டி அட்டவணையை இலங்கை கிரிக் கெட் சபை வெளியிட்டுள்ளது. 5 ஒரு நாள் சர்வதேசப் போட்டிகள், 3 ருவென்ரி ருவென்ரி போட்டிகள் கொண்ட தொடரின் போட்டி அட்டவணையையே இக்கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

எதிர்வரும் ஜூலை 20ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ள இத்தொடர், ஓகஸ்ட 6ஆம் திகதி வரை கொழும்பு ஆர். பிரேமதாச மைதானம், பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானம், ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜ பக்ஷ சர்வதேசக் கிரிக்கெட் மைதானம் ஆகியவற்றில் இப்போட்டிகள் இடம்பெறவுள்ளன.

**போட்டி அட்டவணை:**

முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி - ஜூலை 20ஆம் திகதி - கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானம்

இரண்டாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி - ஜூலை 23ஆம் திகதி - கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானம்

மூன்றாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி - ஜூலை 26ஆம் திகதி - பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானம்.

நான்காவது ஒருநாள் சர்வதேசப் போட்டி - ஜூலை 28ஆம் திகதி - பல்லேகல சர்வதேசக் கிரிக்கெட் மைதானம்

ஐந்தாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி - ஜூலை 31ஆம் திகதி - கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானம்

முதலாவது ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டி - ஓகஸ்ட் 2ஆம் திகதி - கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானம்

இரண்டாவது ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டி - ஓகஸ்ட் 4ஆம் திகதி - அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசக் கிரிக்கெட் மைதானம்

மூன்றாவது ருவென்ரி ருவென்ரி சர்வதேசப் போட்டி - ஓகஸ்ட் 6ஆம் திகதி - ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேசக் கிரிக்கெட் மைதானம்.

## உருகினார் ஹர்பஜன்; கொடுத்தார் 10 இலட்சம்!



இந்திய கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங், உத்தரகண்ட் மாநில வெள்ள நிவாரண நிதிக்காக ருபா பத்து இலட்சம் வழங்கினார்.

உத்தரகாண்ட் மாநிலத்தில் பெய்த கன மழை காரணமாக வெள்ளப் பெருக்கு, நிலச்சரிவு கள் ஏற்பட்டன. இங்குள்ள உத்தர்காசிக்கு புனித யாத்திரை சென்ற இந்திய கிரிக்கெட் வீரர் ஹர்பஜன் சிங் உள்ளிட்ட பல ஆயிரக்கணக்கானோர், வெள்ளத்தில் சிக்கினர். கடைசியாக ஜோஷிமாத் எனும் இடத்திலுள்ள இந்தோ-திபெத் எல்லைப்பகுதி பொலிசாரின் முகாமில் ஹர்பஜன் சிங் மீட்கப்பட்டார்.

இந் நிலையில் வெள்ள அனர்த்தங்களால் மனம் வெந்துள்ள ஹர்பஜன் சிங் கூறுகையில்,

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உத்தரகாண்ட் மாநிலத்துக்கு ருபா பத்து இலட்சம் நிதி உதவி வழங்குகிறேன். இதன் ஒரு பகுதி பிரதமர் நிவாரண நிதியாகவும், மற்றொரு பகுதி பஞ்சாப் மாநில அரசின் நிவாரண நிதியாகவும் வழங்கப் படும், என்றார்.

### ரி-20 முதல் போட்டியில்

# நியூசிலாந்து வாகை

நியூசிலாந்து - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ரி-20 போட்டியில் நியூசிலாந்து அணி 5 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

லண்டன் ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 20 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை இழந்து 201 ஓட்டங்களைக் குவித்தது.

முதலாவது ஓவரில், ஓர் ஓட்டத்தை மாத்திரம் பெற்றிருந்த நிலையில் முதலாவது விக்கெட்டை இழந்த நியூசிலாந்து அணி, இரண்டாவது விக்கெட்டுக்காக 114 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தது. அதன் பின்னர் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்திய நியூசிலாந்து அணி 201 ஓட்டங்களைக் குவித்தது.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக பிரென்டன் மக்கலம் 48 பந்துகளில் 68 ஓட்டங்களையும், ஹேமிஸ் றதர்போர்ட் 35 பந்துகளில் 62 ஓட்டங்களையும், றொஸ் டெய்லர் 19 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்து அணி சார்பாக லூக் ரைட் 2 விக்கெட்டுக்களையும், போய்ட் ராங்கின், ஜேட் டேர்ண்பக் இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

202 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி, 20 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 196 ஓட்டங்களைப் பெற்று, 5 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது விக்கெட்டுக்காக 3.4 ஓவர்களில் 50 ஓட்டங்களைக் குவித்த அவ்வணி, 10.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 105 ஓட்டங்களுடன் பலமாகக் காணப்பட்டது. ஆனால், அதன் பின்னர் விக்கெட்டுக்கள் இழக்கப்பட, அவ்வணியால் தேவையான ஓட்டங்களைப் பெற முடியாது போனது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக லூக் ரைட் 34 பந்துகளில் 52 ஓட்டங்களையும், அலெக்ஸ் ஹேல்ஸ் 29 பந்துகளில் 39 ஓட்டங்களையும், ரவி போப்பாரா 18 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 30 ஓட்டங்களையும், மைக்கல் லம்ப் 15 பந்துகளில் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக றொனி ஹீரா, மிற்சல் மக்லநகன், இயன் பட்லர், நேதன் மக்கலம் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக நியூசிலாந்து அணியின் ஹேமிஸ் றதர்போர்ட் தெரிவானார்.




## புற் தரை மைதானத்தில் விளையாடுவது கடினம்; நடால்



விம்பிள்டன் டெனிஸ் போட்டியின் முதல் சுற்றில் அதிர்ச்சி தோல்வி அடைந்தாலும், அடுத்து வரும் ஆண்டுகளில் பட்டம் வெல்ல முயற்சிப்பேன் என்று நட்சத்திர வீரர் ரபேல் நடால் கூறியுள்ளார்.

பிரபல விம்பிள்டன் டெனிஸ் தொடர், லண்டனில் நடைபெற்று வருகிறது.

இதன் ஆண்கள் ஒற்றையர் பிரிவு முதல் சுற்றில் நட்சத்திர வீரர் ரபேல் நடால் (5ஆவது ரேங்க்), தரவரிசையில் 135ஆவது இடத்தில் உள்ள ஸ்டீவ் டார்சிசுடன் மோதினார். இந்த போட்டியில் தனது இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியாமல் தடுமாறிய நடால் 6,7 (4,7), 6,7 (8,10), 4,6 என்ற நேர் செட்களில் அதிர்ச்சி தோல்வியடைந்து வெளியேறினார்.

இந்த தோல்வி குறித்து நடால் கூறுகையில்,

புல்தரை மைதானத்தில் விளையாடுவது மிகவும் கடினம் என்பதை உணர்ந்துள்ளேன். இந்த முறை இங்கு சாதிக்க முடியாதது ஏமாற்றம் அளிக்கிறது. ஆனால், அடுத்த சில ஆண்டுகளுக்கு தொடர்ந்து வருவதுடன் கிண்ணம் வெல்ல கடுமையாக முயற்சிப்பேன். ஏனைய மைதானங்களில் விளையாடுவதை விட, புற்தரை களத்தில் கடினமாக உழைக்க வேண்டியுள்ளது. எனினும், இந்த தோல்விக்கு முழங்கால் மூட்டு காயத்தை காரணமாக சொல்ல விரும்பவில்லை. அடுத்து வரும் தொடர்களில் சிறப்பாக விளையாடுவேன் எனக் கூறினார் நட்சத்திர வீரர் ரபேல் நடால்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட மாகாண சபைத் தேர்...

கள் குறித்து விபரிக்கையிலேயே இந்த தவல்களை வெளியிட்டார்.

மேலும் வட மாகாண சபைத் தேர்தலில் ஆசிய நாடுகளின் கண்காணிப்பாளர்களை கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்துவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். சுயாதீனமானதும் நேர்மையானதுமான தேர்தலுக்கான ஆசிய வலையமைப்பு என்ற அமைப்பின் ஊடாகவே இதனை மேற்கொள்ளவுள்ளோம்.

அந்த வகையில் தாய்லாந்து, பங்களாதேஷ் நேபாளம், ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா ஆகிய நாடுகளின் கண்காணிப்புப் பிரதிநிதிகளை வடக்குத் தேர்தலில் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தத் தீர்மானித்துள்ளோம்.

அடுத்த கட்டமாக எதிர்வரும் முதலாம் திகதியிலிருந்து 8 நாட்கள் யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளில் நடமாடும் சேவைகளை நடத்தவுள்ளோம். இதன்போது முத்திரை மற்றும் புகைப் படங்களுக்கான செலவை பவ்ரல் அமைப்பு ஏற்கின்றது.

நடமாடும் சேவையின்போது ஆரம்ப விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து ஆட்பதிவு திணைக்களத்தின் அதிகாரிகளிடம் வழங்குவோம். அதன் பின்னர் 2 வாரங்களில் உரியவர்களுக்கு அடையாள அட்டை கிடைத்துவிடும். இந்த விடயத்தில் ஆட்பதிவு திணைக்களத்தினதும் அதன்ஆணையாளரினதும் சேவையும் ஒத்துழைப்பும் மிகவும் முக்கியமானதாகும் என்றார். (செ-11)

# முன்னாள் போராளி...

தொங்கிய நிலையில் இவர் சடலமாக காணப்பட்ட நிலையில் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளார்.

20 வருடங்களுக்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகளின் சாவகச்சேரி பகுதியின் முக்கிய உறுப்பினராக இருந்த இவர் 14 வருடங்களுக்கு முன் தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவ் அமைப்பில் இருந்து விலகியிருந்தார்.

பிரஸ்தாப நபரின் சடலமானது பிரேத பரிசோதனையின் பின்னர் நேற்றைய தினமே உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-24)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர் அருள்மிகு ஸ்ரீஅங்குசபாச பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளது.

11-ம் நாள் திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு அபிஷேகமும் 10.30 மணிக்கு வசந்த மண்டப பூஜையும் தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

மாலை 5 மணிக்கு நித்திய பூஜையும் அதனைத் தொடர்ந்து வசந்த மண்டப பூஜையும் திருவூஞ்சலும் இடம்பெற்று, விநாயகர் வெளி வீதியுலா வரும் காட்சியும் இடம்பெறவுள்ளது.(செ-11)




**அகில இலங்கையில் முதன் முறையாக**
**ஸ்ரீ சீரடி சாயி பாபாவின்**
**சாவடி ஊர்வலம்**
**28.06.2013**

அன்பான பக்தர்களே!

**நாளை :**

மாலை 3.30 மணிக்கு - விசேடதுனி பூசை
மாலை 4.00 மணிக்கு - 108 சங்காபிஷேகம்
மாலை 6.00 மணிக்கு - வசந்தமண்டபபூசை, திருவூஞ்சல்
இரவு 7.00 மணிக்கு - சாவடி ஊர்வலம்

(வழி :- ஆலயம் ☞ மருதடி வீதி ☞ றக்கா வீதி ☞ இராசாவின் தோட்ட வீதி ☞ நாவலர் வீதி ஊடாக ஆலயம் )

**இந்தியா சீரடியில் நடைபெறுவது போன்று சாவடி ஊர்வலம் நடைபெற உள்ளது.**

"சீரடி சாயி மந்திர்"
314, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.
T.P:- 0777-222-568
021-321-1605

- ஆலயத்தினர்

(3132)



## இணுவில் திருப்பதி

# அருள்மிகு பத்மாவதி தாயார் கோதை நாச்சியார் உடனுறை

# திருவேங்கடேஸ்வரர் ஆலய நூதன மஹாசம்ப்ரோஷணம்

## (மஹாகும்பாபிஷேகம்)

## 27.06.2013







### செஞ்சொற்செல்வரின் ஆசிச்செய்தி



இனிய திருவூர் இணுவில். திருக்கோவில்கள் நிறைந்த திருவூரில் திருப்பதி நாராயணனுக்கு பெருங்கோவில் உருவாக்கி மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது அறிந்து மிகவும் ஆனந்தமடைகிறேன். தர்மம் நிலைப்பதற்காக இத் தரணியில் அவதாரம் எடுத்த பிரானுக்கு பெருங்கோவில் எடுத்தமை போற்றுதலுக்குரியது.

இணுவிலில் பிறந்தவர்களுக்கு இயற்கையாகவே இறைபணி செய்யும் பண்பு நிறைந்திருப்பதை அனைவரும் ஒத்துக்கொள்வர். அவ்வகையில் சிறுபராயம் முதல் பரராசசேகரப் பிள்ளையாரை வழிபாடு செய்து பிறர்க்கு தீமை எண்ணாது வாழ்ந்த குடும்பம் சண்முகராசா மகேஸ்வரி தம்பதிகள்.

இக்குடும்பத்து மைந்தனாகிய சண்முகராசா கணேசலிங்கம் கடந்த இருபத்தொன்பது ஆண்டுகளாக கனடாவில் வாழ்ந்து வருகிறார். வெங்கடேஸ்வரப்பெருமானுக்கு பெருங்கோவில் கட்டவேண்டும் என்ற அவரது தாகம் இன்று நிறைவேறியிருக்கிறது. உலகப் பிரசித்தி பெற்ற திருப்பதியை தன் தாயகத்தில் உருவாக்கி வழிபட வழிசெய்ய வேண்டும் என்ற சிந்தனை நனவாகிவிட்டது.

பல மனிதர்களுக்கு பல ஆசைகள் உருவாவது இயற்கை. எனினும் திரு.கணேசலிங்கம் அவர்களின் பரந்த நோக்கம்; தான் பிறந்த மண்ணில் திருப்பதி வெங்கடாசலபதியை பலரும் தரிசிக்க வழிசெய்ய வேண்டும் என்பது. கனவு நனவாகிவிட்டது. அழகான அற்புதமான கோவில் உருவாகியுள்ளது. அவரது உற்ற ஊர் நண்பர்கள் அவருக்கு துணையாக நின்று இக்கைங்கரியத்தை ஒப்பேற்றியுள்ளார்கள். தெய்வதரிசனம் தேசத்தைப் புனிதப்படுத்துவதற்கு உதவும். இணுவில் பெருந்தெருவில் பெருமாளுக்கு பெருங்கோயில் உருவாகியுள்ளமை எமக்கு அப்பாற்பட்ட சக்தி என்பதை உணர்வோம். ஓர் நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் கூறி வழிபடும் மரபுபற்றி மணிவாசகப்பெருமான் எடுத்துரைத்த வார்த்தை உணர்வு பூர்வமானது. உய்வதனைத்திலும் ஒன்றாய் விளங்கும் ஓர் பொருளானது தெய்வம் என்ற பாரதியார் வார்த்தை கடவுள் தத்துவத்தை நன்கு புலப்படுத்துகிறது. எமது சந்ததி தெய்வீக வாழ்வு வாழ்வதற்கு அருள்மிகுந்த திருப்பதிநாதன் அரணாக நின்று அருள் செய்ய வேண்டி வாழ்த்துகிறேன்.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.
தலைவர், சிவபூமி அறக்கட்டளை

### மஹாசம்ப்ரோஷண குருவின் ஆசி...



அறுவகைச் சமய நெறிகளைப் பேணிக் காப்பாற்றி வருவது நமது இந்து மரபு. அத்தகைய நெறிமுறை வழிபாட்டில் தலித்தனி கடவுளர் கானப்படுகின்றனர்.

அவர்களில் தனித்துவம் பெற்றவராக வழிபடப்படுபவர் திருமால். திரு என்ற சொல்லே அழகு. செல்வம், சிறப்புப் பொலிவு பேறு (பாக்கியம்), தெய்வத்தன்மை என்ற பொருளிலே சுட்டப்படுகின்றது.

எனவே இத்தனித்துவமான கடவுள் பக்தர்கள்மேல் கொண்ட கருணையினாலே பல இடங்களில் எழுந்தருளியுள்ளார். அத்தகைய இடங்களில் பாவங்களைப் போக்கவல்ல மலைகளில் வேங்கடபர்வதம் என்னும் மலையிலே எழுந்தருளியுள்ளார். அவருக்கு வேங்கடேஸ்வரர் அல்லது வெங்கடேஸ்வரர் என்ற பெயர் உண்டாயிற்று.

அவ்வண்ணமே அவன் நம்மீது கருணை கொண்டால்போலும் எம் இணுவை பக்தரில் உள்ளத்தில் எழுந்த தன்னலம் கருதாத பக்தி உணர்வின் செயற்பாட்டிலே உருவான இவ்வாலயத்தில் எங்குமிலா 12 அடி உயரமுடைய திருவேங்கடேஸ்வரர் வீற்றிருக்கவுள்ளார். இத்தனித்துவம் வாய்ந்த கடவுளின் குடமுழுக்கானது வைணவ சம்பிரதாய முறைப்படியும் குடாநாட்டு மரபைச் சார்ந்தும் மஹாசம்ப்ரோக்ஷணமாக நடைபெறவுள்ளது.

ஆகையால் இம் மஹாசம்ப்ரோக்ஷண வைபவத்தின் மூலம் நமது கிராமத்திலும் நகரத்திலும் தேசத்திலும் இன ஒற்றுமையும் நிம்மதியான வாழ்வும் அறநெறிப்பட்ட சிந்தனை மேலோங்கவும் எல்லா மக்களும் சகல பேறும்பெற எல்லாம் வல்ல பத்மாவதி தாயார் கோதை நாச்சியார் உடனுறை ஸ்ரீ வேங்கடேஸ்வரர் [illegible] கிறேன்.

**வை.சோமாஸ்கந்தக்குரு**

### இணுவில் திருப்பதி தேவஸ்தான அறங்காவலர் திரு.சண்முகராஜா கணேசலிங்கம் அவர்களின் செய்தி



என்னை யான் அறியேன். இறைவனின் திருவருள் நடக்கிறது. கடந்த 29 ஆண்டுகள் தேசம் கடந்து கனடாவில் வாழும் எனக்கு கடவுள் தந்த் சந்தர்ப்பம்.

கண்ணனை நினைத்தால் சொன்னது பலிக்கும் என்பார்கள்.

என் பிறந்த மண்ணில் திருப்பதியானை இருத்தி இம் மண்ணுக்கும் மக்களுக்கும் விமோசனம் கிடைக்க வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. யான் கண்ட கனவு நனவாகிக் கொண்டிருக்கிறது. சிலர் கோவில் ஏன் என்பார்கள்? சிலர் நல்ல காரியம் என்பார்கள். எதுவுமே இறை செயல் என்பது என் நம்பிக்கை. இத்திருக்கோவில் திருப்பணியை ஆரம்பித்த நாள்முதல் எனக்குப் பேருதவியாக விளங்கிய என் இனிய நண்பன், உறவினன் திரு. சுப்பையா பரமேஸ்வரலிங்கம் (உருத்திரன்) அவர்களின் திருத்தொண்டைப் போற்றுகின்றேன். பல வழிகளிலும் கனடாவிலும் இணுவிலிலும் உதவிய உறவுகள், நண்பர்கள் அனைவருக்கும் என் இதயபூர்வமான நன்றிகள் உரித்தாகுக.

இந்தியாவிலிருந்து மிகப்பெரிய விக்கிரகங்களைச் செதுக்கி கப்பலில் அனுப்பி வைத்த சிற்பக் கலைஞர்களுக்கும், நவாலியூர் சிற்பாச்சாரியார் திரு.தி.சந்திரகுமார் அவர்கட்கும், உள்ளூர் கலைஞர் பெருமக்களுக்கும் மகா கும்பாபிஷேக கிரியைகளை நிறைவேற்றும் சிவாச்சாரியப் பெருமக்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

என் இனிய பக்தர்களே! இப்புனித திருக்கோவிலை கண்ணை இமைகாப்பதுபோல் காத்து உதவுங்கள். தினமும் வழிபாடு செய்யுங்கள். அன்னதானம், அறிவுத்தானம் அனைத்தும் எங்கள் தேவஸ்தானத்தில் நித்தமும் நிறைவாக நடக்கட்டும். அபயகரங்களோடு சங்குசக்கர வேங்கடநாதன் அனைவர்து கவலையும் போக்குவான். அவன் [illegible] சீராய் வாழ்வோமாக.

**ச.கணேசலிங்கம் - அறங்காவலர்**

திருப்பதி வெங்கடேசப் பெருமான் துணைகொண்டு,

இக் கைங்கரியம் நடைபெறுவதற்கு ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருவருளும் சிவஸ்ரீ வை.சோமாஸ்கந்தக்குருக்களின் ஆசியுடனும் உலகளந்த பெருமானின் பக்தன் உயர்திரு ச.கணேசலிங்கத்தின் ஆதரவில் தொடங்கப்பெற்ற இணுவையம்பதி வெங்கடேசப் பெருமான் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழாவின் போது:

வைஸ்வம் வளர்த்த பெரியோர்கள்:

1. மூலவர் கண்ட முதல்வர் (பொய்கை யாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார்)
2. அடியார் சொல்கேட்ட ஆண்டாள் (திருமழிசையாழ்வார்)
3. குருகூர் தந்த ஞானகுரு ( நம்மாழ்வார்)
4. இன் கவி செய்த மதுரகவியார் (மதுரகவியாழ்வார்)
5. அடிஆடிய அரசு(குலசேகரராழ்வார்)
6. பெருமானை வாழ்த்திய பெரியார் (பெரியாழ்வார்)
7. பாவை பாடிய பாவை (ஆண்டாள்)
8. தொண்டரைத் தொழுத தொண்டர் (தொணடரடிப் பொடியாழ்வார்)
9. பரமனைப் பாடிய பாணர் (திருப்பாணாழ்வார்)
10. பகவானிடம் வழிப்பறி செய்த பக்தர் (திருமங்கையாழ்வார்)

வெங்கடேசப் பெருமானின் கருவறை அர்த்த மண்டபத்தில் பன்னிரெண்டு ஆழ்வார்கள், கருடன், ஆஞ்சநேயர் தசாவதாரம், புத்தர் போன்ற திருவுருவங்கள் மூலஸ்தானத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது விமானத் தோற்றம் வைஸ்ணவ சமய கலாசாரமும் பல்லவர் காலத்தில் இருந்து அழியாத கலைநுட்பமும் சேர்ந்து மூலவரின் கருவறை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதில் கண்ணனின் குறும்புகளும் சினிவாசனின் அற்புத தோற்றமும் நரசிம்மரின் கொடூரக் காட்சியும் திருவடியைப் பற்றினால் எல்லாம் பெறமுடியும் என்பதன் மும்மூர்த்திகளின் அகங்காரமும் ஸ்ரீதேவி, பூதேவி, நாராயணன் எனும் திருப்பதியில் இல்லாதவாறு தாயார் ஆண்டாள் சன்னிதானமும் எனக்கு நிகர் இல்லை என்பதை உணர்த்தும் வகையில் மைய ஸ்தானத்தில் அமைந்துள்ளன மூலவரின் கருவறையிலே நீரில் இருந்து பஞ்சலோகங்களினால் தொடர்பு படுத்தி அண்ட சராசரங்களையும் விண்ணைத் தொட்ட வண்ணம் இருக்கின்றார் உலகளந்த பெருமாள். பெருமாளின் எதிரில் கருடன் பலிபீடமும் ஈசானத்தில் ஆஞ்சநேயரும் அமைக்கப்பட்டுள்ளது.

கோயிலின் வாயிலில் திரிதள விமானத்துடன் கணநாதர் அமைக்கப்பட்டு திருக்குட முழுக்கு காணும்போது இணுவில் வாழ் அடியார்கள் மற்றும் சு.பரமேஸ்வரலிங்கம் அவர்களுக்கு நன்றி கூறுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

**அருட்கலைச் சக்கரவர்த்தி**
**நவாலியூர் தி.சந்திரன்**

(சி-3778)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்...

அத்துடன் தியத்தலாவையில் உள்ள படைத்தரப்பின் பயிற்சிக் கல்லூரியில் நாளை பயிற்சி களை முடித்து வெளியேறும் படைத்தரப் பினரின் அணி வகுப்பு நிகழ்வில் ஜெனரல் அஸ் பக் பர்வேஸ் கயானி பிரதமவிருந்தினராக கலந்து கொள்ள வுள்ளார்.

2011ஆம் ஆண்டு முதற்தட வையாக இலங்கை விஜயம் செய் திருந்த பாகிஸ்தான் படைத் தளபதி ஜெனரல் அஸ்பக் பர்வேஸ் கயானி தற்போது 2 ஆவது தடவையாக இலங்கைக்கு விஜ யம் செய்யவுள் ளமை குறிப்பிடத் தக்கது.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது இலங்கைக்கு பாகிஸ்தான் ஆயு தத் தளபாடங்களை வழங்கியிருந் தமை தெரிந்ததே. (செ-1)

## மீன்பிடி இறங்கு...

அரசாங்கத்தின் ஒத்துழைப் புடனும் புனரமைக்கப்பட்ட இவ் மீன்பிடி இறங்குதுறை கடந்த சில மாதங் களிற்கு முன்னர் திறப்புவிழா நடை பெறும் என அறிவிக்கப்பட்டு திறப்பு விழா ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி யாகிய நிலையில் இறுதி நேரத்தில் காரணம் கூறப்படாது திறப்புவிழா பிற்போடப்பட்டது.

பின்பு இரண்டாவது தடவையாக நேற்றைய தினம் திறப்பு விழா திகதி குறிக்கப்பட்டு இதில் கலந்து கொள் வதற்காக நீரியல் வளத்திணைக்கள அமைச்சர் ராஜித சேனாரத்தின, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவா னந்தா, வடமாகாண ஆளுநர் என் போர் உட்பட பலருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இவர்கள் இத்திறப்பு விழாவில் கலந்து கொள்வார்கள் எனவும் எதிர் பார்க்கப்பட்டது. எனினும் கடைசி நேரத்தில் இவர்கள் அனைவரும் கலந்து கொள்ளாததோடு அரச திணைக்கள அதிகாரிகளும் இவ் கையளிப்பு வைபவத்தினை புறக் கணித்து இருந்தார்.

இவ் புறக்கணிப்பு தொடர்பில் கடற்றொழில் ரீதியில் வளத்திணைக் கழத்தினரிடம் கேட்டபோது, எமது அமைச்சர்கள் கலந்து கொள்ளாத வைபவத்தில் எம்மால் கலந்து கொள்ள முடியாது என அவர்கள் தெரிவித்தனர்.

அமைச்சர்கள் கலந்து கொள் ளாத தற்கு காரணம் எமக்கு தெரி யாது எனவும் அவர்கள்- பதிலளித் தனர். இதேவேளை இத்திறப்பு விழா வில் புலனாய்வாளர்களின் கண் காணிப்பு மிக அதிகமாகவே காணப் பட்டது.

இக் கண்காணிப்பிற்கு கார ணம் அமைச்சர் ராஜித சேனாரத் தின 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் திருத்தம் செய்வதற்கு எதிராக குரல் கொடுப்பதே காரணம் என விழாவில் வந்திருந்தவர்கள் முணுமுணுத்ததனை அவதானிக்க வும் முடிந்தது. (செ-4)

## அரசாங்கத்தைப் ...

மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்குதொடர்ந்துஉரையாற்றுகையில்,

இலங்கை-இந்தியா ஒப்பந்தம் கைச்சாத்திடும் விடயத்தில் எதிராக இருந்தவர்கள் தற்பொழுது அதற்கு ஆதரவாக உள்ளார்கள். ராஜித, ரெஜினோல்ட் குரே போன்றோர்கள் சந்திரிகாவின் கணவரின் கட்சியான மகாஜனகட்சியில்இருந்தவர்கள்அவர்கள் அன்றும் ஆதரவாக இருந்தவர்கள் இன்றும் ஆதரவாகப் பேசுகின்றனர்.

ஆனால் செம்டம்பரில் தமிழ்த் தேசியமுன்னணிக்குவடக்குமாகாண சபை ஆட்சி செல்வதற்கு முன் 13 ஆவது திருத்தத்தில் பொலிஸ் காணி அகற்ற வேண்டும். அந்த நிலைப் பாட்டிலேயே எமது கட்சி உள்ளது. வடக் கில் எமது கட்சி போட்டியிடு வதில்லை.

இந்தியா - இலங்கை ஒப்பந்தத் தில் முதலில் மீறியது இந்தியாவே ஒப்பந்தம் கைச்சாத்திட்டு விடுதலைப் புலிகள் ஆயுதத்தை கீழே வைப்பார் கள் என்று சொல்லி இந்தியா ஒப் பந்தம் கைச்சாத்திட்டது.

ஒப்பந்தம் கைச்சாத்திட்டு 5 நாட் கள் செல்லவில்லை. விடுதலைப் புலிகள் ஆயுதத்தை வைக்கவில்லை இதனை மீறியது இந்தியாவே.

ஐ.தே.கட்சி 13ஆவது திருத்தத் தில் எவ்வித திருத்தமும் மேற்கொள்ள ஆதரவு இல்லை என தெரிவித்துள்ள னர். ஐ.தே.கட்சி எதிர்காலத்தில் இணைந்து தமிழ் தேசியக் கூட்ட மைப்புடன் அரசியல் செய்வற்கா கவே உள்ளனர். அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு ஆதரவாக ஐ.தே.கட்சி செயல்படுகின்றது.

வாசுதேவ நாணயக்கார போன் றோர் தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு ஆதரவாகப் பேசுகின்றனர். அவர்கள் யுத்தம் செய்யாமல் சமா தானம் செய்யச் சொன்னவர்கள். வட கிழக்கை இணைத்து சுயாட்சி முறை வழங்க சொன்னவர்தான் வாசுதேவ நாணயக்கார போன் றோர்கள்.

ஆனால் ஜனாதிபதி தற்போது ஆட்சியிலுள்ள சகல கட்சிகள் பாரா்ளு மன்ற உறுப்பினர்களையும் வைத் துக் கொண்டு இத்திருத்தத்தை மேற் கொள்ளவே முயற்சிப்பதாகவும் அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித் தார். (செ-1)

## குடும்பஸ்தர்...

சடலமானது சிதைந்துபோயுள்ளதோடு கையில் வெட்டுக்காயங்களும் காணப்பட்டன. சடலத்தினை நேற்றுமாலை 5.30 மணியளவில் பார்வை யிட்ட நீதவான் மா.கணேசராஜா சடலத்தினை மருத்துவப் பரிசோத னைக்காக அநுராதபுர வைத்தியசாலையில் ஒப்படைத்து மருத்துவ அறிக் கையினை முல்லைத்தீவு நீதிமன்றத்தில் ஒப்படைக்குமாறு பொலிஸாருக் கு உத்தரவிட்டார். உயிரிழந்தவருடன் குளிக்கச் சென்றவர் தொடர்பான தகவல் இதுவரை கிடைக்கவில்லை. (செ-267)

## 13 இல் இரண்டு...

அகற்றப்படவேண்டுமென நேற் றைய கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இரண்டு அல்லது அதற்கு மேற் பட்ட மாகாண சபைகள் இணைந்து தனி மாகாணசபையாக இயங்க முடியும் என்ற ஏற்பாடு நீக்கப்படல் வேண்டும் என்பது அதில் ஒன்றாகும்.

மாகாண சபை அதிகாரத்தின் கீழுள்ள பொதுபட்டியலில் உள்ள விடயங்களை திருத்துவதற்கு சகல மாகாண சபைகளிலும் அங்கீகரிக்க வேண்டும் என்பதும் நீக்கப்படல் வேண்டும் என்பது மற்றொன்றா கும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந் திரக் கட்சி எடுத்துள்ள இந்த தீர் மானத்தை அரசாங்கத்தின் நிலைப் பாடாக ஆக்கிகொள்வதற்கும் தீர் மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது. (செ-1)

## இலங்கை பௌத்...

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டி லேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எமது நாட்டின் அரசியலமைப் பில் பௌத்த மதத்தினருக்கே அனைத்து தடைகளும் இடை யூறு களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பௌத்தர்களின் உரிமைகளுக்கே அதில் மறுப்பு உள்ளது. சிறுபான்மை மதங்களின் உரிமைகளுக்கு பிரச் சினை இல்லை. மாறாக அனைத் துப் பிரச்சினைகளும் பௌத்த மதத்துக்கே இருக்கின்றது.

இந்த நிலையில் 400க்கும் மேற்பட்ட வேற்று மத அமைப்புக் கள் பௌத்தர்களின் உரிமைகளை கேள்விக்குட்படுத்தும் வகையில் செயற்பட்டுவருகின்றன. பௌத்தர் களின் புனித நாட்களில் கூட நிம்மதி யாக வழிபாடுகளை மேற்கொள்ள முடியாதவாறு இந்த அமைப்புக் கள் செயற்படுகின்றன.

எமது நாட்டின் கலாசாரத்தை சீர் குலைக்கும் வகையில் செயற்படு கின்றன. எனவே இந்த விடயம் குறித்து அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்தாக வேண்டும். இல்லாவிடின் இந்த நிலைமை நீடித்தால் நாட்டில் மத முரண்பாடு தோன்றுவதை தவிர்க்க முடியாது போய்விடும்.

இவ்வாறான வேற்று மத அமைப் புக்களின் செயற்பாடுகளை தடுப் பதற்கு சட்டத்தில் இடம் இல்லை யெனின் புதிய சட்டங்களை உரு வாக்க வேண்டும். அதற்காகத்தான் மக்கள் பிரதிநிதிகளை பாராளு மன்றத்துக்கு அனுப்புகின்றோம். அரசாங்கம் இந்த விடயத்தில் ஒன் றும் செய்யாவிடின் உத்தியோக பூர்வ மற்ற பொலிஸாக பொது பல சேனா செயற்படவேண்டியேற் படும் என்பதனை அறிவிக் கின் றோம். எதிர்வரும் எசல போயாவுக்கு முன்னர் இந்த விடயம் குறித்து கத்தோலிக்க சபை அல்லது கர்தி னால் உடனாவது பேச்சு வார்த்தை ஒன்றை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தப் பேச்சுவார்த்தையில் நாங்களும் பங்குபற்ற வேண் டும்.

நாட்டின் ஜனாதிபதியும் பௌத்த மத மக்களின் வாக்குகளினாலேயே ஆட்சிக்கு வந்தார். எனவே பௌத்த மத மக்களின் உரி மைகள் குறித்து ஆராய் வதற்கு அவருக்கு பொறுப்பு உள்ளது. குறிப்பாக புத்தசாசனம் என்றால் என்ன என்பது குறித்து ஒரு வரை விலக் கணம் அவசியம்.

புத்த சாசன அமைச்சிடம் நாட்டில் எத்தனை பள்ளிவாசல்கள் உள்ளன என்ற தகவல் ஒழுங்காக இல்லை. ஆனால் எமக்கு கிடைத் துள்ள தகவல்களின்படி நாட்டில் 10343 விஹாரைகள் உள்ளன. அதன்படி 1375 பௌத்தர்களுக்கு ஒரு விஹாரை எனலாம். 5035 இந்து கோயில்கள் உள்ளன. 507 இந்துக்களுக்கு ஒரு கோயில் எனலாம். 2000க்கும் மேற்பட்ட பள்ளிவாசல்கள் உள்ளன. 983 முஸ்லிம்களுக்கு ஒரு பள்ளிவாசல் உள்ளது. கிறிஸ்தவ ஆலயங்கள் 1250 பதியப்பட்டுள்ளன. பதியப்படா மல் ஆயிரக்கணக்கில் உள்ளன. 1100 கிறிஸ்தவர்களுக்கு ஒரு ஆல யம் உள்ளது.

இதிலிருந்து எந்த மதத்தினருக்கு அநீதி உள்ளது என்பதனை புரிந்து கொள்ளமுடியும் பெரும்பான் மை யான பௌத்த மதத் தினருக்கே அதிக அநீதி உள்ளது. எனவே இனி மேலும் எம்மால் பொறுத் துக் கொண்டி ருக்க முடி யாது. எமது பொறு மையை சோதிக்க வேண்டாம். உடனடியாக இது சிங்கள பௌத்த நாடு என் பதனை ஏற்றுக்கொள்ளக்கூடிய பௌத்தர்களின் உரிமைகளுக் காக வேலை செய்யக்கூடிய முது கெலும்புள்ள ஒருவரை புத்த சாசன அமைச்சராக நியமிக்கவேண்டும் என கோருகிறோம் என அத்தேஞான சார தேரர் தெரிவித் துள்ளார். (செ-1)

## 'தமிழினி விடு...

யிருந்த இவர் படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளில் பின் னர் புனர்வாழ்வுப் பயிற்சிக்காக பூந் தோட்டம் புனர்வாழ்வுப் பயிற்சி மையத்திற்கு அனுப்பப்பட்டிருந் தார்.

புனர்வாழ்வுப் பயிற்சிகளை முடித்துக் கொண்டதையடுத்து தமிழினி அவருடைய தாயாராகிய சின்னம்மா சிவசுப்பிரமணியத்திடம் கையளிக்கப்பட்டதாகப் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் தர்சன ஹெட்டியராச்சி தெரிவித்துள்ளார்.

வடமாகாணசபைத் தேர்தலில் அரசாங்க கட்சியின் வேட்பாளரா கத் தமிழினி போட்டியிடவுள்ளார் என்றும் அதற்கு முன்னதாக அவர் விடுதலை செய்யப்படுவார் என்றும் தகவல்கள் வெளியாகியிருந்தன.

வரும் செப்டம்பர் மாதம் வடமா காண சபைக்கான தேர்தல் நடை பெறும் என்று அரசாங்கம் திட்டவட்ட மாக அறிவித்துள்ள நிலையில் தமிழினி இப்போது விடுதலை செய் யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம் பரந்தன் பிரதேசத்தைச் சேர்ந்த சிவசுப்பிர மணியம் சிவகாமி ஆகிய தமிழினி வடமாகாண சபைக்கான தேர்தலில் போட்டியிடுவாரா? இல்லையா என்பது குறித்த தகவல்களை உறுதி செய்ய முடியவில்லை. இது குறித்த தகவல்களை உறுதி செய்ய முடிய பில்லை. இது குறித்து தமிழினியும் இதுவரையில் வாய்திறக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-1)


**வேலையாட்கள் தேவை**

லைடன் புடைவையகத்திற்கு வேலையாட்கள் (பெண்கள்) தேவை. பழக விரும்புபவர்கள் முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்க்து. தகுந்த சம்பளம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:

**லைடன் புடைவையகம்**

410. ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.

தொ.பே: 021 222 2381 (சி-3772)

**உடனடி வேலைவாய்ப்பு**

DMI அமெரிக்க நிறுவனத்தின் இலங்கையின் வடக்கில் ஆரம்பிக்கவிருக்கும் புதிய கிளைகளுக்கு Training Manager, Ast.Manager, Supervisior, Distributor தேவை.

பயிற்சியளிக்கப்பட்டு நிரந்தர தொழில் வாய்ப்பும், வெளிநாட்டு வேலைவாய்ப்பும் வழங்கப்படும்

- பயிற்சியின் போது (12,000/= - 15,000/=)
- Age 18 - 35
- பயிற்சியின் பின் 50,000/= இற்கு மேல்
- தங்குமிடம் இலவசம்
- தகுதி O/L, A/L

(C-3774)

தொடர்பு :- 0777009820, 0778920777, 0217201521

**For Sale**

*Used Computers, Projector, Computer Tables, Lecture Hall Chairs, Generator, White Board, A/C, Cables, Cisco Routers & Switches.*

*For Further Details Please Contact 0771326512*

**மேலதிக ஆளணியினர், சர்வதேச தரத்திலான உள்ளக, வெளியக கணினி வலைப்பின்னல், மேம்படுத்தப்பட்ட உள்ளகக் கட்டமைப்பு உங்கள் "திசைகாட்டி" தற்போது நவீனமயப்படுத்தப்பட்டது!**

விரைவான தனித்துவமான சேவை

- கனடாவில் படிக்க, உழைக்க
  உணவு, இருப்பிடம், Ticket இலவசம் - சில நாட்களில் பயணம்.
- சைப்பிரசில் படிக்க, உழைக்க
  உணவு, இருப்பிடம், Ticket இலவசம் - இலட்ச ரூபாய் சம்பாதிக்கலாம்.
- அவுஸ்திரேலியாவில் படிக்க, உழைக்க IELTS தேவையில்லை

எல்லா நாடுகளுக்கும் விரும்பியவாறு போய்வர சட்ட ஆலோசனை

சனி, ஞாயிறு உட்பட 7 நாட்களும் திறந்திருக்கும்

(C-3783)

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட்

175, பருத்தித்துறை வீதி,

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

தொ.பே:— 0212219016, 0215689090




இப்பத்திரிகை வலம்புரி அன்.கோர் ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.06.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org